
# மண்ணின் முனகல்

சிறுகதைகள்

கே.ஆர்.டேவிட்



ப

கு. வி

# மண்ணின் முனகல்

சிறுகதைகள்

கே. ஆர். டேவிட்

விலை 200/-

கு. வி. அச்சக வெளியீடு

கு. வி. அச்சகம்
58, கிறீன் லேன், கொழும்பு - 13.
தொலைபேசி: 011-2330723, 011-4877984

# சமர்ப்பணம்



## திருமதி. மதலேனம் வைத்தியலம்பிள்ளை

எனது குடும்ப நலனுக்காக
தனது சுகத்தை அர்ப்பணித்த
எனது மாமிக்கு இந்நூல் சமர்ப்பணம்

---

## வெளியீட்டு விபரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | ' மண்ணில் முனகல் ' |
| வகை | : | சிறுகதைகள் |
| ஆசிரியர் | : | திரு. கே. ஆர். டேவிட் |
| பதிப்பு | : | கு.வி. அச்சகம் |
| வெளியீடு | : | கு.வி. அச்சகம் |
| | | 58, கிறீன் லேன், கொழும்பு - 13. |
| பதிப்புரிமை | : | திரு. கே. ஆர். டேவிட் |
| முதலாம் பதிப்பு | : | 2012 செப்டெம்பர் |
| தாள் | : | 21 cm X 14.85 cm |
| பக்கங்கள் | : | 144 |
| விலை | : | 200/- |

# அணிந்துரை

கல்வியை வறுமைக்குத் தீனியாக்கிவிடாத
மன ஓர்மங்கொண்ட மனிதர்களின் கதைகள்

முற்போக்கு இலக்கியத் தளத்தில் கே.ஆர்.டேவிட் அவர்கள் எங்களுக்கு முன்னோடியாக விளங்கியவர் கருத்துரையை விடவும் வேறு பல இடங்களிலிருந்து இந்நூலுக்கு மதிப்புச் சேர்க்கும் அணிந்துரையைப் பெற்று அலங்கரித்திருக்க இயலும். என்னை அணுகியதற்கு எமக்கிடையேயான ஒரு தொடர்ச்சி காரணமாக அமைந்திருக்க இடமுள்ளதாகக் கருதுகிறேன்.

ஆசிரியராக முதல் நியமனம் பெற்று எனக்கான சமூகவியல் கற்றலை விரிந்த தளங்களில் வழங்கிய பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயத்தில் நான் பணியாற்ற செல்வதற்கு ஆறு வருடங்களின் முன்னர் கே.ஆர்.டேவிட் தனது ஆசிரிய நியமனத்தை முதன்முதலில் பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயத்தில் பெற்றவர். நான் அங்கு செல்வதற்கு இரு வருடங்களின் முன்னதாக, 1975 இல் மூதூர் புனித அந்தோனியார் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

நான் அதிகம் ஊடாடிய வடக்கு பூண்டுலோயாத் தோட்டத்தில் முன்னதாக நடந்த உண்மைச் சம்பவம் ஒன்றை அடிப்படையாக வைத்து அவர் எழுதிய "வரலாறு அவளைத் தோற்றுவிட்டது" எனும் நாவல் அவரைத் தமிழ்கூறும் நல்லுலகு கவனங்கொள்ளக் களம் அமைத்திருந்தது. ஏற்கனவே சிறுகதைகளை எழுதி எழுத்துலகில் அறிமுகம் பெற்றபோதிலும், முதல் நூலாக இந்த நாவல் வெளிவந்தமை கவனிப்புக்குரியது. அக்காலத்தில் இந்த நாவல் பெரிதும் பேசப்பட்ட ஒன்று. அவ்வாறு பிரபலமடைந்த ஒரு ஆசிரியர் எனது பாடசாலையில் இரண்டொரு ஆண்டுகளின் முன் பணியாற்றினார் என்பதற்கப்பால் அவரை எனக்குத் தொடர்புகொள்ள இயலவில்லை.

"சிறைக்கதவுகள் திறந்து கிடக்கின்றன" என்ற இவரது சிறுகதை 1978இல் சிந்தாமணி வாராந்தப் பத்திரிகையில் வெளிவந்திருந்தது. ஏற்கனவே அறிந்த பிரபலமிக்க படைப்பாளியின் எழுத்தாக்கம் என்பதைவிட, அதன் பேசுபொருளும் எடுத்துரைப்பு முறையும் இதயத்தைப் பிழிவதாக அமைந்து அவரைத் தேடிப்படிக்கும்

கருத்தியலும் உணர்வலைகளும் செழுமைப்பட்டிருக்கிறது. இத்தொகுப்பில் விரிந்து பரந்து இலங்கை மண்ணின் பல்வேறு களங்களும் அதன் மாந்தர்களும் விசனம் கொள்ள வாய்ப்பிருப்பது அவரது கலையுள்ளம் உருக்கு உரமேறிய கருத்தியல் தளத்தில் அடித்தளமிடப்பட்டது என்பதோடு தொடர்புபட்டதாகும்.

மலையகத்திலும் மூதூரிலும் ஆசிரியராகப் பணியாற்றியவர் சொந்தமண் திரும்பிய பின்னர் உதவிக் கல்விப் பணிப்பாளராக இயங்கியுள்ளார். யுத்த அனர்த்தங்களின் பேறாக புத்தளத்தில் புலம்பெயர் வாழ்வை அனுபவித்துள்ளார். இவ்வகையில், வடக்கு - கிழக்கு - மலையகம் - மேற்கு எனப்பரந்துபட்ட களங்களின் மக்களது பிரச்சினைகளை அவையவற்றுக்கான வாழ்வனுபவங்கள் வாயிலாக வெளிப்படுத்த இவருக்கு இயலுமாயிருப்பது கவனிப்புக்குரியது.

ஒவ்வொரு மண்வாசனையும் எவ்வாறு கலைவடிவம் பெறுகிறது என்பது பிரதான அம்சமாகும். வெறுமனே தன் உணர்வைத் தொட்ட சம்பவங்களைக் கதையாக்கிவிட்டால் நல்ல படைப்பாளியாகிவிட இயலாது. சம்பவங்கள் கலைத்துவச் செழுமைபெறும் வண்ணம் செப்பனிடப்பட்டுப் பட்டை தீட்டித் தரும்போது மட்டுமே படிப்பவர் உள்ளத்தில் எதிர்வலைகள் ஏற்பட்டு அவருக்கான அனுபவவார்ப்பாக மடைமாற்றம் பெற இயலும். இல்லையெனில் வெறும் செய்திக் குவியலாகி அர்த்தமிழக்க நேரும். முற்போக்குப் படைப்பாளிகள் கலைத்துவ உணர்வின்றிப் பிரசாரங்களையே எழுத்தாக்கம் செய்கின்றனர் என்ற குற்றச்சாட்டை முறியடிக்கும் வகையிலானவை இவரது சிறுகதைகள், சம்பவங்களின் நீட்சியாக தொடர்வது போன்றிருக்கும் கதைகூறலை அழகியல் தருணத்துக்குரிய வாய்ப்பின் வாயிலாக கலைப்படைப்பாக்கும் கே.ஆர்.டேவிட்டின் நுட்பத்துக்கு "ஊர்வலம் செல்கிறது" கதையை உதாரணங்காட்ட இயலும். சொந்தச் சகோதரி கணவனோடு விபத்தில் மாண்டுபோய்க் கையறு நிலையில் அபயப் பொருளாகிவிட்ட மருமகளைப் பைத்தியக்காரியாக அலையவிட்டு அவர்களது சொத்தை அபகரித்துக் கேடான வாழ்வுக்கு உதாரணமான ஒருவன், அந்தப் பைத்தியக்காரியின் மரண ஊர்வலத்தையும் டாம்பீகமாய் நடாத்தும் போலி, இவற்றைக் கூறிவளரும் கதையின் முடிவில் "பொன்னியின் ஊர்வலம் தொடர்கிறது. கந்தையாவும் செல்கிறார். அவர் கண்களில் நீர் எப்படி வந்தது. அது

சனசமூக நிலையத்தால்" புடமிட்டு வளர்க்கப்பட்ட வராவார். இச்சனசமூக நிலையத்தின் இயக்கநிலை முன்னணி ஆளுமைகளான மு.சின்னையா, க.சுப்பையா, ப.கிருஷ்ணன், வ.நடராசா போன்றோர் தனக்கான பொதுவுடமைச் சிந்தனையை உரமேற்றியது குறித்து டேவிட் அவ்வப்போதான கலந்துரையாடல் களில் வலியுறுத்தத் தவறுவதில்லை. இவர்களூடாக ஏற்பட்ட முற்போக்கு இலக்கிய கர்த்தாக்களுடனான தொடர்பு இவரது படைப்பாளுமையை உணர்த்தி எழுத்துலகுக்கு ஆற்றுப்படுத்தி யிருக்கிறது.

இவரது தொடர்ச்சியாக என்னை உணர்வது குறித்து மேலே பேசியிருந்தேன். எனது எழுத்து முதன்முதலில் அச்சேறுவதற்கு மோகனதாஸ் சனசமூக நிலையம் காரணமாயிருந்தது. அதன் ஒரு மலர் வெளியீட்டுக்கென தோழர் க.சுப்பையா, அதிகம் வாசித்துக் கொண்டு தீவிரமாக இயக்கிக் கொண்டிருக்கும் இளைஞன் என்கிற வகையில் என்னிடம் கட்டுரை ஒன்றை எழுதித்தருமாறு கேட்டிருந்தார். ஒரு மாணவன் நிலைப்பட்டு இயங்கியல் - பொருள் முதல்வாதத்தைப் புரிந்து கொள்வதான கட்டுரையை எழுதிக் கொடுத்துவிட்டு, அதெல்லாம் எங்கே வெளிவரப் போகிறது என்ற அசட்டையுண்வோடு இருந்துவிட்டேன். ஏதோ காரணங்களால் அந்த மலர் வெளிவரவில்லை(அதானே!) எவரையும் போல சுப்பையாத் தோழர் இருந்துவிடவில்லை: என்னிடம் வாங்கிய கட்டுரையைக் கட்சிப் பத்திரிகையான "தொழிலாளி"யில் பிரசுரித்துவிட்டார். இதனால் வெளிப்பட்ட பிரச்சினைகள் மிக நல்ல படிப்பினைகளாக அமைந்தமை வேறு விடயம். தொடர்ந்து நான் எழுதும் பொறுப்புணர்வை விதைத்துவிட்டது மோகனதாஸ் சனசமூக நிலையம் என்பது வலியுறுத்த அவசியமான சங்கதி.

அந்த நிறுவனத்தின் சமூக அக்கறையும் பொறுப்புணர்வும் ஒரு ஆளுமை வாயிலாக என்னையும் இயக்கியிருக்கிறது எனும் இந்தப் பதிவுக்கு இங்கு அவசியமுள்ளதாகவே கருதுகிறேன். இப்படைப்புக்களின் ஆசிரியர், ஏதோ எழுத்தாற்றல் இருந்தது, எழுதிப் பேர் புகழ் பெற்றேன் என்ற உணர்வு நிலைப்பட்டு இக்கதைகளை வெளிப்படுத்தவில்லை. சமூக அவலங்கள் கண்டு கொதித்தெழுந்து போராடி மாற்றத்தைச் சமைத்துப் பொதுவுடமை அமைப்பைப் படைக்கும் வலுமைமிக்க அமைப்பாக்கமொன்றால் இவரது

ஆர்வத்தை ஏற்படுத்தியிருந்து. அந்தக் கதை இத்தொகுதியில் இடம்பெற்றிருக்கும் வகையில், அன்று எனது மனதை அதிரவைத்த கணங்களை மீண்டும் ஒருமுறை மீட்டிப் பார்க்க இயலுமாயிற்று.

என் புரிதல் மற்றும் ரசனைத்தேர்வில் கே.ஆர்.டேவிட் படைப்பின் உச்சங்களில் ஒன்றாகவும் "சிறைக்கதவுகள் திறந்து கிடக்கின்றன'' அமைந்துள்ளதாய்ப்படுகிறது. அவ்வாறுதான் அனைவருக்கும் அமையும் அவசியம் ஏதுமில்லை. அதைவிட வேறு சிறுகதைகளில் ஒன்றினை அவரது உன்னத பங்களிப்பாயும் விரல் விட்டெண்ணத்தக்கதாக தமிழ்ச் சிறுகதைகளில் ஒன்றாகவும் எண்ணத் தடையேதுமில்லை. ஆக, தமிழின் மிகச்சிறந்த சிறுகதைப் படைப்பாளிகளில் ஒருவராக கே.ஆர்.டேவிட் விளங்குகிறார் என்பது ஒருதலை.

சிறைக்கூடங்கள் சமூகத்தை சீர்செய்து விழுமியம் மிக்க வாழ்வை உறுதிப்படுத்தும் நிறுவனங்களல்ல என்பதைப் பின்னால் விரிவுபடுத்தி விவாதித்தவர்கள் சமூகமாற்ற அவசியப் பணிகளைத் தடுத்து அதிகாரத்துவமுறை நிலைபேறடைய ஏற்றதாக இயங்கியிருக்கிறார்கள் அத்தகைய விவாதப் பொருளாக இல்லாத காலத்தில், சமூக மாற்றத்துக்கான உந்துதலை வழங்குமாறு வாசகரை அதிர்வுக்குள்ளாக்கும் வகையில் படைப்பாக்கம் செய்யப்பட்டிருந்த சிறுகதை "சிறைக்கதவுகள் திறந்து கிடக்கின்றன.'' கஞ்சா சமூகச் சிதைவுகளை வளர்க்குமென எவரும் அறிவர். அதன் உற்பத்தி பெருகட்டும் என்பது ஆசிரியர் நோக்கமல்ல என்பதை எவரும் அறிவர். அபலையான ஒரு பெண்ணின் வாழ்வாதாரத்தை உத்தரவாதப்படுத்தாமல் தண்டனையால் சீர்படுத்துகிறோம் எனும் அதிகார அமைப்புக்கு சமூகச் சிதைவும் விளிம்புநிலையாய் இருக்கவேண்டும் என்ற உள்நோக்கம் உண்டு என்ற புரிதலின் வெளிப்பாடுதான் சிறைக்கூடம் என்பதனை அக்கதை ஏற்படுத்தும்.

அவரிடம் இந்த சமூக மாற்றக் கருத்தியலை வளர்த்தது அவர் பிறந்து வளர்ந்த மட்டுவில் மண்ணாகும். சாவகச்சேரியின் மட்டுவில் வடக்கில் இராயப்பு அருளம்மா தம்பதியினரின் மகனாக 07.07.1945 இல் பிறந்தவரான டேவிட், அங்கு இயங்கிய இடதுசாரி இயக்க வரலாற்றில் அழியாத் தடம்பதித்த "மட்டுவில் வடக்கு மானாவளை மோகனதாஸ்

அவருக்கே தெரியாது" என்று மட்டும் வரும். கந்தையாவின் கபடமே முழுதாய்க் கூறப்பட்டுவந்த நிலையில் இந்த வரிகளோடு படைப்பை முடித்தமையில் ஆசிரியரின் கலைத்துவம் வெளிப்பட்டுவிடுகிறது. வெறும் வில்லனாக ஒருவனைப் பலியாக்குவதைவிட, அவனுக்குள்ளும் இருக்கும் மனிதத்துவத்தைக் கொல்லும் சமூக அமைப்பின் கொடூரத்தைத் தகர்க்கும் தேவையை உணர்த்துவதாய் இக்கதை அமைகிறது.

முழுமையான சமூக மாற்றத்துக்கானதாய் அமையாத போதிலும், அதற்கான தேடலை ஏற்படுத்துவதும், சமூக அசைவியக்கம் வாயிலாக சிறு முன்னேற்றத்தை அருட்டுணர்வாக்க வல்லதாகவும் கல்வி அமைகிறது. இந்தப் படைப்பாளியுங்கூட சமூகப் புறக்கணிப்புகளையும் வறுமையையும் கல்வி வாயிலாகப் புறங்காணச் செய்தவர்தான். அவரைக் கட்டமைத்த மோகனதாஸ் சனசமூக நிலையம் கல்வி குறித்த மயக்கங்களுக்கு இடமளிக்காமல், அதன் சமூக அசைவியக்கப் பாத்திரத்தைப் புரிந்து கொண்டு இயங்கியதன் வாயிலாக மட்டுவிலின் முன்னேற்றத்தைக் கல்வியூடாக ஏற்படுத்தியிருந்தது. இதன் பின்னணியில் 1995இல் எழுதும் சிறுகதையில் விறகு சேர்த்து சயிக்கிளில் எடுத்து வந்து விற்கும் ஒரு தந்தை, மகனின் கல்விக்கு அளிக்கும் முக்கியத்துவத்தைக் காணவேண்டும். அந்தக் கடும் உழைப்பாளி கல்வி மீது அதீதமான நம்பிக்கை கொள்வது போன்ற தோற்றம் இருப்பினும், இது எவ்வகையிலும் அர்த்தமிழந்த கற்பனையல்ல. இந்த மன ஓர்மத்தோடு தமது உடலை வருத்திப் பிள்ளைகளைக் கல்வியில் மேம்படவைத்த பெற்றோர்கள் பலர் உள்ளனர். அத்தகைய ஒரு தந்தையூடாக "வறுமைக்கு கல்வி தீனியானால் அடுத்த தலைமுறை அடிமைப்பட்டுவிடும்" என்பது பேசப்படுவதைக் காண்கிறோம்.

அதேவேளை, கல்வியமைப்பில் உள்ள தவறுகள் இந்தக் கனவுகளைச் சிதைப்பதையும் ஆசிரியர் காட்டத் தவறவில்லை. பல்வேறு அவமானங்களைக் காணும்போது கல்வியில் சிறந்த வறியவன் ஒருவன் தனக்கு "நாய் மூளை" வேண்டும் என்று ஆசிரியரிடமே கூறும் அவலம் உள்ளதாய் எமது சமூகம் இருக்கிறது. விடைகளை வழங்கிவிட்டு வினாக்களைக் கொடுத்து தேர்வு செய்ய வாய்ப்பளித்துப் பட்டமளிப்பதாய்க் கல்வி இன்று உள்ளதேயன்றி,

கல்விக்கான முழுமைப் பரிமாணங்களோடு அது இல்லை என்பதை ஆசிரியர் உணர்த்தத் தவறவில்லை. சமூக அமைப்பு மாற்றத்துக்கும் கேடாக இருக்கும் கல்வி அமைப்பை மாற்றுவதும் ஒரு அவசியப்பணி எனும் புரிதல் கொள்ளும் அதேவேளை, அதனளவில் ஏற்படுத்தும் சமூக அசைவியக்கத்துக்கான பாத்திரத்தையும் வலியுறுத்தி, இவ்வகையில் இரு அம்சங்களையும் கவனங்கொள்வதன் தேவையை ஆசிரியர் உணர்த்துவது அழுத்தி வலியுறுத்த வேண்டிய அம்சமாகும்.

வறுமையைக் கடின உழைப்பினாலும் கல்வியினாலும் மாற்றமுனையும் உழைப்பாளர்களின் தன்மான உணர்வும் மனிதநேய மனப்பாங்குகளும் கிளர்ந்தெழுவனவாய் இக்கதைகள் அமைவன. வெறும் அடையாள அட்டைகளாக்கும் இந்த மண்ணில் எமது தந்தையர்களின் கல்லறைகள் வேண்டாம் எனத் திடமனம் கொள்ளும் மக்களுக்கான வீரத்தைப் பேசுவன இவை. மக்களைப் பிரிந்த புனிதர்களையோ, மாவீரர்களையோ, கல்வியாளாகளையோ கவனங் கொள்வதைவிட மக்கள் இன்றைய உலைக்களங்களில் எவ்வகையில் இயங்கினர் என்பதைப் பேசுவன இக்கதைகள். மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எமது மக்களின் வாழ்க்கைப் போராட்டங்களின் சிற்சில தருணங்களை வெளிச்சம் போட்டுக்காட்டும் இலக்கியப் படையலான இச்சிறுகதைத் தொகுதி கண்டிப்பாகத் தனக்கான தகுந்த அடையாளத்தைப் பெறும் என்பதை உறுதிபடக்கூறுவேன்!

**கலாநிதி.ந. இரவீந்திரன்**

**கொழும்பு**
**22.05.2012**

# எனதுரை

ஒரு சம்பவத்தின் உணர்வை அடியாக, அல்லது தனிமனித மனோநிலையை அடியாகக் கொண்டு ஒரு சிறுகதை உருப்பெறுகின்றது. இந்த உருவாக்கத்தில் நாம் தெரிவு செய்யும் கருவூலத்தை வளர்க்கின்ற பிற்புலம், பாத்திரத்தெரிவு, கதை கூறும் முறை, சமூகச் செய்தி, மொழிவளம் என்பனவும் உள்ளடங்கும்.

சம்பவங்களைக் கூர்ந்து நோக்கி, அதன் அடியாகவுள்ள மனிதப் பிறழ்வுகளை, அல்லது ஒத்திசைவுகளை உள்வாங்கும் வாண்மையும், சராசரியான பட்டறிவுச் செழுமையும் வாசிப்பு முயற்சியும், மொழிவாண்மையும் ஒருவரிடமிருந்து முயற்சியும் இருந்தால் அவர் எழுத்தாளராக முடியும். அத்தோடு பொருளாதாரச் செழுமையும் அமைந்திருந்தால் தனது படைப்புகளை நூலாக்கி ஒரு இலக்கியப் பதிவை இலகுவாக ஏற்படுத்திக் கொள்ளலாம்.

சமகாலத்தில் இப்படிப்பட்ட நிகழ்வுகளை நிறையவே காணமுடிகின்றது.

ஆனால், இந்த இலக்கியப் படைப்புகளை ஏன் படைக்க வேண்டும், இலக்கியப் படைப்புகளை யாருக்காகப் படைக்க வேண்டும், இலக்கியப் படைப்புகளின் தாக்கங்கள் எப்படி அமைய வேண்டும் என்பன போன்ற கேள்விகளை ஒரு படைப்பாளன் தனக்குள் தானே கேட்டு, அதற்கான விடைகளைக் காண்பதில் எடுக்கப்படும் முயற்சிகளிலும், முடிவுகளிலுந்தான் ஒரு படைப்பின் காத்திரம் தங்கியுள்ளது.

நான் இப்படிச் சிந்தித்திருக்கிறேன். அதற்கான முயற்சிகளையும், முடிவுகளையும் எடுத்திருக்கிறேன்.

தெரிவு செய்கின்ற கருப்பொருளில் உள்ளுறைந்திருக்கும் "அறத்துடிப்பின்" இலக்கையும், வலிமையையும், அந்த அறத்துடிப்பின் வியாபகத் தன்மையின் பரப்பெல்லைகளையும், அந்தப் பரப்பெல்லைகள் மக்கள் குழுமத்துள் என்னால், எதிர்பார்க்கப்படுகின்ற "இருப்பிளந்த மக்களின்" பிரசன்னத்தையும் தீர்மானித்துக் கொள்வதில் நான் மிகவும் அவதானமாகவே இருந்து வருகின்றேன்.

வாய்க்காலில் தண்ணீர் சலசலத்து ஓடுவது அழகியல் சார்ந்ததொரு நிகழ்வு. அதுவும் அவசியமானதுதான், அதேவேளை வாய்க்காலில் ஓடுகின்ற தண்ணீர் வரப்புகளை உடைக்காமல் ஓடவேண்டும் என்பதும், ஓடுகின்ற தண்ணீர் பயிர்களின் பாத்திகளை நிறைக்க வேண்டும் என்பதும் அழகியல் அவசியத்தைவிட மிக அவசியமான தென்பதைத்தான் நான் கூறுகின்றேன்.

தண்ணீரை இலக்கியமாகவும், வரப்புகளைக் கோட்பாடு களாகவும், பாத்திகளை இருப்பிழந்த மக்களாகவும் உருவகப்படுத்தி யுள்ளேன்.

எனது கோட்பாட்டுத் தளத்திற்கு முரணாக எழுந்துள்ள இலக்கியப் படைப்புகளை "இலக்கியங்கள் அல்ல" என்று வாதிடும் வக்கிர சிந்தனையும் என்னிடமில்லை என்பதையும் இங்கு கூறிவைப்பது அவசியமென எண்ணுகிறேன்.

இச் சிறுகதைத்தொகுதி வெளிவருவதற்குக் காரணமானவர் களையும் இங்கு கூறித்தான் ஆகவேண்டும். நண்பர்கள் திரு.ஐயாத்துரை கணேசன் திரு.அமிர்தலிங்கதுரை பிரதாபன் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய என் நெஞ்சுக்கு நெருக்கமான திரு.ந.இரவீந்திரன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள கதைகளை கணனிப்பதிவு செய்த செல்விகள் ரேவதி மோகனராஜா, சுமித்திரை ஜெகநாதன் ஆகியோருக்கும் எனது நன்றிகள். இந்நூலுக்கான அட்டைப் படத்தை தயாரித்துதவிய யாழ்ப்பாணம் பிறில்லியன்ற் ஸ்ருடியோ உரிமையாளர் திரு.எஸ்.வின்சென்ற் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

அன்புடன்
**கே. ஆர். டேவிட்**

"பூபாளம்"
பிடாரி கோவில் வீதி
ஆனைக்கோட்டை
யாழ்ப்பாணம், இலங்கை.

# பதிப்புரை

கு.வி அச்சகம் என்ற எமது நிறுவனத்தின் 36 ஆண்டுகால கல்வி வெளியீடுகள் எமது மாணவர் சமுதாயத்தின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் துணையாற்றி வந்துள்ளன. சகல மாணவர்களும் எமது நூலை வாங்கிப் படிப்பதற்கு ஏதுவாக எமது நூல்களின் விலைகள் நிதானமாக நிர்ணயிக்கப்படுகின்றன. வெறுமனே வணிக நோக்கு மாத்திரமன்றிக் கல்விச் சேவை செய்யும் நோக்கிலும் நாம் இதுவரை காலமும் பணியாற்றிவந்துள்ளோம். மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் புத்தக விற்பனை நிலைய உரிமையாளர்கள் கல்வி நிறுவனத்தினர் ஆகியோர் எமது சேவைக்குப் பெரும் ஆதரவை நல்கி வந்துள்ளார்கள். இதில் சகல மட்டங்களிலும் பரஸ்பர நன்மைகள் கிடைத்து வருகின்றன.

கல்வி வெளியீடுகளோடு நின்று விடாமல் கலை, இலக்கியப் படைப்புகளையும் வெளியிடுவதன் மூலம் படைப்பாளிகளுக்கும் கலை இலக்கிய நூல்களைப் படித்து மகிழ்வோருக்கும் இன்னொரு தளத்தில் எமது பணியை மேற்கொள்ளலாம் என்று நாம் முடிவுசெய்துள்ளோம். இதன் முதற் கட்டமாக சிறுகதை இலக்கியத் துறையில் நீண்டகாலம் ஈடுபட்டுத் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்திருக்கும் திரு.கே.ஆர். டேவிட் அவர்களின் சிறுகதைத் தொகுப்புக்கள் சிலவற்றை வெளியிட முன்வந்துள்ளோம்.

எமது கல்வி வெளியீடுகள் எவ்வாறு கல்வித் துறைக்குச் சேவையாற்றி வருகின்றனவோ அதேபோன்று கலை, இலக்கியத் துறைக்கும் எமது வெளியீடுகள் மூலம் எம்மால் முடிந்தவரை ஆதரவு வழங்குவதே எமது நோக்கமாகும். இதற்குப் படைப்பாளிகளும் கலை, இலக்கியத்தை நுகர்வோரும் தமது ஆதரவை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு.கே.ஆர். டேவிட் அவர்களின் சிறுகதைத் தொகுப்பினை முதன் முதலாக நாம் வெளியிடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறோம். மேலும் சிறந்த தமிழ் இலக்கியப் படைப்பாளிகளின் நூல்களையும் சிறிய அளவில் வெளியிட்டு சகல தரப்பினருக்கும் எம்மால் முடிந்தவரை ஆதரவுதர நாம் முயற்சிக்கிறோம்.

திரு.கே.ஆர். டேவிட் அவர்களின் இச்சிறுகதைத் தொகுப்புக்கள் நிச்சயம் சிறந்த வரவேற்பைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

- நன்றி - **-பதிப்பாளர்-**

# உள்ளே


1. ஊர்வலம் செல்கிறது 01

2. கஸ்தூரி 08

3. இதயங்கள் கரைகின்றன 19

4. அதிர்வு 26

5. பாண் போறணை 34

6. உணர்வுகள் கட்டுடைத்தால் 53

7. மிசின் பெட்டி 63

8. நாய் மூளை 73

9. சிறைக் கதவுகள் திறந்து கிடக்கின்றன 86

10. கண்ணீர் கொந்தளிக்கும் 99

11. மண்ணின் முனகல் 108

12. நான் கேவலமானவன் அல்ல 119

# 1

# ஊர்வலம் செல்கிறது!

விண்ணதிரும் வெடிகள் வெடித்து - அங்கு குழுமி நின்ற மனித உள்ளங்களை ஒரு நிமிட அதிர்ச்சிக்குள்ளாக்கி நிலை தளரச் செய்து விட்டு மறைந்து போய் விடுகின்றன. தொடர்ந்து பல வெடிகள்... கிட்டத்தட்ட நூறு யார் நீளமுள்ள அத்தப் பிரேத ஊர்வலம் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

மலர் வளையங்களால் அலங்கரிக்கப்பட்ட அந்த விலை உயர்ந்த சவப்பெட்டிக்குள் பொன்னி பிணமாக மடிந்து யோய்க் கிடக்கிறாள்.

எத்தனை புகழ் மொழிகள்... அனுதாபங்கள்... பொன்னி கடந்த கால வாழ்வு பற்றிய சிறப்புரைகள்... உயிரற்றுப் பிணமாகி விட்ட அவளுடைய காதுகளுக்கு இவைகள் கேட்குமா...? தனக்கு இவைகள் கேட்கக் கூடாதென்றுதானோ என்னவோ - பிணமாகச் சாய்ந்து விட்டாள்.

அவள் உயிரோடிருந்த போது அவளை வெறுத்தவர்கள்... உறவிருந்தும் உறவென்று கூற மறுத்தவர்கள்... திரும்பிப் பார்க்க வெட்கப்பட்டவர்கள்... அவளையும் ஒரு பெண்ணாக மதிக்காதவர்கள்... வாய்பிட்டுக் கூற முடியாத வேதனைகளுக்

குள்ளாக்கியவர்... இன்று பலரும்... ஒரு முகப்பட்டு "அனுதாபம்" என்ற வரம்பிற்குட்பட்டு நின்று புகழ்ந்து முடித்து விட்டனர்.

இவ்வளவு பெரிய ஊர்வலத்தை நடாத்துகிறார்களே, அவள் என்ன பெரிய அரசியல் தலைவியா...? அல்லது பொது நலவாதியா... அல்லது யாருமே வாழ முடியாத பெரும் வாழ்வை வாழ்ந்து விட்டவளா...?

இவ்வளவுக்கும் அவள் ஒரு பைத்தியகாரி!

பைத்தியகாரி பொன்னி என்று கூறினால் அந்த ஊரில் தெரியாதவர்களே இருக்க முடியாது.

திரண்டு, சுருண்டு முறுக்கேறி கழுத்து வரை நீண்டிருக்கும் தலைமயிர்... இன்றைய நாகரீக மங்கையரைப் போன்று... இதை யாரும் நாகரீகமாகக் கொள்ளவில்லை! ஏனென்றால் அவள் ஒரு பைத்தியம்...! கறுப்பையே தனது நிறமாகக் கட்டுப்படுத்த முடியாமல் தோல்வியை ஒப்புக் கொண்ட நிலையில் இருக்கும் ஒரு சீலை ஆண்களைப் போல் கட்டி இருப்பாள். கறுத்த தளதளப்பான உடல்...

"கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்ட பொருள்" இப்படி அவளது உடையையும், உடலையும் ஒப்பிட்டுக் கூறி விடலாம்!

இந்த நிலையிற்றான் பொன்னியை ஊரிற் காணலாம்.

அவளை ஒரு முறை பார்த்தவர்கள் இரண்டாந்த தடவையும் பார்க்கத் தான் செய்வார்கள்.

நீர்க்குமிழி போல இவளுடைய வாழ்க்கையில் வந்து போன 'கதாநாயகர்கள்' அனந்தம்.

சில நாட்களுக்கு முன்பு...

ஊரின் சந்தியிலிருந்து பட்டினம் செல்லும் வீதியிற் கிட்டத்தட்ட அரை மைல் தூரத்தில் ஒரு சந்தி. இந்தச் சந்தியை மருவினாற் போல் ஒரு வைரவ கோயில். அதோடு ஒரு தங்கு மடமும் காணப்படும்... பொன்னி வந்து கொண்டிருக்கும் போது அந்த மடத்தில்

“சீட்டு“ விளையாடிக் கொண்டிருந்த சில முரடர்கள் அவள் கையைப் பிடித்திழுத்து...? ...!... இப்படிப்பட்ட...

உணர்ச்சியற்ற மரக்கட்டையாகி விட்ட அவளால் அந்தக் “கையாலாகாதவர்களின்“ ஒருவரின் பெயரைக் கூட கூறிவிட அவளுக்குச் சக்தியோ சிந்தனையோ இல்லை.

இவளைப் பற்றிய பேச்சுக்கள் சர்வ சாதாரணமாகி விட்டாலும் இவளுடைய கடந்த கால வாழ்வின் சிறப்புப் பற்றிய விசயம் அந்தரங்கமாகவே இருந்து கொண்டு வந்தது. உண்மையை அறியாதவர்கள் இல்லாமலில்லை. அவர்களுக்கு உணர்ச்சியும் இல்லாமலில்லை...

அதை வெளியில் கூறி விட பயந்தாள் காரணம் பொன்னியின் கடந்த காலு வாழ்வு பற்றியோ சொத்துக்கள் பற்றியோ யாரும் பேசக் கூடாதென்பது கந்தையாவின் தனிக்கட்டளை! மீறியவர்கள் ஏதோ ஒரு வகையில் தண்டிக்கப்படுவர் - தண்டிக்கப்பட்டுள்ளனர். கிராமத்தில் கந்தையா தான் பெரும் பணக்காரர். சிறப்புப் பெயரால் கூட அழைப்பார்கள். சர்வ வல்லமை மிக்கவரெனப் பெயர் பெற்றவர்.

கந்தையாவின் தங்கை மகள் தான் பொன்னி.

கந்தையாவிற்கு ஒரே ஒரு தங்கை தான் பூரணம்.

பூரணம் அழகானவள், குணமானவள் - சாதாரண அழகல்ல - தங்களுடைய அழகின் அந்தரங்கத்தை புரிந்து கொண்ட பெண்களே வர்ணிக்கும் அழகுடையவள்.

பூரணம் வசதியான வாலிபன் ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டாள். அழகுதான் அதற்குக் காரணம் என்ற கூறவும் வேண்டுமா? இயற்கையை அவள் வாழ்த்தினாள். ஏனென்றால் அவளைச் சீரும் சிறப்புமாக வாழ வழி வகுத்தது அந்த இயற்கைதான்.

அழகை மையமாக வைத்து உருவான பூரணத்தின் வாழ்வு அவளுடைய குணத்தால் பூரணம் பெற்றுக் கோபுரமாக மாறியது.

கந்தையா பூரணத்தை அண்டியே வாழ்ந்தான். பூரணத்தின் வாழ்வு பூரணமாகி விட முத்திரையாக ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள். வைடூரியம் போலத் தோன்றிய அந்தக் குழந்தைக்குப் பொன்னரியம் என்று பெயர் சூட்டினாள்.

பைத்தியக்காரி பொன்னிக்கு பூரணம் தம்பதிகள் அன்போடு வைத்த பெயர் பொன்னரியம்.

பூரணம் தம்பதிகளின் பூரணத்தை நிலை நிறுத்த முதல் முத்திரையாகப் பிறந்த பொன்னரியமே கடைசி முத்திரையாகவும் அமைந்து விட்டாள். ஆவர்களுக்கு வேறு குழந்தைகளே பிறக்கவில்லை.

கால விருட்சத்தில் ஆண்டுகள் எத்தனையே மலர்கள் அரும்பாகி, மொட்டாகி மலராகி வாடிவதங்கிப் போய் விட்டன.

பொன்னரியம் கன்னி வாழ்வின் செழிப்பான பகுதியை நெருங்கி விட்டாள்.

அவளைத் தொட்டு விட வட்டமிட்ட "இளவட்டங்கள்" எத்தனை... கருவாகி, உருவாகி, உரம் பெற்ற அவர்கள் ஆசைகள், நப்பாசைகளாகிவிட... அவர்கள் அவளைப் பற்றிக் கூறி விட்ட வார்த்தைகள்... தூற்றல்கள் காதால் கேட்கத்தான் முடியுமா?

இவளை மையமாக வைத்து தங்களுக்கு ஆதரவு தேடிக் கொள்ள இவளை வாழ்த்தி விட்ட - புகழ்ந்த - ஆதரவு கொடுத்த உள்ளங்கள் தான் எத்தனை

இவ்வளவுக்கும் தன் பணம்தான் காரணமென்பதை உணர்ந்து விட அவளுடைய அறிவு வளர்ச்சியடைந்திருக்கவில்லை. செல்வத்தில் வளர்ந்த அவள் வெள்ளையுள்ளம் படைத்தவள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு நாள் "விபத்து" என்ற உருவில் வந்த காலன் பூரணம் தம்பதிகளைக் கொண்டு சென்று விட்டான். பூரணம் தம்பதிகள் சமாதியாகி விட பொன்னரியம் தனித்து நின்றாள்.

பொன்னரியத்தின் பொறுப்பு கந்தையாவிடம் கைமாறியது. கந்தையா பணக்காரக் கந்தையாவானான்!

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அவளுடைய கொள்ளையழகும் துயரத்தால் கொள்ளை போய் விட, நிதர்சனமற்ற நிலையில் கந்தையாவின் ஆதரவோடு ஏதோ வாழந்தாள்.

தனது நிலையையும் பணத்தையும் உணர்ந்த கந்தையா கடமை என்ற போர்வையில் தனது அதிகாரத்தால் பொன்னரியத்திற்குத் திருமணம் செய்து வைக்க முனைந்தான். திருமணமும் நடக்க வேண்டும். தனது அதிகாரமும் நிலைக்க வேண்டும் ஒரே கல்லில் இரு கனிகள்!

ஊரிலுள்ள ஒரு தரப்பட்ட பைத்தியங்களின் மீது தனது கண்ணோட்டத்தைச் செலுத்தினான்... நீண்ட நாள் சிந்தனையின் பின் அவனது பார்வை சாஸ்திரி கணவதிப்பிள்ளையின் மீது நிலைக்குத்தி நின்றது.

சாஸ்திரி கணபதிப்பிள்ளைக்கு வாழ்க்கையில் நடுப்பகுதியை தாண்டி விட்ட வயது காலத்தால் நரைத்த தலைமயிர் உரம் படிந்த தேகம் அந்தத் தேகத்தில் கடவுள் பக்தியை எடுத்துக் காட்டும் திருநீற்றுக்கீறுகள் கையிலே சகல ஏட்டுச் சுவடிகள் சகிதம் இவரைக் காணலாம்.

கணபதிப்பிள்ளை முன்பே திருமணமானவன். திருமணமாகி முதலாம் வருடமே அவள் அவனை விட்டுப் பிரிந்து பழைய புதிய உறவுகளோடு உள்ளூர் வைத்தியசாலையொன்றில் பணிபுரிந்து கொண்டிருக்கிறான்.

கந்தையாவின் முயற்சியினால் சாஸ்திரி கணபதிப்பிள்ளை மணமகனாக நிர்ணயிக்கப்பட்டு முடிவும் செய்யப்பட்டு விட்டது.

பலரும் புடை சூழ மேளங் கொட்ட வாழ்த்தொலிகள் காதைப் பிளக்க ஒரே மகள் மாங்கல்யம் தாங்கிய கழுத்துடன் மணமகளாய்

மணமகனோடு மனைமகளாய் ஊர் வலம் வரும் காட்சியைக் கடண்டுவிட பூரண தம்பதிகள் கண்டுவிட்ட கனவுகள் கனவுகளாய்ப் போய் விட,

பதிவுத் திருமணமாகக் காரியாலயத்தில் திருமணம் நடந்தது!

மனித வர்க்கத்துக்காக மனித வர்க்கத்தால் உருவாக்கப்பட்ட சட்டம் கந்தையாவின் பணத்தால் திரையிடப்பட அதே சட்டம் பொன்னரியத்தையும் கணபதிப்பிள்ளையையும் மணமக்களாக்கி விட்டு மௌனமாகி விட்டது.

உணர்ச்சியற்ற வண்டு அவன் புத்தம் புதுமலர் அவள் இயற்கைக்கு மீறிய தொடர்பு சட்டம் செய்து வைத்த பெரும் நற்கைங்கரியம்!

தாய் தந்தையாரின் பிரிவு விருப்பற்ற திருமணம், தெளிந்த நீரோடையாக இருந்த அவள் உள்ளத்தில் இரு பெரும் பாறாங்கற்கள்! சிந்தித்தாள் நிதர்சனமற்ற அவளது சிந்தனை தொடர்ந்தது.

கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் சென்றிருக்கும், கணபதிப்பிள்ளை பொன்னரியத்தை விட்டுப் பிரிந்து கோயிலுக்கு வந்து விட்டான்.

பொன்னரியம் பொன்னியாகி மீண்டும் தனித்து நின்றாள்.

கடந்த ஆறு மாத காலத்தில் கண்டு விட்ட "மொட்டான புதிய அனுபவங்கள் அவளது உள்ளத்தோடு சங்கமித்து உள்ளத் தழும்பாகி மாறாத வேதனையாகப் பரிணமித்துப் போயிருந்தது.

சிந்தித்தாள்... "நிம்மதி கிடைக்காத" என்ற சிந்தித்தாள். இப்போது அந்த வெறும் சிந்தனையிலே நிம்மதியைக் கண்டாள்... குறிக்கோளற்ற சிந்தனைக்கு முடிவேற்படுமா?...

வெறுஞ் சிந்தனையோடு தன்னையறியாமலே நடந்தவள் இப்போது சூனியமான உள்ளத்தோடு நடந்தாள் அந்த நடை பயிற்சியாகி பழக்கமாகிவிட்டது.... தினமும் நடக்கிறாள்.

காலை ஊரிலிருந்து புறப்பட்டு வந்து பத்து மைல் தொலைவிலுள்ள அம்மன் கோயில் ஒன்றில் படத்திலிருக்கும் கணவனோடு இருந்து விட்டு திரும்பவும் நுணாவிலுக்கே வந்து விடுவாள் தினப்பழக்கம்!

உணர்ச்சியோடு இருந்த போது கணவனை வெறுத்தவள் உணர்ச்சியற்ற நிலையில் அவனைத் தேடிச் செல்கிறாள். இது பைத்தியக்காரச் செயலா?... அல்லது... இது தான் கணவன் மனைவி உறவா? இது தொடர்ந்தது.

நேற்றுப் பின்னேரம் கைதடிப் பாலத்தடியில் இறந்து கிடந்தாள் பொன்னி! உண்மைக்குத் திரை போடப்பட்டது. கௌரவத்தோடு பிண ஊர்வலம் சென்று கொண்டிருக்கிறது.

பொன்னியின் இறுதி யாத்திரையை மையமாக்கி சிறு பணச் செலவுடன் கந்தையா தனது யோக்கியத்தையும் "மருமகள்" என்ற உறவையும் கிராம மக்கள் மத்தியில் ஒப்புக்காக நிலை நிறுத்துகிறான்.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் பிண ஊர்வலம் சென்று கொண்டிருக்கின்றது. எல்லோருடைய தலைகளுக்கும் மேலாக...... பொன்னியின் சவப்பெட்டி அது கூடத் தெளிவாகத் தெரிகிறது.

மீண்டும் ஒரு பீரங்கி வெடி... சத்தம் ஓய்ந்து விடவில்லை தொடர்ந்து பல வெடிகள்... பொன்னியின் ஊர்வலம் தொடர்கிறது. கந்தையாவும் செல்கிறார். அவர் கண்களில் நீர் எப்படி வந்தது. அது அவருக்கே தெரியாது.

ஈழநாடு 02.02.1971

## 2

# கஸ்தூரி

'கஸ்தூரி... கூல்டிறிங்ஸ். கரைக்கத் தண்ணி வேணும்'

'............'

'கஸ்தூரி தண்ணி வேணும்... நேரம் போகுது, கெதியாய் எடுத்துக் கொண்டு வாருங்கோ'

'காது கேட்கிறதில்லையே... கஸ்தூரி?'

காது கேக்கும்...!'

'... தண்ணி வேணும்...'

நானென்ன வேலைக்காரியே' வழக்கம் போல் கஸ்தூரி தனது கோபவலையை பத்மராசா மீது வீசுகிறாள். கஸ்தூரி எல்லோருக்கும் நல்லவள், அடக்கமானவள், கெட்டிக்காரி. புத்மராசாவோடு மட்டும் எப்பவும் இப்படியே நடந்து கொள்கிறாள்.

பல மாணவர்களுக்கு மத்தியில் கஸ்தூரி இப்படிக் கூறி விட்டது பத்மராசாவுக்கு வெட்கமாகப் போய் விட்டது. மௌனியாகி தலையைக் கவிழ்ந்து கொள்கிறான். அவன் எந்த விஷயத்திலும் நாணலைப் போன்றவன்.

'எனக்கொருதரும் கட்டளை இட வேண்டாம்'

'நான் ஆருக்கும் கட்டளை இடயில்லை... நீங்கள் பெண்களுக்கு லீடர் எண்ட வகையிலை உங்களிட்டைச் சொன்னன்...

'எனக்குப் பிடிக்காதவை இருக்கிற கவுசிலை நான் இருக்கமாட்டன். எனக்கு லீடர் பதவி வேண்டாம் எண்டு சொன்னது இதுக்காகத் தான்... சேர் தான் விடாப்புடியாய் நிண்டவர்... தண்ணி எடுக்க என்னாலை ஏலாது...'

'...........'

'பணத்துக்குப் பயந்தவையளைத்தான் பணக்காரர் பய முறுத்தலாம். நாங்கள் ஏழையள் தான். ஆனால்...

பணக்காரருக்கு பயப்பிடமாட்டம்... என்ன பணம்... இடையிலை வந்தது தானே' எங்கோ உருவான பிரச்சினைக்கு புதுக் கொக்கியிட்டு 'திரைமறைவான' தொரு பிரச்சினையொடு இணைத்து அந்த மையத்தில் நின்று திரைமறைவான பிரச்சினையைத் திரைநீக்கம் செய்கிறாள் அவள்.

சக மாணவர்கள் மௌனமாக நிற்கின்றனர். கஸ்தூரியால் திரைநீக்கம் செய்யப்பட்ட பிரச்சனை அவளையும் அவனையும் பொறுத்தவரை பழசுப்பட்டது. அடிக்கடி அவளால் 'தூசு' தட்டப்படும் விஷயம் என்பது பத்மராசா உட்பட அதிக மாணவர்கள் அறிந்த உண்மை. பத்மராசா விஷயத்தைப் புரிந்து கொள்கிறான்.

'தகப்பன் குற்றவாளியெண்டால் மகனும் குற்றவாளியாகி விட முடியுமா கஸ்தூரி?' பத்மராசா வழக்கம் போல் நாணலாகிப் பேசுகிறான். அவனது முகத்தில் பிரதிபலித்த அத்தனை உணர்வுகளும் மறைந்து போக வேதனையில் அவன் உள்ளம் வலையில் சிக்கிய மீன் துடிப்பது போல் துடிப்பதை முகம் காட்டுகின்றது.

'தகப்பன்ரை உடல்லை ஓடுற இரத்தந்தானே மகனிலையும் ஓடும்'

'அப்பிடியெண்டால் கஸ்தூரி என்ரை உடல்லை ஓடுற இரத்தந்தானே உங்களிலையும் ஓடுது!'

'அதுதானே இல்லையெண்டு எப்பவோ முடிவாயப் போச்சு'

'இரத்த உறவை இல்லையெண்டு சொல்லுறியளா?'

'என்னைப் பொறுத்தவரை அந்த உறவு இல்லையெண்டு முடிவாய்ப் போச்சு'

'கறுப்புக்கு வெள்ளையடிக்கலாம் கஸ்தூரி. இவருக்கு வெள்ளையடிக்கலாமே?.,.'

'அப்பிடியெண்டால்...'

'எத்தனையோ வருஷங்களுக்கு முன்னாலை எப்பிடியோ நடந்து போனதாகக் கூறப்படும் ஒரு பிரச்சினை... இப்பவும் நடக்கிற சம்பவங்களுக்கு அது தான் காரணம் என்று நீங்கள் நினைக்கிறது அர்த்தமில்லாதது.'

'செய்தவைக்கு அந்த அர்த்தம் மறந்து போகலாம். மறைந்தும் போகலாம். அதால் பாதிக்கப்பட்டு கஸ்டப்படுகிற எங்களாலை அந்த அர்த்தத்தை மறக்கவோ, மறைக்கவோ முடியுமா?'

'எலும்பில்லாத நாக்குத் தானே! எப்படியும் கதைக்கலாம்!'

'எனக்கு மட்டும் தான் எலும்பில்லையா?

இருவருக்குமிடையில் சாதாரணமாக எழுந்த பிரச்சினை மிகவும் பரந்த அளவில் பர்ணமித்து குடும்பப் பிரச்சினையோடு சங்கமித்து அந்த இடத்திலேயே நங்கூரம் பாய்ச்சி நிற்கின்றது.

'என்ன பத்மராசா... இந்த நேரத்திலையும் சண்டையே... நீங்கள் எல்லாம் வெளியிலை போங்கோ' வெளியே நின்ற இல்ல ஆசிரியர் உள்ளே வந்து பிற மாணவர்களை வெளியேற்றுகிறார்.

'என்ன விஷயம் கஸ்தூரி?

'இல்லைச்சேர் கூல்டிறிங்ஸ் கரைக்க என்னைத் தண்ணி கொண்டு வரட்டாம். ஒரு நாய் சொன்னால் கூட நான் செய்வன் சேர்' கஸ்தூரியின் கண்களில் கண்ணீர் பனிக்கிறது.

'................'

'இவர் எனக்கென்ன சொல்றது'

'ஏன் கஸ்தூரி இந்த விளையாட்டுப் போட்டி ஆருக்காக நடக்கிது? ஆசிரியர்மாருக்கோ உங்களைப் போல் மாணவருக்காகத்தான் நடத்தப்படுகின்றது. அதிலையும் பெரிய வகுப்பு மாணவர் நீங்கள், கவுஸ்லீடர்மார்... பொறுப்பில்லாமல் நடக்கலாமே?... நீங்கள் இரண்டு பேரும் பொறுப்புள்ளவர்களெண்டு தானே லீடராய் தெரிஞ்சது' விளையாட்டுப் போட்டியை திறம்பட நடத்தி முதலாவதாக வந்தால் அதிலை ஆருக்குப் பெருமை?... அதிலையும் பத்மராசா ஆர்... உங்கடை அண்ணன்...! குடும்பப் பிரச்சினை பழைய தலைமுறையோடை மறைந்து போகட்டு... இப்ப உங்கடை தலைமுறை... படிக்கிற நீங்கள் ஒற்றுமையாய் இருங்கோ...'

'சேர் நீங்கள் விஷயம் தெரியாமல் கதைக்கிறியள்'

'என்ன சொல்லு கஸ்தூரி'

"இது வருடம் ஒருக்காவாற விளையாட்டுப் போட்டி தானே!"

'ஓம்...'

'நான் பல மாணவிகளுக்கு முன்னாலை கொடி பிடிச்சு தலைவியாய் போறதைச் காண என்னை பெத்தவர்களுக்கு ஆ சையிருக்காதே?'

"கண்டிப்பாக இருக்கும்... வரலாம் தானே..."

"வரலாம் சேர் எப்பிடி வாறது...!...?"

"ஏன்..."

"... வீட்டிலைதான் கந்தல் துணியோடை நிக்கலாம்... இஞ்சையும் அப்பிடி வரலாமே...!...? என்ன சேர்... இது உங்களுக்குத் தெரியுமா...? இது ஆராலே வந்தது... இவையின்ரை குடும்பத்தாலை வந்தது..." அவளது உள்ள உணர்வுகள் சிறகடித்துப் , பறக்க வாய் விட்டு அழுகின்றாள். அவளது தாயும் தகப்பனும் இருபாணங்களாகி அவனது உள்ளத்தைக் குத்திக் கிளித்து விட, இரத்தஞ் சொட்டுகின்ற தன் இதயத்தை வெளியே எடுத்து ஆசிரியர் முன் வைக்கின்றாள்.

"தாய் தகப்பன் பிழை விட்டிருக்கலாம்... அதுக்காக பத்மராசாவை வெறுக்கிறது... முறையில்லை..." தராசின் நிறை காட்டு முள்ளின் நிலையில் நின்று பேசுகிறார் ஆசிரியர்.

"தாய் தகப்பன்ரை இரத்தம் தானே... இதுகும்..."

"அப்பிடிப் பார்த்தால் கஸ்தூரி எங்கடை உடலிலையும் அதே இரத்தம் தானே ஓடுது... ஒரு கொடிக்காய்கள் தானே"

"அந்த உறவு எப்போ விட்டுப் போச்சு... இரத்த பாசம் அதெல்லாம் வீண் கதை..."

"சரி எல்லாத்தையம் விடுங்கோ... இண்டைக்கு விளையாட்டுப் போட்டி முடியட்டு... பிறகு பாப்பம்... தண்ணி தானே வேணும்... நான் எடுத்து வாறன்..."

“நான் போறன் சேர்… உங்களுக்காகப் போறன்” கஸ்தூரி வாளியை எடுத்துக் கொண்டு பைப்பை நோக்கிப் போகிறாள்.

கஸ்தூரியும், பத்மராசாவும் இதே பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் கூடப் பிறந்த அண்ணன் தம்பியின் பிள்ளைகள் இருவரும் பத்மராசா அண்ணனின் பிள்ளை கஸ்தூரி தம்பியின் பிள்ளை. ஆரம்ப காலத்தில் அண்ணன் தம்பிக்குள் நடந்த சொத்துப் பங்கீட்டு பிரச்சினையில் அண்ணன் தம்பியை மோசடி செய்து அன்று பிரிந்த குடும்பங்கள் இன்றும் அப்படியே இருக்கின்றனவென்றும் மோசடியில் பெற்ற பயனைக் கொண்டு அண்ணன் பொருளாதாரத்தில் மிதந்ததாகவும் மோசடிக்குள்ளானதால் தம்பி வறுமைக் குள்ளானான் என்பதும் இப்பகுதியில் நிலவி வருகிற பொதுவான அபிப்பிராயம்.

இவை நடந்து பல ஆண்டுகள் சென்றாலும் கஸ்தூரிக் குடும்பத்தின் வறுமைக்கு இதையே காரணமாகக் கற்பித்துக் கூறி விட்டனர் பெற்றோர். வறுமையின் கொடுமையால் அதற்குக் காரணம் என்று கருதுகின்ற பத்மராசா குடும்பத்தினரை பழி தீர்த்துக் கொள்ள முனைகிறாள் கஸ்தூரி.

கஸ்தூரியின் வறுமையும் பத்மராசாவின் செல்வமும் அப்பட்டமான உண்மை!

இந்த இரு நிலைகளுக்குக் காரணம்…!...?

பாடம் சம்பந்தமான படங்கள் வந்து பாடசாலை மாணவர்கள் பார்க்கப் புறப்பட்டால் பத்மராசா முன் நிற்பான். கஸ்தூரி எப்படியோ நழுவி விடுவாள்!

காரணம் காசில்லை.

சுற்றுப் பிரயாணஞ் சென்றால் இதே நிலை!

மாணவர்கள் மத்தியில் சிலவோடு சம்பந்தமான எந்தப் பிரச்சினைகளிலும் இதே நிலை!

ஒவ்வொரு சம்பவங்களும் கஸ்தூரியின் மனதில் படிந்திருந்த வெறுப்பிற்கு வைச்சிரமாக அமைகின்றது.

கிட்டத்தட்ட மூன்று மணியளவில் 'ஒலிம்பிக்லைற்' ஏற்றப்பட்டு விளையாட்டுப் போட்டி ஆரம்பமாகின்றது. விளையாட்டு மைதானம் மிகச் சிறியதாக இருந்தாலும் விளையாட்டுப் போட்டி பெரிய கல்லூரி நிர்வாகத்திற்குச் சோடை போகாமல் நடக்கின்றது. அத்தனையும் விளையாட்டு ஆசிரியர் ஸ்ரெனியின் செயல்திறன்.

நீல இல்லம் நாற்பது புள்ளிகளை மேலதிகமாகப் பெற்று முதலாம் இடத்தை வகித்து வருகின்றது என்ற செய்தியை அறிவிப்பாளர் அறிவிக்கின்றனர். நீல இல்லத்தில கை தட்டல், சிரிப்பு பேச்சு இல்லத்தை நிரப்பி நிற்கிறது. இல்ல ஆசிரியருக்கு பெருமிதம் இருந்தாலும் உள்ளூரவைத்துக் கொண்டு சாதாரணமாக நிலையில் வாசலில் நிற்கிறார்

“சேர் வழக்கம் போல் இந்த முறையும் எங்கடை நீல இல்லம் தான் முதல்”

“நாற்பது புள்ளிகள் கூட அது எங்கடை தான் முதலாவது”

“உந்தப் பச்சை இல்லம் எங்களோடை போட்டி போட்டவை...”

“... ஏன் மஞ்சள் இல்லம்...”

“எல்லாம் முடியட்டு அவையோடை கதையிருக்கு...” உணர்ச்சி வேகத்திலை ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு அபிப்பிராயத்தைக் கூறுகின்றனர்.

ஆசிரியர் ஒரு சிரிப்பால் எல்லோருடைய பேச்சுக்களையும் சந்தற்பத்துக்கேற்றவாறு சமாளிக்கிறார்.

“சேர் அடுத்தது தடை ஓட்டமமாம்”

"நீங்களும் வேறை ஆர்..."

"நானும் தாமோதரமும்..."

"கவனமாக இருங்கோ..."

"இதையடுத்து மேற் பிரிவுக்கான தடையோட்டம் நடைபெறும்... அதில் கலந்து கொள்வோர் கவனிக்க வேண்டியது... முதலாவதாக வைக்கப்பட்டிருக்கும் சோடாவை வீணாக்காமல், மிச்சமின்றிக் குடிக்க வேணும்... இரண்டாவதாக... வைக்கப்பட்டடிருக்கும் பலூனை ஊதி உடைக்க வேணும்... கடைசியாக தட்டில் வைக்கப்பட்டிருக்கும் மாவுக்குள் வைக்கப்டப்டிருக்கும் ஒரு சதக் காசை வாயால் எடுக்க வேண்டும்... முதுலாவது சோடா, இரண்டாவது பலூன், மூன்றாவது மாவுக்குள் உள்ள காசு..." அறிவிப்பாளர் போட்டி விதிகளைக் கூறி முடிக்கிறார்.

போட்டி ஆரம்பமாகின்றது. போட்டி விதிப்படி முதலில் சோடா குடிக்கப்படுகின்றது. கீழிறங்கி மேலேறும் குரல் வளை முடிச்சின் வேகம் மாணவர்களின் ஆவலைப் பிரதிபலிக்கின்றது.

பத்மராசா முந்திக் கொண்டு விட்டான்.

இரண்டாவது பலூன்

இதிலும் பத்மராசா தான்!

மூன்றாவது தட்டில் வைக்கப்பட்டிருக்கும் மாவுக்குள் உள்ள ஒரு சதக்காசு

உதடுகளைக் கூப்பிப் பிடித்து முடிந்தவரை வேகமான ஊதுகின்றனர். கிட்டத்தட்ட சிறு புகைமண்டலம் என்றே கூறலாம்... போட்டியாளரின் முகங்களில் மாத்துகழ்கள் படிந்து வெண்மையாக்கி விட்டது... கடைசி நேரம்!

பத்மராசா காசை நாக்கால் எடுத்து விட்டான்.

இல்ல மாணவர்களின் கை தட்டல் குரலொலி

பார்வையாளரின் கை தட்டல் குரலொலி அறிவிப்பாளரின் விமர்சன புகழ் மொழி.

பத்மராசா இல்லதுக்கு வந்து விட்டான்

சக மாணவர்கள் ஆரவாரித்து வரவேற்கின்றனர். மாணவர்களின் ஆதரவு வார்த்தைகள் ஒன்றைத் தாண்டி ஒன்று வருகின்றது.

"அம்மா... அம்..." பத்மராசாவின் அவலக்குரல் இல்ல ஆரவாரத்துக்கிடையே அரை குறையாய்த் தோன்றி பிரதிபலித்து மரணிக்கின்றது. கதிரையில் இருந்த அவன் நிலத்தில சாய்கிறான். ஒரு வினாடி எல்லோரும் நிலையிழந்து நிற்கின்றனர். ஒருவன் மைதான டாக்டரிடம் ஓடுகிறான். நிலத்தில விழுந்த பத்மராசா நெருப்பில்' விழுந்த புழுப்போல் துடிக்கிறான் பேச்சு வர மறுக்கின்றது.

விளையாட்டு ஆசிரியர் உடல் பலமும் மனப் பலமும் மிக்கவர் பத்மராசாவின் மூக்குத் துவாரத்தில் தனது வாயை வைத்து உறிஞ்சி இழுக்கிறார். மாக்களிபட்டும் படாமலும் வருகின்றது... தொடர்ந்து ஸ்ரெனி ஆசிரியரின் முயற்சி தோல்வியடைகிறது.

"தட்டிலுள்ள மாவை ஊதிய முறையும் ஊதும் ஆவலில் காற்றை வேகமாக உள்ளே இழுத்திருக்கிறான். மா உட் சென்று சுவாசக் குழலை அடைச்சுப் போட்டுது... சுவாசம் வர மறுக்கின்றது... ஆஸ்பத்திரிக்கு கொண்டு வாருங்கோ" டாக்டர் கூறுகிறார்.

பத்மராசா படும் அவதியும் வேதனையும் எல்லோரையும் நிலைகுலையச் செய்து... 'இனி என்ன...? என்றொரு நிலையை உருவாக்கிவிட்டது. டாக்டர் முன் செல்லரஸ்னி பத்மராசாவைத்

தூக்கிக் கொண்டு பின் தொடருகிறார்.

"தவிர்க்க முடியாத காரணத்தால் விளையாட்டுப் போட்டி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது" அடி தலையற்ற பதட்டமான செய்தி அறிவிக்கப்படுகின்றது.

பார்வையாளர் மத்தியில் 'விபரம் தெரியாத கொந்தளிப்பு' பாடசாலையிலிருந்து ஆஸ்பத்திரி கால் மைல் இருக்கும் டாக்டரின் காரில் பத்மராசாவைத் தாங்கிய வண்ணம் ஸ்ரனி அமர்ந்திருக்கிறார். கார் ஆஸ்பத்திரியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.

பாடசாலைக்கும் ஆஸ்பத்திரிக்கும் இடையே ஒரு குறுக்குப் பாதை எறும்பு கொடிவிட்டு நகர்வது போல் ஆசிரியர்களும் மாணவர்களும் ஆஸ்பத்திரியை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றனர்.

பத்மராசா அனுமதிக்கப்பட்ட வாட்டில் ஆசிரியர்களைத் தவிர மற்றும் எவரும் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் எதையும் பொருட்படுத்தாமல் கஸ்தூரி உள் நுளைந்து விட்டாள்!

கண்களிலிருந்து கண்ணீர் வடிய வாய் விட்டுக் கதறுகிறாள்

ஊசி மூலம் குளுக்கோசும் மருந்தும் ஏற்றப்படுகின்றது.

படிப்படியான வளர்ச்சி... பத்மராசாவின் அவதி குறைந்து லேசாக மூச்சு வருகின்றது.

கிட்டத்தட்ட பூரண சுகமடைந்து சாதாரண நிலையை அடைகிறான்.

"அண்ணா..." கஸ்தூரி அழைக்கிறாள். பத்மராசா தலையைத் திருப்பிப் பார்க்கிறான். கண்ணீரோடு கஸ்தூரி நிற்கிறாள்.

"என்னணணை செய்யிது..."

"இப்ப ஒண்டுமில்லை..."

“கோப்பி குடிக்கப் போறியே...”

ஸ்ரெனி ஆசிரியர் முன்னேற்பாடாக வாங்கி வைத்திருந்த கோப்பியை வாங்கிய கஸ்தூரி பத்மராசாவின் தலையை இடது கையால் தாங்கிய வண்ணம் பருக்குகிறாள்.

இரு துருவங்களாக இருந்த உள்ளங்கள் சங்கமிக்கின்றன. கண்ணைத் திறந்து பார்க்கின்றான் பத்மராசா இரத்த பாசமெல்லாம் வீண்கதையா” என்று கேட்கிறது அவன் பார்வை.

ஈழநாடு 21.10.1973

3

# இதயங்கள் கரைகின்றன

"விலைவாசி சீறுவாணம் போல் ஏறிவிட்டது..."

பஞ்சம்...

எச்சில்லைப் போராட்டம்...?

எங்கை பார்த்தாலும் கியூ... சனங்கள் உயிர்ப் பூச்சியைப் புடித்துக் கொள்ளப்படும்பாடு'' இப்படியெல்லாம் பேசிக் கொள்கிறார்கள்.

உண்மையைத்தான் பேசிக் கொள்கிறார்கள்.

நானும் இவைகளைப் பற்றி... இந்த எச்சிலிலைப் போராட்டம் பற்றிப் பேசிக் கொள்வதுண்டு... ஆனால், என்னைப் பொறுத்துக் கவலைப்பட்டதில்லை.

நான் ஒரு வேலைக்காரன். சந்தண மரத்தோடு சாய்ந்த மரமும் மணம் தரும் என்பார்களே... இதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போது தான் உணர்கிறேன். நான் வேலைக்காரன்தான். படிப்பறிவு இல்லாதவன் தான்... இருந்தாலும் இவைகளைப் புரிந்து கொள்ளம் சக்தி எனக்குண்டு.

நான் வேலை செய்யும் வீட்டிலிருந்து புறப்பட்ட நான் கடையை நோக்கி நடந்து கொண்டிருக்கிறேன்.

எனக்குச் சொந்தமில்லை. உறவில்லை. சொந்த இடமில்லை... "அனாதை" என்று நிதானமாகக் கூறி விடலாம். பிறந்த மண். வளர்ந்த மண்ணென்று எதையும் என்னால் நிதானப்படுத்த முடியவில்லை. இருந்தாலும் "யேசுவைப் போல... நீயும் மாட்டுக் கொட்டில்லைதான் பிறந்தனி..." இப்படி எனது தாயார் உயிருடன் இருந்த காலத்தில் ஒரு நாள் கூறியது எனக்கு ஞாபகமிருக்கிறது.

'வேலைக்காரன்' என்ற பதவி என் பிறப்போடு ஒட்டியது என்று கூறலாம். ஏனென்றால் எனது தாயும் தகப்பனும் வேலைக்காரர்கள். தகப்பனார் நான் அறியாத காலத்திலேயே இறந்து விட்டார். தாயார் நான் என்னையறிந்த காலத்திலேயே இறந்தாள். பிறப்போடு ஒட்டிப் பிறந்த அந்த வேலைக்காரன் பதவி இன்னமும் என்னோடு ஒட்டிக் கொண்டிருக்கின்றது.

வேறு வழியற்ற நிலையில் 'தலைவிதி' என்று கூறிக் கொள்வது போல் நானும் எனது நிலையை 'தலைவிதி' என்று கூறிக் கொள்கிறேன். அப்படிக் கூறிக்கொள்வதில் ஏதோரு ஒரு வித மனத்திருப்தி இருக்கத்தான் செய்கின்றது.

நான் இந்த வீட்டுக்கு வேலைக்காரனாக வந்து ஏழு வருடங்களாகின்றன. மாதம் நாற்பது ரூபா சம்பளம் கிடைக்கின்றது. எனக்கென்ன வெளிச் செலவு. என்னுடைய தனிப்பட்ட கொள்கைக்கோ 'ஆசாபாசங்களுக்கோ' இடமற்ற வாழ்க்கை தானே...! வீட்டில் மிஞ்சுகின்ற எச்சிலிகைளால் எனது வயிற்றை நிரப்பிக் கொள்வேன். வருஷத்தில் ஒரு முறையோ இரு முறையோ உடுப்பெடுத்துக் கொடுப்பார்கள்.

... படுத்துறங்க எனக்கென்று அந்த வீட்டிலுள்ள ஒரு மூலையும்... சாக்குத் துண்டும்...

... இவைகளுக்கு மத்தியில் பணக்கார வீட்டு வேலைக்காரன் என்றொரு மதிப்பு.

இது தான் எனது வாழ்க்கைச் சிறப்பு!

நான் வேலை பார்க்கும் வீட்டுக்காரர் ஒரு டாக்டர். பெரும்

பணக்காரர். 'சந்தண மரம்... அதில் சாய்ந்த மரம் நான்!

நான் நடந்து கொண்டிருக்கிறேன்.

விடிந்தால் பிறந்த தின விழா.

இந்த டாக்டருக்கு ஒரே ஒரு மகன். இவன் பிறந்த வருடந்தான் நான் இங்கு வேலைக்கு வந்தேன்.

அவன் - புவிராஜ்.

நாளைக் காலை இவனது ஏழாவது பிறந்ததினம். அந்தவிழாவுக்குரிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஒரு டாக்டர் லட்சக்கணக்கான பணம்: பல ஏக்கர் நிலம்: செல்வாக்கானவர்... தவமிருந்து பெத்தபிள்ளை. சும்மா விடுவாரா?

புவிராஜின் உடலில் போடப்பட்டிருக்கும் நகையின் பெறுமதி, உடையின் பெறுமதி, விளையாட்டுச் சாமான்களின் பெறுமதி... இவைகளைப் பார்த்து ஊர்ச் சனங்கள்.

"உதுகளை எல்லாம் சேர்த்தால் ஒரு குமரைக் கரைசேர்க்கப் போதும்..." என்று கூடப் பேசியிருக்கிறார்கள். என் காதிலும் விழுந்திருக்கின்றது.

இதில் உண்மை இல்லாமல் இல்லை... அதை நான் உணராமலும் இல்லை. நான் எப்படி அந்த உண்மையை வாய்விட்டுக் கூற முடியும்... 'மனம் பொறுக்காதவன்... என்று வேலையை விட்டு நீக்கி விட்டால்?

...அரிசி ஆறு ரூபா... மா இரண்டு ரூபா... பாண் இல்லை... இருக்க இடம் இல்லை. தேத்தண்ணீக்கே வழியில்லாதவன் நான்... எச்சிலைப் போராட்டக்களத்தில் போராளியாகி... எங்களைப் போன்றவர்கள் வெல்ல முடியுமா?... தோல்வி தான்!

... வயிற்றுப் பிரச்சினையோடு கொழுக்கி போட்டிருக்கும் 'பெரிய இடத்துச் சமாச்சாரம்'... இப்படியான நேரங்களில் நான்

மௌனியாகி விடுவேன். எனக்கேன் வீண் வம்பு என்ற எண்ணம்.

நடந்து கொண்டிருந்த நான் தலையைத் திருப்பி சூரியனைப் பார்க்கின்றேன். நாலு மணியிருக்கும்.

"விடியக்கு முன்னம் எல்லா வேலையையும் முடிச்சுப் போட வேணும்..." எனது வாய் முணுமுணுக்கின்றது.

"டேய்... வாறவை எல்லாம் பெரிய மனிசர்... வாறவைக்கு ஒரு குறையும் வைக்கக்குடாது... எல்லாம் சரியாய் இருக்க வேணும்... உன்ரை பொறப்புத்தான்..." இப்படி டாக்டர் ஐயாவே கூறி விட்டார். எனக்கு உள்ளூரப் பயந்தான். புவிராஜின் பிறந்த தினதிதை ஆறு முறை மிக விமரிசையாகக் கொண்டாடிய அனுபவமும் உண்டு... இருந்தாலும் பெரிய இடத்து விஷயம்!... பயந்தான்!

"நாளைக்காலை. வேளையோடு எழும்பினால்தான் சமாளிக்கலாம்... ஒன்பது மணிக்கெல்லாம் சொந்தக்காறர் வந்திடுவினம்..."

நான் எனக்குள் பேசிக் கொள்கிறேன்.

நான் நடந்து கொண்டிருக்கிறேன்.

"ஆர்... சரசுவா வருகிறாள்..." தூரத்தே வருகின்ற அந்தச் சிறுமியை இனங்கண்டு கொள்ள முனைகிறது என்மனம் எனது மனதில் படிந்திருக்கும் அவளது உருவ அமைப்போடு இப்போது தெரிகின்ற அமைப்புக்களை ஒப்பிட்டு நிதர்சனப்படுத்தி விட உள்ளுக்குள் முயற்சிக்கின்றேன்.

"...சரசு... அவள் தான்..." எனது சிந்தனை நிதர்சனமாகின்றது. கையில் ஒரு பெட்டியை ஏந்தியபடி நடந்து வருகின்றாள்.

இவள் சரசு இருக்கிறாளே, இவளது பிறப்புக்கும் புவி ராஜாவின் பிறப்புக்கும் ஒரு தொடர்புண்டு. அதனால் சரசுவை எனக்கு நல்ல ஞாபகமுண்டு.

புவிராஜா பிறந்த அன்று இரண்டு மணித்தியாலங்கள் தாமதமாகி சரசு பிறந்தாள். இருவருக்கும் வயதில் மணிக்கணக்கில் தான் வித்தியாசம்.

வாழ்க்கை முறையில் புவிராஜா பஞ்சணையில் பால் குடிக்கின்றான். சரசு தேத்தண்ணிக்கும் வழியற்ற நிலை... இருவருக்கும் நாளை பிறந்த தினம்... ஏன்... இவன். சரசு கூட ஆறு பிறந்த தினங்களைத் தாண்டி விட்டாள்... அது அவளுக்கே தெரியுமோ...? என்னவோ..."

"...ஏன் பிறந்தேன் என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது... பிறந்த தினத்தையும்... அதற்கென்று ஒரு தனி விழாவையும் கொண்டாட முடியுமா?" பிறப்பில் ஏதோவொரு அர்த்தத்தைக் காண்பவன் தான் பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறான்... எங்கடை பிறப்பு... அர்த்தமே இல்லாதது... தினசரி எச்சிலிலைப் போராட்டம் நடத்துகின்ற நமக்கு என்ன பிறந்த தின விழா வேண்டிக் கிடக்கு..." என்று இதே ஊரைச் சேர்ந்த அருணாசலம் கூறியது எனக்கு ஞாபகம் வருகின்றது.

டாக்டர் ஐயாவின் வீட்டிலிருந்து கிட்டத்தட்ட இரு நூறு யார் தள்ளி சிவஞானத்தின் வீடு. சிவஞானத்தின் ஒரே மகன் தான் இந்தச் சரசு. இவன் நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்டவன். இங்கு வந்து திருமணம் செய்த கொண்டு, இந்த ஊரிலேயே தங்கி விட்டான். திருமணபந்தத்தின் பின் 'அருமையாக' ஒரு வருடம் மலட்டு வாழ்க்கை நடாத்தி சரசுவுக்குத் தகப்பனானான். இன்னும் பிச்சைக்காரன்தான். ஆனால் தினசரி கையேந்தும் பிச்சைக்காரனல்ல. ஏதோ அன்றாடு உழைத்து அன்றாடு சீவியம் நடத்திக் கொள்பவன்.

"டேய்... உன்ரை டாக்டர் ஐயாவுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்காம். இரண்டு மணித்தியாலங்கள் பிந்தி எனக்கு பெண் குழந்தை பிறந்திருக்கு... காகத்துக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு... டாக்டர் ஐயாவைப் போலை சாக்கு நிறையக் கற்கண்டு வாங்கி ஊரையே இனிக்க வைக்க என்னாலை முடியாது... ஏதோ முடிஞ்சசு... இரண்டு றாத்தல் சர்க்கரை வாங்கிக் கொண்டு வந்திருக்கிறன்...' என்று சிவஞானம் அன்று கூறிக் கொண்டான்.

என்னதான் இந்தப்பங்களாவிலை நான் இருந்தாலும் என் ஏழை மனதைத் திறந்து கதைக்க இங்கு யார் இருக்கிறார்கள். லீவுள்ளபோதெல்லாம் நான் சிவஞானம் வீட்டுக்குப் போவேன். சில நிமிட நேரமாவது மனம் விட்டுக் கதைத்து ஆளையாள் தேற்றிக் கொள்வோம். அப்போதெல்லாம் ஏதோ அரைகுறை வயிறாவது சிவஞானத்துக்கு நிரம்பியிருக்கும்... இப்போது பஞ்சம், வறுமை... எப்படி பேச முடியும்... இரண்டோ மூன்று நாள் தான் ஆண் என்பதையும் மறந்து அழுது விட்டான்.

...தேறுதல் கூற முடியும்... தேற்றி விட என்னட்டை என்னகிடக்கு... நான் சாய்ந்திருக்கும் மரம்... நான் அங்கு போவதை வெகுவாகக் குறைத்துக் கொண்டேன்.

...நானும் தேத்தண்ணிக்கு வழியில்லாத பிச்சைக்காரன் தான்... இது அப்பட்டமான உண்மை. பலர் அதைச் சுட்டிக்காட்டிப் பேசியதுமுண்டு. ஏதோ உண்டு, உடுத்து வாழ்கிறேன்... ஆனால் விலைவாசி பற்றிக் கவலைப்படுவதில்லை...! ஒரு ரகமான பிச்சைக்காரன்!

சிவஞானத்தை நினைக்கும் போது எனக்குக்கவலைதான் நீறு பூத்த நெருப்பாக என் உள்ளத்துக்குள்யே குமைந்து கொள்கிறேன்.

நாளை புவிராஜவுக்குப் பிறந்த தின விழா... இந்தச் சரசு... எப்படிக் கொண்டாட முடியும்... கேள்வியையும் கேட்டு அதற்குரிய பதிலையும் நானே கூறிக் கொள்கிறேன். உள்ளதைச் சொன்னால் வேதனை வேதனைதான்... ஏதோ சிறு சாந்தி!

"சரசு..."

"என்னம்மா..." அவன் என்னை மாமா என்று தான் அழைப்பாள்.

"ஐயா எங்கை..."

"ஐயா வேலைக்குப் போனவர் என்னும் வெரயில்லை.

"நீ இண்டைக்கு என்ன சாப்பிட்டனி..."

“கஞ்சி குடிச்சனான் மாமா... பிஞ்சு மனம் வெக்க துக்கமின்றி அப்பழுக்கற்ற உண்மையைக் கூறுகின்றது.

“எங்கை போட்டு வாறாய்...

“அங்கை... அந்தக் கல்வீடு... அங்கை போய் தேங்காய்ப்பூ வாங்கிக கொண்டு வாறன். ஆவள் கையில் வைத்திருந்த பெட்டிக்குள் புளிஞ்சு பால் எடுக்கப்பட்ட பச்சையான தேங்காய்ப் பூ கிடக்கின்றது!

‘இது புளிஞ்ச களிவு தேங்காய்ப்பூ... இல்லையா சரசு...’

‘ஓம் மாமா...’

‘இது ஏன் சரசு’

‘அம்மா புட்டவிச்சவ... ... புட்டுக்குக் கறியில்லை... இந்தத் தேங்காய்ப் பூவைக் கொண்டு போய் ... ... சம்பல் போட்டு புட்டோடை தின்னலாம் ... ... நான் நெடுகலும் போய் வாங்கிறனான் மாமா...”

“இது உன்ரை ஐயாவுக்குத் தெரியுமே”

“ஐயாவும் வந்து இதைக் தான் தின்னுவர்... அவருக்குத் தெரியும்...”

ஏன் இதயம் கரைகிறது

நான் திரும்பிப் பார்க்கிறேன். டாக்டர் ஐயாவின் மேல்மாடி வீடு தெளிவாகத் தெரிகின்றது...?...

ஏன் இதயம் மட்டுமா கரைகின்றது. எத்தனை இதயங்கள் கரைகின்றன!

விடிந்தால் புவிராஜ்வின் பிறந்ததின விழா.

நான் நடக்கின்றேன்.

ஈழநாடு 27.04.1975

# 4

# அதிர்வு

'பிறேக்கை' இலேசாகப் பிடித்து, சைக்கிளை ஆமை வேகத்தில் உருளவிட்டு, ஹாண்டிலை நிதானமாய்ப் பிடித்து கால்கள் இரண்டையும் நிலத்தில் பதித்து ...கைகளிலும், கால்களிலும் நரம்புகள் புடைத்து.... நடுங்க சில வினாடிகள் சீற்றிலிருந்து சைக்கிளைச் சமனிலைப்படுத்தி.... சீற்றிலிருந்து இறங்குகிறான் ஜெயராமன்.

சைக்கிள் கரியலிலுள்ள விறகு கட்டு ஜெயராமனின் தலைக்கு மேலால் உயர்ந்திருக்கின்றது.

சீற்றிலிருந்து இறங்கிய ஜெயராமன் இடது கையால் 'ஹாண்டி'லை நிதானமாகப் பிடித்து, வலது கையால் விறகுக்கட்டை அணைத்துப்பிடித்து, நெஞ்சோடு சரித்து,சைக்கிளை மெதுவாக நகர்த்தி மதிலோடு சரித்து நிற்பாட்டுகின்றான்.

வறுமையை எதிர்க்க அவன் மேற்கொண்ட தொழில் முயற்சியில் கடந்த இர்ண்டு வருடங்களாக கற்றுக் கொண்ட அனுபவம்!

நாரியை வளைத்துக் குனிந்து சாறத்தின் கீழ்ப்பகுதியால் முகத்தைத் துடைத்த ஜெயராமன் தலையைத் திருப்பி நிமிர்ந்து நிற்கும் அந்தக் கட்டிடத்தைப் பார்க்கிறான். மேல்மாடிச் சுவரில் எழுதப்பட்டிருந்த பெயரை வாசிக்கிறான்.

'ரமணன் பதிப்பகம்'

இன்று அதிகாலை தொடக்கம் ஜெயராமன் மனப்பாடம் செய்து கொண்ட பெயர்.

இன்று அதிகாலை ஐந்து மணிக்கு ஜெயராமன் வீட்டிலிருந்து விறகு வெட்ட புறப்பட்ட போது அவனது மூத்த மகன் 'அப்பா... கொப்பி வாங்கக் கன காசு வேணும்... காக்கிலோ கழிவு பேப்பராக வாங்கிக் கொண்டு வாருங்கோ... பிரதான வீதியிலை, ரமணன் பதிப்பகத்திலை தான் வாங்கலாம்' என்று மிகவும் வேதனையோடு கூறினான். ஒரு கிலோ கழிவு பேப்பரென்று அவன் கூறியிருப்பான். தகப்பனின் பல்லிமுட்டை வருமானத்தை அவன் உணர்ந்திருந்தான். அதனால் தான் காக்கிலோ கழிவு பேப்பரென்று அவன் கூறினான்.

ஜெயராமன் பெரு மூச்சோடு சைக்கிளை உருட்டிக் கொண்டு வர, அவனுக்குப் பின்னால் வந்த அவனது மகள்... வீட்டுப் படலையடியில்...

"அப்பா... காலமை பாணுக்கு மட்டும் தான் காசு கிடக்கு... குசுனியுக்கை உப்புக் கூட இல்லை..." படலையைப் பிடித்தபடி அவள் கூறினாள்.

"ஒண்டுக்கும் யோசிக்காதை... நான் வேளைக்கு வந்திடுவேன்..." ஜெயராமன் வழமை போல் கூறிக்கொண்டான்.

வறுமையால் துரத்தப்பட்டு வறுமையின் எல்லையைத் தாண்டி ஓடி பல அனுபவங்களைக் கற்றுக் கொண்டவன் ஜெயராமன். எதையுமே இலகுவாக உள் வாங்கிக் கொள்கும் பக்குவம் மிக்கவன்.

'ரமணன் பதிப்பக' வாசலில் அதன் பாதுகாப்பு உத்தியோகத்தரான மகேசன் நிற்கிறான். ஜெயராமன் ஒரு முறை மகேசனை ஏற இறங்கப் பார்க்கிறான்...

மெலிந்த உயர்ந்த தோற்றம், புனிதமான முகம்... மை உறிஞ்சி போல் மகேசனின் குண இயல்பை மேலோட்டமாக ஜெயராமனின் பார்வைக் கோடு உறிஞ்சுகின்றது. மகேசனோடு கதைக்கலாமென்ற துணிவு ஜெயராமனுக்கு ஏற்பட மகேசனை நோக்கி வருகின்றான்.

"கழிவு பேப்பர் எடுக்கலாமா" ஜெயராமன் மகேசனிடம் கேட்கிறான்.

"ஓம்..."

"ஒரு கிலோ என்ன விலை..."

"நாப்பது ரூபா..."

"அரைக்கிலோ தாறீங்களா..."

"கொஞ்சம் இருங்கோ... முதலாளி வெளியே போட்டார் வந்த உடனே எடுக்கலாம். "ஜெயராமனின் கேள்விகளுக்குப் பதில் கூறிய படி ஜெயராமனை மிகவம் உன்னிப்பாக அவதானிக்கிறான் மகேசன்.

மகேசனும் பஞ்சப்பட்டவன் பாம்பின் காலைப் பாம்பறியும் என்பார்களே... அது தானோ என்னவோ... ஜெயராமனை மகேசன் இலகுவாக இனங்கண்டு கொள்கிறான். வறுமை வெக்கையில் வறுத்தெடுக்கப்பட்ட ஜெயராமனின் பஞ்சக் கோலம், மை ஒற்றிக் கொள்வது போல் மகேசனின் இதயத்தில் ஒற்றிக் கொள்கிறது.

ஜெயராமன் திரும்பவும் சைக்கிளுக்கருகே வந்து நிற்கிறான்.

கொக்குவில் சந்தியிலுள்ள மரக்காலையில் விறகை விற்று அதன் பின்பு பிரதான வீதிக்கு வந்து கழிவு பேப்பரை வாங்கிக்

கொண்டு வீட்டுக்குச் செல்வதிலுள்ள சிரமங்களைப் புரிந்து கொண்ட ஜெயராமன் தனது நண்பன் ஒருவரிடம் இருபத்தைந்து ரூபாவைக் கடனாக வாங்கிக் கொண்டு நேரடியாக இங்கு வந்து விட்டான். கழிவு பேப்பரை வாங்கிக கொண்டு கொக்குவில் சந்தியில் விறகை விற்று வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு குளப்பிட்டி வீதியால் வீட்டுக்குச் செல்வது என்பதுதான் அவனது திட்டம்.

"அப்பா... குசுனியுக்கை உப்புக் கூட இல்லை" காலையில் அவனது மகள் கூறிய வார்த்தைகள் வண்டரிப்பது போல் அவனது உயிர்க் குருத்தை அரித்துக் கொண்டிருக்கின்றது.

மகேசன் ஜெயராமனையே பார்க்கிறான்...

கட்டையான மெலிந்த உள்வளைந்த தோற்றம். குண்டு விழுந்து குருத்துச் சிதறிய தென்னை மரம் போல் வளர்ந்து சரிந்து காதுக்சோணைகளை மறைந்திருக்கும் தலைமயிர், காவி பிடித்த உதடுகள், ஒரு கோடன் சாறம், அழுக்குப் பிடித்த பெனியன்...

மகேசன் பெருமூச்சுவிட்டுக் கொள்கிறான்.

'ரமணன் பதிப்பகம்'

இப்பகுதியில் மிகப் பிரபல்யமானதொரு பதிப்பகம் இது. இங்கிருந்து வாராந்தப் பத்திரிகை ஒன்று வெளிவருகின்றது. இப்பத்திரிகையின் அளவைக் குறைப்பதற்காக வெட்டப்படும் பேப்பரை இவர்கள் விற்பனை செய்கிறார்கள். மூன்றரை அங்குல அகலமும், இரண்டடி நீளமும் கொண்ட கழிவு பேப்பர்.

பல தேவைகளுக்காக இந்தக் கழிவுப் பேப்பர் வாங்கப்படுகின்றன. உயர்வகுப்பு மாணவர்களும் கணக்குச் செய்து பார்ப்பதற்காகவும் குறிப்பெடுப்பதற்காகவும் இதைப் பயன்படுத்து கின்றனர்.

ஜெயராமனின் மகன் ஏ. எல். வகுப்பு படிக்கிறான். அவனின்

படிப்புத் தேவைக்காகவே ஜெயராமனம் இக்கழிவு பேப்பரை வாங்க வந்துள்ளான்.

"முதலாளி வர நேரமாகுமா ?" சில நிமிடங்கள் மௌனமாக நின்ற ஜெயராமன் மகேசனிடம் கேட்கின்றான்...

"எனி வந்திடுவார்"

"அவசரமாகப் போக வேண்டியிருக்கு"

"அப்படி என்ன அவசரம்..."

"விறகை வித்துப்போட்டு... சமையல் சாமான்கள் வாங்கிக் கொண்டு போக வேணும் புள்ளையள் மத்தியானம் ஒண்டும் சாப்பிட்டிருக்காதுகள்..." இப்படிக் கூறிய ஜெயராமன் திரும்பவும் சைக்கிளடிக்கு வந்து நிற்கிறான்.

மகேசன் ஜெயராமனையும் அந்த விறகுக் கட்டையும் பார்க்கிறான். பளையில் விறகைக் கட்டிக் கொண்டு புறப்பட்டால் மாடு வண்டிலை இழுப்பது போல் விறகை இழுத்துக் கொண்டு... எழுது மட்டுவாழ், மிருசுவில், கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி நாவற்குழி வெளிகளைத்தாண்டி... மகேசனின் நரம்புகள் கருகுகின்றன...!

தனது இருக்கையிலிருந்த மகேசன் எழுந்து ஜெயராமன் அருகில் வருகிறான்...!

"ஐயா... எந்த ஊர்..."

"என்ரை சொந்த இடம் மாதகல், அங்கை ஆமிக்காரர் வந்தவை தானே... சகலதையும் இழந்து வந்தோம்... மனுசி கான்சர் சொத்துப் போனா... ஐந்து பிள்ளைகளும் நானும் இப்ப மானிப்பாயிலை இருக்கிறம்..."

"கழிவுப் பேப்பர் என்ன தேவைக்கு..."

"என்ரை மூத்தவன் ஏ.எல் படிக்கிறான். அவனுக்குத் தான்..."

வீடு வாசல் இல்லை: சரியான தொழில் இல்லை... புள்ளையள் பட்டினி... இதுக்குள்ள படிப்பா... மகேசன் தன்னைத் தானே கேட்டுக் கொள்கின்றான்.

"ஐயாவுக்கு எத்தினை பொம்பிளைப் பிள்ளையள்..."

"கடைசி மூண்டும் பொட்டையள்..."

"மூத்ததை உருவாக்கி நல்ல இடத்திலை குடுத்துச் சீதனபாதனம் வாங்கினால் தானே கீழை உள்ளதுகளை கரை சேர்க்கலாம்..." மகேசன் நாட்டு நடைமுறையைக் கூறுகிறான்.

"உப்பிடியான கீழ்த்தர எண்ணம் எனக்கில்லை..." முகத்திலை அடித்தது போல் ஜெயராமன் கூறுகிறான். ஜெயராமனின் முகத்திலிருந்த கனிவு கருகி விட்டதை மகேசன் உணர்ந்து கொண்டு மீண்டும் தனது இருக்கையில் அமர்கிறான்.

சில விநாடிகள் நின்ற ஜெயராமன் சைக்கிள் ஹாண்டிலிலுள்ள சீலைப்பைக்குள் இருந்த ஒரு வாழைப் பொத்தியை எடுக்கிறான். எடுத்தவன் றோட்டுக் கரையில் சப்பாணி கொட்டி அமர்ந்து அந்த வாழைப் பொத்தியின் இதழ்களையும் பூக்களையும் பிரித்து நிலத்தில் போடுகிறான்...

இவன் ஏன் இப்படிச் செய்கிறான்?... மகேசனின் மனதில் பெரும் கேள்வி...!

கரும் சிவப்பு நிறமான இதழ்களும், பூக்களும் பிடுங்கப்பட்டு இளம் சிவப்பு நிறமான இதழ்களும் பிடுங்கப்பட்டு இளமஞ்சள் நிறத்தில் வெண் தாமரை மொட்டு வடிவிலான... ஓரளவு பருத்த மொட்டு...

மகேசன் கண்ணிமைக்காமல் பார்த்தபடி இருக்கிறான்... இந்த

மொட்டை இவன் என்ன செய்யப் போகிறான்... மகேசனின் மனதில் அடுத்த கேள்வி...

ஜெயராமன் மொட்டு வடிவிலான அந்த வாழைப் பொத்தியை... பனம் குருத்தை கடிப்பது போல், கடித்துச் சாப்பிடுகிறான்...!

பச்சை வாழைப் பொத்தி., இதைச் சாப்பிடலாமா?

மகேசன் எழுந்து வருகிறான்.

"ஐயா... வாழைப் பொத்தியை பச்சையாய் தின்னலாமா...?

"தின்னலாம்..."

"ஆர் சொன்னது..."

"ஒரு தரும் சொல்லயில்லை... ஒரு நாள் விறகு கட்டிக் கொண்டு வந்தன்... சரியான பசி... கையிலை ஒரு சதம் காசில்லை... வழியிலை எனக்கு பழக்கமானதொரு வாழைத்தோட்டக் காரனை சந்திச்சன். அவன் வீட்டுக்கொண்டு போய் வறுத்துச் சாப்பிட சொல்லி இரண்டு வாழைப் பொத்திகளைத் தந்தான். அதை வாங்கிக் கொண்டு வரயுக்கை தான் வறுத்துச் சாப்பிடுகிறதை சும்மா சாப்பிட்டாலென்ன எண்ட எண்ணம் வந்தது... மேல் பக்கத்தாலை உடைச்சு கழிச்சுப் போட்டுச் சாப்பிட்டன்... பனங் குருத்து மாதிரி இருந்தது. நல்ல பசியைப் பிடிக்கும்... இப்ப சாப்பிட்டால் நாளைக்கு காலமை வரை பசிக்காது..." ஜெயராமன் சர்வசாதாரணமாக கூறுகிறான்.

ஆனால் மகேசன்... அவனது இதயம் வெதும்பி வெடித்து அழுகின்றது... இப்படியுமொரு வறுமையா...?

வறுமையைக் கண்டு வறுமை அழுகின்றது!

"ஐயா உங்களிட்டை ஒண்டு கேட்கட்டா..." வார்த்தைகள் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பிரசவிக்கின்றன.

“கேளுங்கோ...

“குசுனி அடுப்புக்குள்ளை பூனை படுத்திருக்க புள்ளையின்டை படிப்புக்காக செலவழிக்கிறியளே... இப்படியும் ஒரு படிப்பு வேணுமா...” உதடுகள் பிரியாத நிலையில் ஜெயராமன் சிரிக்கிறான்... அர்த்தபுஷ்டியான சிரிப்பு!

“என்னையா சிரிக்கிறியள்”

“தம்பி முதுரை மரம் பட்டு விறகாகி... எரிந்து சாம்பலாகும் வரை நிமிந்துதான் நிற்கும் தமிழன் இவ்வளவு பெரிய இழப்புகளைச் சந்தித்தும் இன்னும் முதுரை மரம் போல தான் நிற்கிறானெண்டால்... காரணம் என்னெண்டு தெரியுமா...” இப்படி கேட்ட ஜெயராமன் மகேசனைப் பார்க்கிறான்.

அந்தப்பார்வையில் கண்ணுக்குள் முள்ளெடுக்கும் ஆயுதத்தின் கூர்மை!

மகேசன் புரியாமல் நிற்கிறான்.

“அதுக்கு இரண்டு காரணங்கள்... ஒண்டு தமிழன்ரை கல்வி... அடுத்தது தமிழன்ரை வீரம்...! வறுமைக்குக் கல்வி தீனியானால்... எங்கடை அடுத்த தலைமுறை அடிமைப்பட்டிடும்...” ஜெயராமன் கூறி முடிக்கிறான்.

ஜெயராமனின் பேச்சு, போர்ப் பேரிகையாய் மகேசனின் செவிப்பறையில் அதிர்ந்து கொண்டிருக்கின்றது.

முதலாளி வருகின்றார். கழிவு பேப்பரை வாங்கிக் கொண்டு ஜெயராமன் புறப்படுகிறான்.

ஈழநாடு 04.05.1995

5

# பாண் போறனை

தினசரி உப்பு நீரையே உறிஞ்சி, உப்புக் காற்றையே சுவாசித்தாலோ என்னவோ... சீரான வளர்ச்சி குன்றி குறண்டிப் போன பூவரசு மரங்கள்... தனக்குள் தானே வெந்து வெதும்பிப் போன ஒரு அபலையின் தோற்றம். அந்தப் பூவரசு மரங்களில்... உடல் முழுவதும் அனுபவக் கண்டல்கள்... கடற்கரைக்கும் பிரதான வீதிக்கும் இடைப்பட்ட மேட்டுநிலத்தில் கடற்கரையை அண்மித்து குறண்டிப் போன அந்தப் பூவரசு மரங்கள் வரிசையாக நிற்கின்றன.

பொருத்தமற்ற சுவாத்தியத்தினால் அந்தப் பூவரசு மரங்கள் குறண்டிப் போனாலும்... அந்தப் பூவரசு மரங்கள் மேலால் அடர்த்தியான... பூவரசம் பூக்கள்... குறண்டிப் போன உடலுக்குள்ளும்... இயல்பான உணர்வுகளின் வெளிப்பாடுகள்...

புத்தளம், கடற்கரை.

ஆரவாரித்தெழும்புகின்ற பெரும் அலைகளின்றி சிறிய அலைகளோடு அமைதியாகக் காட்சி தரும் கடற்பரப்பு... வரிசையாக நிற்கும் குறண்டல் பூவுரசு மரங்கள்... சீரான இடைவெளிகள் உடன் கோடடித்தது போல வரிசையாக நிற்கும் அந்தக் குறண்டல் பூவுரசு

மரங்களின் கீழ் சீமெந்தினால் கட்டப்பட்ட ஆசனங்கள்... தற்காலிகமாக அமைக்கப்பட்டிருக்கும் சிறியதொரு இறங்கு துறை... இந்த இறங்கு துறையை அண்மித்து சிறியதொரு ஐஸ்கிறீம் கடை, புத்தளம் கடற்கரை பற்றி இவ்வளவு தான் கூறலாம்.

இந்தக் கடற்கரையில் நின்று மேற்கு நோக்கிப் பார்த்தால் சீன நாட்டரசினால் நிர்மாணிக்கப்படும் நுரைச்சோலை அனல்மின் நிலையக் கோபுரம் மங்கலாக ஆனால் இனங் காணக் கூடியளவிற்குத் தெரியும். இந்த நுரைச்சோலை அனல் மின் நிலையத்தைப் பார்ப்பவர்களில் ஒரு சாரார் அதன் பிரமாண்டத்தைப் பற்றிப் பேசிக் கொள்கின்றனர். இன்னும் சிலர் சீனா நாட்டரசின் அரசியல் கபடத்தனமென்றும் பேசிக் கொள்கின்றனர்.

புத்தளம் கடற்கரையோடு அமைந்திருக்கும் பிரதான வீதியில் புத்தளம் நகரத்தின் நுழைவாயிலில் ஒரு முச்சந்தி மன்னார் பிரதான வீதி வந்து புத்தளம் பிரதான வீதியோடிணையும் முச்சந்தியிது. சந்தியின் ஒரு புறம் மீன் சந்தையும் மற்றைய இரு புறங்களும் கடைத்தொகுதிகளும் அமைந்துள்ளன. மூவின மக்களும் வாழ்கின்ற சிறியதொரு நகரம். புத்தளம் பிரதான வீதியோடு வந்திணையும் மன்னார் வீதியில் கல்லெறி தூரம் வரை நடந்து இடதுபக்கம் உள்ள குறுக்கு வீதியில் இறங்கி நடந்தால் கடற்கரையை வந்தடையலாம்.

புத்தளம் நகரப் பகுதியிலும் நகரத்தையண்டிய பகுதிகளிலும் வசிப்பவர்களுக்கு இந்தக் குறுக்கு வீதியும் இந்தக் கடற்கரையும் மிகவும் பழக்கப்பட இடம் மட்டுமல்ல. மிகப் பிரபலமான இடமென்று கூடக் கூறலாம்.

தினசரி அதிகாலை ஐந்து, ஐந்தரை மணி தொடக்கம் ஏறத்தாழ காலை ஒன்பது மணி வரை இந்தக் குறுக்கு வீதியும் கடற்கரையும் கலகலப்பாகவே இருக்கும். இரவு கடற்தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் அதிகாலையில் இந்த இடத்தில் தான் வந்து சேருவார்கள்.

வீதியின் வலது பக்கக் கரையோடு வரிசையாக மீன் வியாபாரிகள் இருப்பார்கள். இவர்களைத் தொடர்ந்து மீன்வெட்டிக் கொடுப்பவர்கள் இருப்பார்கள். இடது பக்கக் கரையோடு மரக்கறி வியாபாரிகளும்... நடமாடும் தேநீர்க்கடை வியாபாரிகளும் நிற்பார்கள்.

மூவின மக்களும் நிறைந்து போய் நிற்பார்கள்.

மீனவனின் வலைக்குள் சிக்கி தனது இயல்பான சூழலை இழந்து மரண அவலப்படும் மீன்களையும் தலைப் பகுதியோடு அமைந்திருக்கும் மீன் செதில்களை சுட்டு விரல் நகத்தினால் கிளப்பி... குருதி கசியும் மீன் பூவுள்ள மீன்களையும் வாங்குவதில் பொதுவாகவே சகல மக்களும் திருப்தியடைகின்றனர்... இத்திருப்திக்கு காரணம் நிறைந்ததொரு மரபுண்டு!

காலை ஆறு மணியிருக்கும்

வழமை போல் குறுக்கு வீதியும் குறுக்கு வீதி வந்து கடற்கரை வீதியோடிணையும் சிறிய சந்தியும் கடற்கரையும் கலகலப்பாகவே இருக்கின்றது.

சில்லறை வியாபாரிகள், சைக்கிள் பெட்டி வியாபாரிகள், மொத்த வியாபாரிகள், வீட்டுத் தேவைக்கு மீன் வாங்குவோர்...

குறுக்கு வீதி வந்து கடற்கரை வீதியோடிணையும் சிறிய முச்சந்தியின் வலது பக்கமாகவுள்ள குறண்டிப் போன பூவரச மரத்தின் கீழ் குச்சன் அமர்ந்திருக்கின்றான். அவனுக்கு முன்னால், இரண்டு பக்கங்களும் கிழித்து விரிக்கப்பட்ட 'சொப்பிங் பாக்கில்' சில மீன் குஞ்சுகள் கிடக்கின்றன.

பல வகையான மீன் குஞ்சுகள்... திரளி, கொய், கெழுறு, முரல், மணலை, இரண்டு மூன்று நண்டுக் குஞ்சுகள்... குச்சன் இப்போது ஒரு மீன் வியாபாரி... இப்போதென்ன தினசரி காலையில்

இந்த இடத்தில் குச்சனைக் காணலாம்... மீன் குஞ்சுகளோடு இருப்பான்...

"ஐயா வாங்கோ... அம்மா வாங்கோ... மலிவு விலை அறுபது ரூபா... லாபாய்... லாபாய்..."குச்சன் இரண்டு மொழிகளிலும் குரல் கொடுக்கிறான்.

குச்சன் சிங்களத்தில் மட்டுமல்ல, நுரைச்சோலை அனல்மின் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக இங்கு வந்து தங்கியிருக்கும் சீன நாட்டவரும் இங்கு மீன் வாங்க வருவார்கள்... அவர்களோடு ஆங்கிலத்திலும் கதைச்துச் சமாளிக்கும் வல்லமையுள்ளவன்.

குறண்டிப் போன அந்தப் பூவரசு மரங்கள், பூவரசம் கதியால்களாக இருக்கும் போது குறண்டிப் போனவைகளோ அல்லது வளர்ந்த பின்பு குறண்டிப் போனவைகளோ தெரியாது... ஆனால் குச்சன் குறண்டித்தான் பிறந்தான்...!

சின்னமணி... இவள் தான் குச்சனைத் தனது வயிற்றுத் தோற்புரையில் பத்து மாதங்கள் சுமந்து பெற்றவள்... சின்னமணிக்கு நிரந்தர வறுமை... குறண்டிப் போன பூவரசு மரங்கள் பூத்திருப்பது போல... சின்னமணியின் கருப்பையில் குச்சன் கருவானான். பெண்களின் வயிற்றுக்குள் இரைப்பையும் கருப்பையும் மிக நெருங்கியே அமைந்துள்ளன கருப்பைக்குள் கிடந்த குச்சன் இரைப்பையின் பசிவெக்கையில் வெந்து... குறண்டி... முகட்டிலிருந்து விழுந்த எலும்புந் தோலுமான எலிக்குஞ்சு போல்... குச்சனும் எலும்புந் தோலுமாக சூம்பிப் போய் சின்னமணியின் வயிற்றிலிருந்து பூமியில் விழுந்தான்...!

ஒல்லித் தேங்காய் போன்ற நெஞ்சாங் கூடு... பருத்த வயிறு... கண் குழிக்குள் சதையற்ற வெறும் தோலுக்குள் புரளும் செத்தல் முளிகள்... ஈக்கில்கள் போன்ற கை கால்கள்... வறுமை என்ற உத்தியோக பூர்வ 'சீல்' குத்தப்பட்டு மை காயாத நிலையிலேயே அவன் பிறந்தான்!

குச்சனுக்கு இப்போது பத்து வயது உடல் நிலையில் வயதுக்குக் குறைந்த வளர்ச்சியையும் அனுபவத்தில் வயதுக்கு மிஞ்சிய வளர்ச்சியையும் அவன் பெற்றிருந்தான்.

வாழ்க்கை அனுபவங்களும், அந்த அனுபவங்களின் தொகுப்பில் புதிய பரிமாணங்களையும் பெறுகின்ற தத்துவப் படிமங்களும் துயர வெக்கையில், கோதுகளை உடைத்து வெளியேறிய குஞ்சுகள் தானே...!

குச்சுனுக்கு முன்னாலுள்ள சொப்பிங் பாக்கின் மீது அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பல இன மீன் குஞ்சுகளைப் போல... குச்சனின் மனப் பறிக்குள் பல விதமான அனுபவப் படிமங்கள் நிறைந்திருந்தன...

குச்சன் றோட்டின் வலது பக்கமாக அமர்ந்திருக்கின்றான். றோட்டின் இடது பக்கமாக குச்சனுக்கு நேர் எதிராக கபிரியேல் பாண் வண்டிலோடு நிற்கிறான். குச்சனைப் போல கபிரியேலும் பாண் வண்டிலோடு தினசரி அதிகாலையில் இங்கு வந்து விடுவான். கபிரியேல் பாண் வண்டிலோடு இதே இடத்தில் தான் நிற்பான்.

அதிகாலையில் இங்கு வருபவர்கள் பல நோக்கங்களுடனேயே வருகின்றனர். மலிவாக மீன் வாங்கலாம். மரக்கறி வாங்கலாம். காலை உணவுக்காக கபிரியேலிடம் சுடு பாண் வாங்கலாம்... இப்படிப்பல நோக்கங்கள்.

கபிரியோல் ஒரு கிறீஸ்த்தவன். அவனுக்கிப்போது ஐம்பது வயது. ஆவன் ஒரு இருதய நோயாளி. அவனால் பலத்த வேலைகள் செய்ய முடிவதில்லை. குண்டுச் சட்டிக்குள் கொட்டப்பட்ட நண்டுக் குஞ்சுகள் போல்... அவனுக்கு குஞ்சும் குருமானுமாய் ஐந்து பிள்ளைகள்... கபிரியேலின் குடிசைக்குள் சின்னனும் பெரிசுகளுமாய் ஏழு இரைப்பைகள்... இவைகள் தினசரி இயங்கிக் கொண்டே இருக்கும்... கபிரியேல் பதில் சொல்லித்தான் தீர வேண்டும்...!

தனி மனிதனிலிருந்து... சமூகமாக... தேசியமாக வளர்ந்திருக்கும் இந்த மனிதர்களின் இயக்க நிலையின் மூலஸ்தானத்திலுள்ள முதலாவது இயக்கப்புள்ளி... இந்த இரைப்பையும்... அதிலுள்ள பசியுந்தான்...

கபிரியேல் அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் பேக்கரிக்கு வந்துவிடுவான். புாண் போறணைக்குள்ளால் இறக்கி வைக்கப்பட்டிருக்கும் சுடுபாண்களில் ஒரு தொகைப் பாண்களை வண்டிலுக்குள் அடுக்கிக் கொள்வான். அதேபோல் சீனி பணிசுகளிலும் ஒரு தொகையை வண்டிலுக்குள் அடுக்கி கொள்வான்.

பேக்கரி முதலாளி வந்து கணக்கெடுத்துப் பதிந்த பின் கபிரியேல் புறப்பட்டு இங்கு வந்து விடுவான்.

இங்கு வியாபாரம் முடிந்ததும் பேக்கரிக்குச் சென்று முதலாளியிடம் திரும்பவும் பாண்களையும் பணிசுகளையும் பெற்றுக் கொண்டு உள் வீதிகளுக்குள் இறங்கி விடுவான்.

பதினொரு மணி தொடக்கம் பிற்பகல் மூன்ற மணி வரை ஓய்வு... அதன் பின் நாலு மணிக்குத் திரும்பவும் பாண் வண்டிலோடு புறப்பட்டால் உள் வீதிகளில் விற்பனை செய்து... இரவு எட்டு மணியளவில் தான் பேக்கரிக்கு வருவான்.

மாதம் முடிய சிறிய தொகைப்பணம் சம்பளமாக அவனுக்குக் கிடைக்கும்.

குச்சனுக்கு இந்த மரத்தடியும் மீன் வியாபாரமும் கபிரியேலுக்கு பாண் வண்டிலும் வீதிகளும்... மிகவும் பழக்கப்பட்ட சங்கதிகள்...!

சின்னமணி இவள் தான் குச்சனைப் பெற்றவள். சின்னமணி குச்சனைப் பெற்றதன் மூலம் தாய் என்ற ஸ்தானத்தைப் பெற்றது உண்மை தான்... ஆனால் ஒரு தாயின் கடமைகளை அவளால் செய்ய முடியவில்லை... அதிகாலை ஐந்தரை மணியளவில் சின்னமணி

குச்சனை எழுப்புவாள். "ராசா குச்சன்... எழும்பையா... மீன் பொறுக்கப் போக வேணும்..." கால்கள் இரண்டையும் மடித்து கைகள் இரண்டையும் கால்களுக்கிடையில் செருகிய படி கேள்விக் குறி வடிவில் குறண்டிப் போய் குச்சன் படுத்திருப்பான்.

குச்சனை எழுப்புவதற்கு சின்னமணிக்கு மனம் வராது... அவனுக்குப் பக்கத்தில் குந்தியமர்ந்து குறண்டிப் போய்படுத்திருக்கும் அவனது உப்புப் படர்ந்த முதுகைத் தடவுவாள்... அவளது ஈரல் குலை வெந்து பிளக்கும்...!

"ராசா... குச்சன் நேரம் போகிது... மீன் வள்ளங்கள் கரைப்பட்டிடும்... எழும்பு குஞ்சு..." அவள் திரும்பவும் எழும்புவாள். ஆவளின் கண்குளிக்குள்ளிருக்கும் வெண்மையான நித்திரை அழுக்கு அவளது கண்ணீரில் கரைந்து... நாடியில் தொங்கம்..."

சம காலத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்ற பிள்ளைகளைத் தான் அதிகாலையில் படிப்பதற்காகப் பெற்றோர் எழுப்புவார்கள்... ஒரு பக்கத்தில் தாயும் மறுபக்கத்தில் தகப்பனும் நின்று... எழுப்பி... செல்லம் கொஞ்சி... 'ரீ' கொடுத்து ... படிக்க விடுவார்கள்... குச்சனுக்கு இப்போது பத்து வயது... ஐந்தாம் ஆண்டில் தான் படிக்கிறான். ஏனைய மாணவர்களைப் போல இவனும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றியிருக்க வேண்டும்...? குச்சனுக்கு வாழ்க்கைப் பரீட்சை...!

சின்னமணியும் ஏனைய தாய்மார்கள் போல் குச்சனைப் பத்து மாதம் சுமந்து தான் பெற்றாள். ஏனைய தாய்மார்களைப் போல சின்னமணியும் அதிகாலையில் குச்சனை எழுப்புகிறாள்... ஆனால்... பரீட்சைக்குப் படிக்கவல்ல.

வலைக்குள்ளிருந்து மீன் தெரிவு நடத்தும் மீனவர்கள் பொருத்தமற்ற மீன் குஞ்சுகளைப் பொறுக்கி எறிவார்கள். அவைகளைப் பொறுக்கி விற்பதற்காக...!

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை... அது தேவையோ... தேவையற்றதோ... அதுதான் போகட்டும்... ஒரு கிளாஸ் சாயத் தண்ணீர் கொடுத்தனுப்ப அவளிடம் தேயிலை இருக்காது... கண்கள் நிறையக் கண்ணீர் தான் இருக்கும்.

குச்சன் எழும்பி... சாறம் உடுப்பது போல களிசானை உடுத்திக் கொண்டு வலது கையால் இடது தோளையும் இடது கையால் வலது தோளையம் பிடித்துக் கொண்டு பனிக் குருவி நடப்பது போல் அவன் நடப்பான்...

சின்னமணி பார்த்துக் கொண்டு நிற்பாள்... அவளது தொப்புள் குழியிலிருந்து கண்ணீர் வடியும்...

குச்சன் இரண்டு வழிகளில் மீன் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்வான். ஒன்று மீனவர்களுக்கு மீன் தெரிவு செய்ய உதவி செய்தால் கூலியாக சில மீன்களைக் கொடுப்பார்கள்... அந்தச் சந்தர்ப்பம் சில வேளைகளில்தான் கிடைக்கும். இரண்டாவது மீனவர்கள் சில மீன் குஞ்சுகளைக் கழித்து எறிவார்கள் அவைகளைக் குச்சன் பொறுக்கிக் கொள்வான்.

இன்று பொறுக்கப்பட்ட மீன் குஞ்சுகளையே குச்சன் வைத்திருக்கின்றான்.

குச்சனின் குடும்பத்தில் மொத்தமாக ஐந்து சீவன்கள். தகப்பன் மகேந்திரன், தாய் சின்னமணி, மூத்த தங்கை மலர், இவளுக்கு மூன்று வயது. மகேந்திரனும் சின்னமணியும் கூலி வேலைக்குச் செல்வார்கள். கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக நமது மண்ணில் நடந்த யுத்தத்தினால் நம்மவர்கள் கோவணங்களையும் இழந்து கூலிகளாகிவிட்டதால் மகேந்திரனுக்கும் சின்னமணிக்கும் கூலி வேலை கிடைப்பதும் அரிதாகி விட்டது.

சூரிய ஒளிக்கதிர்கள் பூமியில் நீண்டு கொண்டிருக்கின்றன. மீன் சந்தை கலகலப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது.

குச்சன் மீன் குஞ்சுகளையும் பார்த்து அடிக்கடி பாண் வண்டிலையும் பார்த்துக் கொள்கிறான். மீன் குஞ்சுகளை விற்று பாண் வாங்குவது வழமையான செயற்பாடு இன்று மேலதிகமாக கடைசித் தங்கைக்கு ஒரு சீனி பணிஸ் வாங்க வேண்டுமென்றொரு ஆசை குச்சனுக்கு.

"ஒரு பாண் முப்பது ரூபா. ஒரு சீனி பணிஸ் பத்து ரூபா... நாற்பது ரூபா... அப்ப ஐம்பது ரூபா சொன்னால்த்தான் நாற்பது ரூபாவுக்கு விற்கலாம்... இன்னும் பத்து ரூபா கூடச் சொன்னால் என்ன... அறுபது ரூபா சொல்லுவம்..." குச்சனின் மனம் கணக்குப் போடுகின்றது.

குச்சன் பாண் வண்டிலைப் பார்க்கிறான்... பெருமளவு பாண்களும் சீனி பணிசுகளும் முடிந்து விட்டன...!

"ஐயா வாங்கோ... உடன் மீன்... மலிவு... லாபாய்... லாபாய்..." குச்சன் தனது கீச்சுக்குரலில் இரு மொழிகளிலும் கூறுகின்றான்.

புத்தளம் மூவின மக்களும் வாழ்கின்ற ஒரு: பிரதேசம். இங்குள்ளவர்கள் தங்களின் தாய் மொழியோடு ஏனைய இரண்டு மொழிகளையும் ஓரளவு பேசுகின்ற வல்லமையுள்ளவர்கள்.

குச்சன்.

மகேந்திரனுக்கும், சின்னமணிக்கும் திருமணமாகி அவர்களுக்கு முதல் பிறந்த பிள்ளையிவன். சின்னமணியின் வயிற்றில் குச்சன் ஒரு புள்ளியாள் கருத்தரித்த போது... புதுத்தம்பதிகளின் மனதில் இயல்பாக ஏற்படுகின்ற உணர்வுகள் அவர்களது மனதிலும் ஏற்படத்தான் செய்தது.

ஆண் பிள்ளை பிறந்தால் ஜெயந்தன் என்றும், பெண் பிள்ளை பிறந்தால் ஜெயந்தினி என்றும் பெயர் வைப்பதாகத் தீர்மானித்துக் கொண்டனர்.

ஆண் பிள்ளை பிறந்தது... ஜெயந்தன் என்று பெயர் வைத்தனர்.

குச்சனின் உடல் தசைப்பிடிப்பின்றி எலும்புந் தோலுமாக குச்சி போல் இருந்தால் 'குச்சன்' என்று செல்லமாக அழைக்கப்பட்டு... நாளடைவில் அவனது ஜெயந்தன் என்ற உண்மைப் பெயர் மறக்கப்பட்டு குச்சன் என்ற பெயரே பாவனைக்கு வந்து...

குச்சனே தனது உண்மைப் பெயரை மறந்து போய் விட்டான்.

"...டேய் குச்சன்... பள்ளிக்குடத்திலை புதுப்புத்தகங்கள் குடுத்து... என்ரை புள்ளங்கள் கொண்டு வந்தாங்கள்... உனக்கும் கிடைச்சிதா..." பாண் வண்டிலோடு நின்ற கபிரியேல் குரல் கொடுக்கிறான்.

"...நான் இரண்டு மூண்டு நாள் பள்ளிக்குடம் போகவில்லை. குச்சன் சர்வ சாதாரணமாகப் பதில் கூறுகின்றான். புதுப்புத்தகம் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் அவனிடமில்லை.

"என்ரா... குச்சன்... பள்ளிக்குடத்துக்குப் போய் இரண்டெழுத்துப் படிச்சு... சோதினை பாஸ் பண்ணினால்தானே ஏதாவது வேலை வெட்டிக்குப் போகலாம்... இல்லாட்டி வாழ்க்கை முழுவதும் மீன் குஞ்சுகள் பொறுக்கி விக்க வேண்டித்தான் வரும்..." பாம்பின் காலைப் பாம்பறியும் என்பது போல தனது வறுமைக் கூடாகக் குச்சனின் வறுமையைப் புரிந்து கொண்ட கபிரியேல் இரக்கப்பட்டு இப்படிக் கூறுகிறான்.

கபிரியேல் வறுமைப்பட்டவன். மிகவும் நல்லவன். அவனது கழுத்தில் ஒரு கறுப்புக் கயிறு... அந்தக் கயிற்றில் யேசுவின் சிலையோடு சேர்ந்ததொரு சிலுவை...

அவனது நெஞ்சாங்குழியோடு அந்தச் சிலுவை தொங்கிக் கொண்டிருக்கின்றது. அவன் சகல நம்பிக்கைகளையும் இழந்து... அந்தச் சிறுவையை மட்டுந்தான் இப்போது நம்புகிறான்!

கல்விக் கூடங்கள் என்பன பரீட்சை வினாக்களுக்கான விடைகளைத் தயார்படுத்தும் நிலையங்களே தவிர வாழ்க்கைக்கான போதனைகளையோ சமூக முடிச்சுக்களை அவிழ்க்கும் அல்லது அறுக்கும் போதனைகளையோ செய்யும் சமூக நிலையங்களல்ல...

என்ற உண்மையை...

மிக நீண்ட கயிற்றில் 'கல்வி மேய்ச்சல்' நடத்திய மிகப் பெரும் கல்வியாளர்களாலேயே புரியப்படாமல் இருக்கும் போது... வறுமை என்ற ஒரு முழக் கயிற்றில் 'சமூக மேய்ச்சல்' நடத்திய கபிரியேலால் புரிந்து கொள்ள முடியுமா?...

கபிரியேலின் கழுத்திலுள்ள கறுப்புக் கயிற்றில் நெஞ்சாங்குழியோடு தொங்குகின்ற யேசுவின் சிலையோடு கூடிய சிலுவை... யேசு இன்று வணக்கத்திற்குரியவர். ஆன்று யேசுவைச் சமூக விரோதியாக்கி... அவனது தலையில் முள் முடியை இறுக்கி... சிலுவையில் அறைந்து சொல்லும்படி ஆணையிட்டதும் அந்த நாட்டின் தலைவன் தான்!

அரசுகளின் இயல்புகள்... அன்றும் இன்றும் ஒன்று தான்!

"...டேய் குச்சன்... நேரம் ஏழரை ஆகிது... வித்து போட்டுப் போனால் தானே... பள்ளிக்குடம் போகலாம்..." கபிரியேல் கூறுகிறான்.

"நான் இண்டைக்குப் பள்ளிக்குடம் போகயில்லை" குச்சன் எந்த மனத் தாக்கமுமின்றிக் கூறுகின்றான்.

அதிகாலை ஆறு மணியளவில் இயங்க ஆரம்பிக்கும் இந்தச் சந்தை ஏழரை மணியளவில் உச்ச நிலையை அடைந்து அதன் பின்பு படிப்படியாக இறங்கி ஒன்பது மணியளவில் சந்தை முற்றாகக் கலைந்து விடும்.

இப்போது நேரம்... ஏழரை மணி... சந்தையின் உச்சநிலை...

மிகவும் அழகானதொரு வெள்ளைக் கார்... குறுக்கு றோட்டில்

வந்து கடற்கரைச் சந்தியால் வலது பக்கந் திரும்பி... றோட்டுக்கரையோடு நிற்கின்றது.

கபிரியேலும் குச்சனும் ஒரு முறை அந்தக் காரைப் பார்த்துக் கொள்ளுகின்றனர்.

காரின் நான்கு கதவுகளும் திறக்கப்பட்டு ஆண்கள் ஆறு பேர் இங்குகின்றனர். இவர்கள் ஆறு பேரும் அடிக்கடி இங்கு வந்து போவார்கள்.

அகிலன், சாந்தசீலன், குமரவேள், மகேந்திரன், மூர்த்தி, பிரதீபன்... இவர்கள் ஆறு பேரும் அரச சேவைகளில் உள்ளவர்கள். கிழமையில் ஒரு நாள் இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அன்றைய பொழுதைச் சந்தோஷமாகக் கழிப்பார்கள். இன்று சாந்தசீலன் வீட்டில் கூழ் காய்ச்சுவதாகத் திட்டமிட்டுள்ளனர். அதற்கான பொருட்களை வாங்குவதற்காகவே இங்கு வந்துள்ளனர்.

"...அகிலன்... அந்தப் பூவரசு மரத்தடியிலை இருக்கிற பொடியன் வைச்சிருக்கிற மீன் குஞ்சுகளைப் பாத்தியோ... கூழுக்குப் சூப்பராய் இருக்கும்" சாந்தசீலன் கூறுகிறான். சாந்தசீலனிடம் கூர்மையான கிரகித்தல் திறனுண்டு. மிக இளம் வயதில் பொறுப்பான பதவி வகிப்பவன்.

சூாந்தசீலனின் பேச்சைக் கேட்ட அவர்கள் குச்சனையும் அவனுக்கு முன்னால் சொப்பிங் பாக்கில் கிடக்கும் மீன் குஞ்சுகளையும் பார்க்கின்றனர்.

குமரவேள்... அவர் ஒரு டாக்டர். ஆவரின் பார்வை குச்சனில் நங்கூரமிடுகின்றது:.

"...என்ன குமரவேள்... அந்தப் பொடியனை உங்களுக்குத் தெரியுமா..." குமரவேளின் பார்வையை அவதானித்த மகேந்திரன் கேட்கிறான். மகேந்திரன் தினசரி பணத்தோடு பழகும் வாய்ப்புள்ள ஒரு வங்கி ஊழியன்.

"...அந்தப் பொடியனைப் பாத்தீங்களா... பச்சைப்பாலகன்... மழையுக்கை நனைஞ்ச கோழிக் குஞ்சு போலை... சூறாவிப் போயிருக்கிறான்... சிறுவர் பாதுகாப்பு... சிறுவர்களுக்கு போசாக்குணவு வழங்க வேண்டும்... சிறுவர்களைப் படையில் சேர்ப்பது சட்டவிரோதமானது... சிறுவர்களை வீட்டு வேலைகளுக் கமர்த்துவது சட்ட விரோதம்... இப்படித் தினசரி நாலு பக்கங்களிலிருந்தும் குரல் எழுப்பப்படுகின்றது. ஆனால் நடைமுறைகள்... முழங்கைக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போட்ட கதைதான்..." குமரவேளின் கதையில் மனிதம் கசிகின்றது.

"... குமரவேள்... நீங்கள் சொல்றதிலை நிறைய யதார்த்த உண்மைகள் இருக்கு..."

"... நாங்கள் நாட்டோடிருந்தோம்... ஒருவன் 'பைபிளோடு வந்தான்... இப்போது அவன் நாட்டோடிருக்கிறான்... நாங்கள் 'பைபிளோடு' நிற்கிறோம்..."

"... எத்தனையோ அரசியல் முனிவர்களால் சபிக்கப்பட்ட பூமியிது" இது வரை மௌனமாக நின்ற பிரதீபன் கூறுகிறான். பிரதீபன் கல்விக் கந்தோரில் வேலை செய்பவன். அதனால்த் தானோ என்னவோ... அரசியல் வரலாற்றை முதன்மைப்படுத்தி மிகவும் அர்த்த புஷ்டியாகக் கூறுகிறான்.

"என்ன மூர்த்தி... மௌனமாய நிற்கிறியள். நீங்களும் ஏதாவது சொல்லுங்கோவன்..." அகிலன் மூர்த்தியைக் கிண்டுகிறான். மூர்த்தி பிரதேசசபை ஒன்றில் பணி புரிபவன்.

"...பூவரசு மரத்தடியிலை இருக்கிற அந்தப் பொடியனைப் போல ஆக்கள் மௌனமாய் இருப்பதும்... எங்களைப் போல ஆக்கள் அதிகமாகக் கதைக்கிறதுந்தான்... இன்றைய நிலைக்கு முக்கிய காரணமெண்டு நான் நினைக்கிறன்... மூர்த்தி ஆணி இறுக்கியது போல் கூறுகின்றான்.

"...கூட்டத்தில் கூடி நின்று கூடிப் பிதற்றலன்றி... நாட்டத்திற் கொள்ளாரடீ கிளியோ! நாளில் மறப்பாரடீ..." பாரதியின் இக்கவிதை வரிகள் இன்று மட்டுமல்ல. இன்றும் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு வாழத்தான் போகின்றது..." உச்ச நீதிமன்ற நீதிபதியின் தோரணையில் ஆனால் மிகவும் நாசுக்காக தன் கருத்தை வெளிப்படுத்துகிறான் அகிலன்.

குச்சன் பாவம்... அவன் இவர்களின் பேச்சுக்களை அவதானிக்கவில்லை... கவனித்தாலும் அவனால் இவர்களின் சூக்குமமான பேச்சுக்களைப் புரிந்து கொண்டிருக்க முடியாது. ஆனால் கபிரியேல் இவர்களது பேச்சுக்களை அவதானித்துக் கொண்டு நின்றான். அவனாலும் சரிவரப் புரிந்திருக்க முடியாதென்றுதான் கூற வேண்டும்.

சாந்தசீலனின் தலைமையில் நண்பர்கள் கூழுக்கான பொருட்களை வாங்குவதற்காக காரடியிலிருந்து புறப்படுகின்றனர்.

'...சீலன் அந்தப் பொடியனிட்டை உள்ள மீன் குஞ்சுகளை வாங்குவமா..." குமரவேளின் மனம் இன்னமும் குச்சன் மீதே நங்கூரமிட்டு நிற்கின்றது.

"...வாங்கலாம்... இப்ப கேட்டால் டபிள் விலை சொல்லுவான். திரும்பி வரயுக்கையெண்டால் நேரம் போகிடும் மலிவாய் வாங்கலாம்" சீலன் பதில் கூறுகிறான்.

"...ஐயா வாங்கோ... உடன்மீன்... மலிவு விலை குச்சன், சீலனையும் அவனது நண்பர்களையும் பார்த்துக் குரல் கொடுக்கிறான்.

சீலனும் நண்பர்களும் குச்சனைக் கடந்து செல்கின்றனர்.

குச்சன் பாண் வண்டிலைப் பார்க்கின்றான்... நாலைந்து பாண்களும், இரண்டு சீனி பணிசுகளும் மட்டும் கிடக்கின்றன.

நேரம் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

பாணும் சீனிபணிசும் முடியப் போகின்றது என்ற மனவேக்காட்டில் குந்தியிருந்த குச்சன் எழுந்து நின்று தலையைச் சொறிகிறான்.

"பத்து ரூபா... குறைப்பம்..." குச்சனின் மனம் கூறுகின்றது. "ஐயா... வாங்கோ... ஐம்பது ரூபா..." குச்சன் குரல் கொடுக்கிறன்.

கபிரியேல் குச்சனுக்கு கடனாக பாணும் சீனி பணிசும் கொடுப்பான். அவ்வளவுக்கு கபிரியேல் நல்லவன். ஆனால் முதலாளியிடம் கணக்கை ஒப்படைக்கும் போது... முதலாளி கபிரியேலைத் திட்டுவான்.

நேரம் எட்டை நெருங்கி விட்டது... பாண் வண்டிலுக்குள் சீனி பணிஸ் கிடந்த இடம் வெறுமையாகக் கிடக்கின்றது.

"கபிரியண்ணை சீனி பணிஸ் முடிஞ்சிதா..." குச்சன் மனம் பொறுக்க முடியாமல் கேட்கிறான்.

"ஓமடா குச்சன்... சீனி பணிஸ் முடிஞ்சிது... பாணும் முடியப் போகிது..." கபிரியேல் வேதனையோடு கூறுகிறான்.

சீலனும் நண்பர்களும் வருகின்றனர். ஒவ்வொருவரின் கைளிலும் ஒவ்வொரு சொப்பிங்க பாக்...

"...தம்பி... மீன் குங்சுகள் என்ன விலை..." சாந்தசீலன் குச்சனிடம் கதை கொடுக்கிறான். அவனது கதையில் இலேசான நளினம்...!

"நாப்பது ரூபா..." மீண்டும் பத்து ரூபா குறைத்து விலை கூறுகிறான் குச்சன்.

"என்ன தம்பி... முள்ளு முத்தாத இந்த மீன் குஞ்சுகள் நாப்பது பெறாது..." அந்த மீன் குங்சுகளை வாங்க வேண்டுமென்ற முடிவு சீலனுக்குண்டு... அதைக் காட்டிக் கொள்ளாமல் புறா இருக்க

முட்டை எடுக்கும் தந்திரத்தில் பேசுகிறான். மீன்குஞ்சுகள் வாங்குவதில்க் கூட உளவியல் தந்திரம்...!

"நீங்கள் எவ்வளவு கேக்கிறியள்" மூளை தலைமண்டைக்குள் அமைந்திருப்பதாலோ... என்னவோ தலையைச் சொறிந்த படி குச்சன் கேட்கிறான்.

"...என்ரை மதிப்புப்படி ஒரே பேச்சு இருபது ரூபா தாறன்..." இருபத்தைந்து ரூபா கொடுக்கலாம் என்ற தனது முடிவை வைத்துக் கொண்டு இருபது ரூபா கேட்கிறான்.

மீன் சந்தைக்குள்ளும் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய அனுபவங்கள் நிறைய உண்டு, கபிரியேல் அவதானித்தபடி நிற்கின்றான்... அவனுடைய அனுபவத்தனத்தில் இப்படி எத்தனையோ சூட்டுக்காயங்கள் உண்டு!... குச்சன் பாவம் அதிர்ந்து போய் நிற்கிறான்.ன

"...என்ன தம்பி... கடுமையாய் யோசிக்கிறாய்... நட்டமெண்டால் வைச்சுக்கொள். நான் போறன்..." குச்சனின் மனநிலை தனக்குச் சாதகமாக இருப்பதைப் புரிந்து கொண்ட சீலன் இரண்டாவது தாக்குதலை நடத்துகிறான்.

அதிகாலையில் ஒரு கிலோமீற்றர் தூரம் நடந்து... கடற்காற்றின் காலைக்குளிர்... கரம்பை முட்களாய் உடலைக் குத்த... மீனவர்களால் கழித்து எறியப்படும் மீன் குஞ்சுகளை ஓடியோடிப் பொறுக்கி... களிசானிலிருந்து நீர் சொட்டச் சொட்ட இரண்டு மணித்தியாலகளுக்கு மேலாகக் காத்திருந்து... முடிவு... தங்கச்சிக்கு ஒரு சீனி பணிஸ். அதுதான் போகட்டும் ஐஞ்சு சீவன்களின் காலைச் சாப்பாட்டிற்கு ஒரு பாண் வாங்க முடியாத நிலை...!

"...சரி... தம்பி... ஐஞ்சு ரூபா கூடத்தாறன்... மீன் குங்சுகளைத் தா..." குச்சன் சஞ்சலப்பட்டுப் போய் நிற்பதை உணர்ந்த சீலன் தனது மூன்றாவது தாக்குதலை நடத்துகிறான்.

குச்சன் வீழ்ந்து விட்டான்.

சீலன் மீன்குஞ்சுகளோடு புறப்படுகின்றான்.

குச்சனின் பிஞ்சுப் கைகளுக்குள் இருபத்தைந்து ரூபா... திகைத்துப் போய் நின்கின்றான்!குச்சன்!

"...என்ன குச்சன் யோசிக்கிறாய்... யோசிக்காதை... எங்களைப் போலை ஆக்களுக்கு இதுதான் முடிவு...

"...யேசு கூட ஒரு முறைதான் முள் முடி தாங்கினவர்... ஒரு முறையை சிலுவை சுமந்தவர்... ஆனால் எங்களுக்கு..."

தினசரி வறுமை என்ற சிலுவை... கண்ணீர் என்ற முள்முடி எங்களைப் பெட்டியுக்கை வைக்கும் வரை இவைகளை இறக்கப் போறதில்லை.

குச்சன் பச்சைப்பாலன்... அவனுக்கு இந்த அனுபவப் பேச்சுக்கள் புரியப் போவதில்லை என்பது கபிரியேலுக்குத் தெரியாமலில்லை. இருந்தும் குச்சனுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைப் புரிந்து கொண்டால் ஏற்பட்ட உணர்வு மேலீட்டால் தனது மனதில் பட்டத்தை அடிப்படியே கூறுகின்றான்.

கிபிரியேல் மிகவும் அனுபவசாலி. சமுகத் தாக்க ங்களுக்குள்ளாகி உணர்ச்சி வசப்படும் போது தோன்றுபவைகளை அப்படியே கூறிவிடுவான். ஆனால் அவனது பேச்சில் நிறைய அர்த்தங்கள் இருக்கும்...!

பாவன் குச்சன் அதே இடத்தில் விறைத்துப் போய் நின்கின்றான்!

வறுமையின் யதார்த்த நிலை... வறுமைக்கான பின்புலம் வறுமையின் வரலாறு... இவைகளைத் தொகுத்துப் பார்த்துச் சிந்திக்க அவனால் முடியுமா?...

பாம்பின் காலை பாம்பறியும் என்பார்களே... குச்சனின் மனவேதனையைத் தனதாக்கி உணர்கிறான் கபிரியேல்

"...டேய் குச்சன்... என்னடா யோகிக்கிறாய். ஆரைக்கிலோ பச்சை அரிவு வாங்கிக் கொண்டு போய்க்குடு... கஞ்சி காய்ச்சிக் குடிச்சிட்டுப் படுக்க வேண்டியது தான்... "எங்களைப் போலை ஆக்கள் தங்கச்சிக்கு சீனி பணிஸ் வாங்கிக் குடுக்க ஆசைப் படக்குடாது... சுவையாய் சாப்பிட ஆசைப்படக் கூடாது... எதலையும் ஆசைப்படக் கூடாது.

தினசரி... பசிக்குச் சாப்பிட்டால் அது போதும்..." இப்படிக் கூறிய கபிரியேல் தொடர்ந்தும் பாண் வண்டிலைத் துப்பரவாக்குவதில் ஈடுபடுகிறான்.

பாண் வண்டிலைத் துப்பரவாக்கியபடியே அவன் கதைக்கின்றான்... தனது பேச்சை யாராவது கேட்க வேண்டுமென்று அவன் எதிர்பாரக்கவில்லை... எதிர்ப்பார்ப்பதும் இல்லை...!

அவன் பேசுகின்றான்...

"... பிறந்த உடனை... இந்த மண்ணிலை என்ரை பிறப்பை உறுதிப்படுத்த பிறப்புப் பதிவு செய்ய வேணும்.

"... பதினாறு வயது வந்திட்டால்... இந்த நாட்டுப் பிரசை எண்டதை உறுதிப்படுத்த அடையாள அட்டை எடுக்க வேணும்..."

"...எல்லாப் பதிவுகளையும் செய்து போட்டு... அடுப்புக்கல்லிலை தலையை வைச்சு... இரைப்பபை வலிப்பெடுத்துப் படுத்திருக்கிறம்..."

"அதுக்குப் பிறகு ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்த வாக்குரிமைப் பதிவுசெய்ய வேணும்"

"... அதுக்கொரு பதிவில்லை...! அதைப் பற்றிக் கேட்டால்... அதுக்குப் பதிலுமில்லை...!?

"இரைப்பை வலிப்பெடுத்துச் செத்துப்போனால் அதுக்கொரு பதிவுண்டு... மரண அத்தாட்சிப்பத்திரம் !...?

"...எங்கடை வாழ்க்கை. பாண் போறணை மாதிரி வேந்து கருகிப் போறது தான் முடிவு..." இப்படிக் கூறிய படி வண்டிலைத் தள்ளிக் கொண்டு கபிரியேல் புறப்படுகின்றான்.

குச்சன் குந்தியிருந்த கல்லுமட்டும் கிடக்கிறது. குச்சனைக் காணவில்லை...!

நாளைக்குக் காலை இதே நேரம் இதே இடத்தில் இருவரும் சந்திப்பார்கள்...!...

ஜீவநதி தை 2010

**6**

# உணர்வுகள் கட்டுடைத்தால் ...?

யோகநாதன் விட்டெறிந்த ஐம்பது சத நாணயம் நிலத்தில் கிடந்த ஒரு கல்லில் மோதி தெறித்தெழும்பி திரும்பவும் நிலத்தில் விழுகிறது.

யோகநாதனின் கண்கள் சிவந்து போய் விட்டன! அவ்வளவு கோபம்.

கனகம் இப்படியொரு சம்பவம் நடக்குமென்று எதிர்பார்க்க வில்லை. கடந்த நாற்பது வருடங்களுக்குள் நடந்து முடிந்த இப்படியான சம்பவங்களின் தொகுப்பின் வலிமையால் நடந்த சம்பவத்தின் தாக்கத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அமைதியாக நின்கின்றான்.

அந்த ஐம்பது சதம் கிடக்கும் மண்ணின் மேற்பரப்பையும் யோகநாதனின் முகத்தையும் மாறி மாறிப் பார்க்கின்றாள், கனகம் என்ன நடந்ததென்பதைச் சரிவர அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

குண்டூசி விழுந்தால் சத்தம் கேட்கின்ற அமைதி என்று கூறுவார்களே அந்த அமைதி நிலவுகின்றது.

'வசந்த மாளிகை' என்று ஊர்மக்களால் சிறப்பாக அழைக்கப்படுகின்ற யோகநாதனின் வீட்டு முன் பிளேற்றின் கீழ் கனகம் நிற்கின்றான். முன் மண்டப வாசலோடு யோகநாதன் நிற்கின்றான். அவருக்குப் பின்னால் அவரது நண்பர்கள் சிலர் நிற்கின்றனர்.

நடந்து முடிந்த சம்பவத்தின் அடித்தளம் புரியாமல் நின்ற கனகம், சூழ்நிலையை அனுசரித்து சம்பவத்தின் விளக்கத்தைக் கேளாமல் குனிந்து அந்த ஐம்பது சத நாணயத்தை எடுத்து படிக்கட்டில் வைத்து விட்டுத் திரும்பவும் தான் நின்ற இடத்தில் வந்து அடக்கமாக நின்றான்.

'ஒரு ஐம்பது சதக் காசுக்கு என்னைப் பெறுமதி இல்லாதவனாக்கிப் போட்டாய் என்னடி...? நானென்ன ஊரைவிட்டு ஓடப் போறனே... அப்பிடி ஓடினாலும் உன்ரை ஐம்பது சதத்தைக் கொண்டு போய் கோட்டை கட்டிப் போடுவனே... எடி... ஒரு நாளைக்கு இந்தக் கையாலை எவ்வளவு காசு சிலவழிக்கின்றனெண்டு உனக்குத் தெரியுமே? ஒரு ஐம்பது சதத்துக்கு நம்பிக்கையில்லாமல் திருப்பிவிட்டிட்டாய்... அவ்வளவு திமிர்' யோகநாதன் வாய்க்கு வந்தபடி பேசுகிறார்.

கனகம் மௌனமாகவே நிற்கிறாள்.

'பிறகேனடி நிக்கிறாய்? எடுத்துக் கொண்டு போவன்'

'ஐயா... இப்ப என்ன நடந்து போச்சு? மாவாங்கக் காசு காணாது. அதுதான் வந்தனான். இல்லாட்டி...' கனகம் பயத்தில் குழைகிறாள்.

'என்னடி கனகம் கதைக்கிறாய். இண்டைக்கு இந்த ஐம்பது சதம் இல்லாட்டி உன்ரை சீவன் போகிடுமே'

இப்போது நான்கு மணி இன்று காலை எட்டு மணியிலிருந்து இந்த ஐம்பது சத நாணயம் தூக்கி எறியம்படும் வரையில் யோகநாதன் கனகத்திற்குக் கடன்காரன் தான்!

இன்று காலை, எட்டு மணிக்கு இரண்டு ரூபா பெறுமதியான அப்பத்தைக் கொண்டு வந்து கொடுத்த கனகம், 'பெரிய இடம்' என்ற பயத்தில் காசைக் கேட்காமல் போய் விட்டாள்.

அந்தக் காசைக் கேட்க வந்த இடத்தில் ஏற்பட்ட விளைவுதான் இந்த நிலை!

'எடி... இந்தக் கிராமத்தையே விலைக்கு வாங்கக் கூடியவன்ரி இந்த யோகநாதன்...' தனது பணத்தகுதியை மார்பு தட்டிக் கூறுகிறார் யோகநாதன். கனகம் மௌனமாகவே நிற்கிறாள்.

'அரிட்டைக் கேக்கிறம் எண்ட எண்ணம் வேண்டாமே. ஒரு ஐம்பது சதக் காசுக்கு வழியில்லாதவனாக்கிப் போட்டாய். உனக்குத் தான் மான வெக்கம் இல்லையெண்டால்... எனக்கும் இல்லையே எடுத்துக் கொண்டு போவன்'

'ஐயா... கோபப்படாமல் நான் சொல்லதைக் கொஞ்சம் கேளுங்கோ' கனகம் கெஞ்சுகிறாள்.

'என்னடி சொல்லப்போறாய்'

'ஐயா, நீங்கள் பெரிய மனிசன், உங்களிட்டைக் காசு கேக்கக்குடாதெண்டுதான் காலமை நான் பேசாமல் போனான். இப்பமா வாங்கக் காசு காணாது. லீவாய் இருப்பியள் எண்டுதான் வந்தனான். நீங்கள் குடுக்கவேண்டியதைக் குறைச்சுக் கொடுத்திருந்தியள். சிலவேளை கணக்குத் தெரியமால் விட்டிருக்கலாம் எண்டு நினைச்சுத் தான் திருப்பி விட்டனான். நம்பிக்கையீனப்பட்டில்லை'

'எனக்குக் காசுக் கணக்குத் தெரியாதே'

'மறந்திருப்பியள்...'

'இவளவை வெச்சுப் பழகிறன் மறதியில்லை. இந்த ஐம்பது சதத்திலையே மறதி. அப்பிடியெண்டாலும் உடனைத் தீர்க்க வேணுமே. நாளைக்கு வந்து கேட்டிருக்கலாம்'

'என்ரை சீவியமே இதிலை தானே'

'ஐம்பது சதத்திலை என்னடி பெரிய சீவியம்'

'எனக்குத் தர வேண்டிய காசைத் தானே நான் கேட்டன்' இப்படிக் கனகம் கேட்டுவிடலாம். கேட்கின்ற உரிமையுண்டு, நாக்குமுண்டு. அவள் நாக்குப் புரள மறுக்கின்றது. அந்தக் கேள்வியை அவளால் கேட்டு விட முடியவில்லை. அவள் மௌனமாக நிற்கின்றாள்.

இந்தக் கிராமத்தில் யோகநாதன் பெரிய மனிதர். கிட்டத்தட்ட நாற்பது வயதிருக்கும். பொருளாதாரப் பலம் மிக்கவர். இந்தக் கிராமத்தோடு தொடர்பு வைப்பதென்றால் யோகநாதனோடு தொடர்பு வைத்தால் சரி என்ற சிறப்புப் பெற்றவர். அவ்வளவு செல்வாக்கு.

கனகமும் இதே ஊரைப் சேர்ந்தவள் தான். 'அப்பக்காரக் கனகம்' என்று கூறினால் சகலருக்குந் தெரியும். பலகாரம் சுடுவதில் அவ்வளவு பிரபல்யமானவள். தினசரி பலகாரம் சுட்டு அதைக் கொண்டு திரிந்து விற்று அதில் வருகின்ற வருமானத்தில் வாழ்பவள்.

கால்பரப்பு நிலம் அதில் ஒரு குடிசை. இதுதான் அவளது சொத்து.

விடியப்புறம் நாலு மணிக்கெல்லாம் எழுந்துவிடுவாள். விடிய ஆறு மணிக்குள் ஏதோ முடிந்தளவு பலகாரம் சுட்டு பெட்டியில் வைத்துக் கொண்டு புறப்பட்டால், விற்று முடிந்த பின்புதான் வீடு திரும்புவாள்.

பழுத்து, காய்ந்து சுருங்கிய பேரீச்சம்பழம் போன்று தசைப் பிடிப்பின்றி எலும்பில் சுருங்கித் தொங்குகின்ற கறுத்த தோல். வயதால் வளைந்து கோள்விக்குறி போலான உடல், கழுத்தில் ஒரு கறுத்தக் கயிறு. பற்களின்றி உள்நோக்கி மடிந்து போயிருக்கும் உதடுகள். இந்த வயதிலும் இந்தக் கோலத்தோடு இவள்

சுறுசுறுப்பாகத் திரிவதைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் இருக்க முடியாது!

இன்று கனகம் அப்பம் சுட்டிருந்தாள். இப்படி அப்பம் சுடும் நாட்களில் யோகநாதன் வீட்டுக்கென்று சிலதொகை அப்பகளைச் சுட்டு புறம்புபடுத்திவைத்துக் கொள்வாள். ஆந்த அப்பங்களில் பால் நிறைந்து போயிருக்கும்.

பெரிய இடத்து வாய்களுக்குள் போகின்ற அப்பமல்லவா. 'ஆசைப் சாப்பாடு' சுவை அவசியந்தானே!

இன்று தன் வழமையான வியாபாரம் முடிந்து. புறம்புபடுத்தி வைத்திருந்த அப்பங்களை எடுத்துக் கொண்டு யோகநாதன் வீட்டுக்கு வந்து விட்டாள்.

'என்ன கனகம் இந்த வயதிலை உப்பிடி நெருப்புக்கை கிடந்தால் உடம்பு என்னத்துக்குதவும்' யோகநாதனின் மனைவி அவள் மேலுள்ள அக்கறையைக் காட்டிக் கொள்வதற்காக இப்படிக் கேட்ட போது,

'இந்த நெருப்புக்கை காயாட்டித் தங்கச்சி சுடலை நெருப்பிலை கருக வேண்டி வரும்' என்று தனது பொறுப்பைச் சிரித்தபடி கூறி முடித்து விட்டாள்.

அங்கு வந்த யோகநாதன் அப்பத்தை எடுத்து கடவாயால் பால் வளியவளியத் தின்று, அந்தச் சுவையில், 'கனகம் நீ எங்கடை குடும்பத்திலை அக்கறைதான். இனைச்சுத்தான் சுட்டிருக்கிறாள் ென்று கூறிவிட்டார். கனகத்திற்கு உள்ளூரப் பெருமைதான்! இந்த ஊர் பெரிய மனிதன் புகழ் மொழியில் பெருமை இருக்காதா என்ன?

அப்பத்துக்குரிய காசு... அதை அவள் கேட்கவுமில்லை அவர்கள் கொடுக்கவும் இல்லை.

இன்று பின்னேரம் நாலு மணியளவில் நாளைய பலகாரத்

தேவைக்காக மா வாங்கப் புறப்பட்டு காசு இல்லாததால் இங்கு வந்து விட்டாள்.

எவ்வளவு தான் கனகம் யோகநாதன் வீட்டாரின் அக்கறைக்குரியவளாக இருந்தாலும் என்றும் அவளை குசுனி வாசலோடு, அல்லது முன் பிகீளற்றின் கீழ் வைத்துக்தான் கதைப்பார்கள். முன் மண்டபத்திற் கூட ஏற அனுமதிப்பதில்லை.

காசுக்காக வந்தவள் வழமை போல் பிளேற்றின் கீழ் நின்று வேலைக்காரிடம் காசுக்குச் சொல்லி விட்டிருந்தாள்.

மொத்தமாக இரண்டு ரூபா

யோகநாதன் ஒன்றரை ரூபா மட்டும் கொடுத்து விட்டிருந்தார். இன்றைய தேவைக்கு அவ்வளவும் போதாமல் இருந்ததால் மிகுதி ஐம்பது சதத்தையும் தரும்படி வேலைக்காரனிடம் சொல்லி விட்டிருந்தாள் கனகம். அது யோகநாதனுக்குப் பிடிக்கவில்லை.

நண்பர்கள் மத்தியில் ஒரு ஐம்பது சதம் காசுக்காக, அதுவும் ஒரு அப்பக்காரி எப்படித் திருப்பிவிடலாம், அது தான் யோகநாதனின் கோபம்.

யோகநாதன் அந்த ஐம்பது சதக் காசைக் கொண்டு வந்து தூக்கி வீசி விட்டு நின்கின்றார்.

சிவந்த கண்கள் சிவந்ததுதான்! உணர்ச்சி வசப்பட்டு நின்கிறார் யோகநாதன்.

'சரி... சரி... யோகநாதன் வாருங்கோ. காகம் திட்டி மாடு சாகிறதே. உதுகளை வெக்க வேண்டிய இடங்களிலை வெக்க வேணும்' அவருக்குப் பின்னால் நின்ற ஒரு நண்பன் சமாதான முயற்சியில் இறங்குகிறான்.

'இல்லைப்பாருங்கோ, வீடு தேடிக் கொண்டு வந்திட்டாளே எண்டிட்டு வாங்கினம். ஏனக்கு எத்தினை தொல்லை. அதிலை

காசைக் குடுக்க மறந்திட்டன். இப்பவும் நான் உதைப் பற்றி யோசிக்கயில்லை. வேலைக்காரன் வந்து கனகம் இரண்டு ரூபா காசு வாங்கியரட்டாம் எண்டான். எனி இதுக்காக ஒழும்புப்போய் பொட்டி திறக்கிறதே. என்ரை இளையவன் வெச்சு விளையாடிக் கொண்டிருந்த காசை எடுத்துக் குடுத்து விட்டன். ஐம்பது சதம் குறைஞ்சு போச்சு. அதுக்குத் திருப்பி விட்டிருக்கிறாள்'

'இதுகளைப் போலை ஆக்களிட்டைக் கடன் வெச்சால் இப்பிடித்தான். நேரங்காலந் தெரியாமல் வந்து நிக்குங்கள்' நண்பன் கூறுகிறான்.

'எடி எனக்கு உயிரை விட மானம் பெரிசடி'

'இப்ப உங்கடை மானத்துக்கு என்னையா வந்திட்டுது'

'எடி உனக்கு நான் கடன் காரனெண்டால் பிறகென்னடி'

'இந்த உலகத்திலை ஆரையா கடனாளியில்லை எல்லாகும் ஏதோ ஒரு விதத்தில் கடனாளியள் தான்'

'எடி நிண்டு கதைச்சு என்ரை மானத்தை வாங்காதை. உந்தக் காசை எடுத்துக் கொண்டு போ. எனிமேல் இஞ்சை வராதை'

'ஐயா... உங்களை அவமானப்படுத்த என்னாலை முடியமா? என்னைப் பாருங்கோ... தினசரி நெருப்பு வெக்கையுக்கை கிடந்து எரிஞ்ச கொள்ளிக்கட்டையாயப் போனன். இண்டைக்கோ நாளைக்கோ கட்டையிலை போக வேண்டியனான். நான் ஏன் உங்களை அவமானப் படுத்தப் போறன்' கனகம் மிகவும் தாழ்மையாகக் கதைக்கிறாள்.

'எடி நீ சரிக்குச் சரி கதை சொல்ல வெளிக்கிட்டிட்டாய் என்னடி' யோகநாதனுக்குக் கோபம் ஆறவில்லை.

'ஐயா அதிகம் ஏன் கதைப்பான். ஏனக்குத் தர வேண்டியதைத்

தானே கேட்டன்' இதுவரை கேட்கத் துணிவில்லாமல் இருந்தவள் இப்போது கேட்டு விட்டாள்.

'அதுதானே இஞ்சை கிடக்கு எடுத்துக் கொண்டு போவன். எனிமேல் இஞ்சை ஒண்டும் கொண்டு வெராதை. இருக்கிற மானமும் போகிடும்'

'என்னையா இப்பிடிச் சொல்லுறியள். குருவி ஒவ்வொரு தும்பாய் எடுத்துக் கூடு கட்டிறது போலை ஒவ்வொரு சதமாய் சேர்க்கின்ற காசிலைதான் சீவியம். உங்களைப் போலை என்னட்டையும் காசிருந்தால் நான் ஏன் இப்படி அலையப்போறன்'

'சரி சரி நடந்தது நடந்து போச்சு, என்ன செய்யிறது. கனகம் நீ ஐயா விட்டை மன்னிப்புக் கேட்டுப் போட்டுப் போ'

'நான் இப்ப என்ன தவறு செய்து போட்டன் மன்னிப்புக் கேக்கிறதுக்கு' கனகத்தின் பேச்சில் ஓரளவு வைரம் செறிந்திருக்கின்றது.

'நீ காசு கேட்டது பிழை தானே'

'நீங்கள் என்ன சொல்லுறியள்? ஏனக்குத் தர வேண்டிய காசை நான் கேட்டது பிழையே. இதென்ன ஞாயம்' கனகம் இறுக்கமாகவே கேட்கிறாள்.

யோகநாதனுக்கும், கனகத்திற்கும் நடுநிலைமை வகித்த அந்த நண்பன் மௌனமாக நிற்கிறான்.

யோகநாதனின் சிவந்த கண்கள் கடுஞ் சிவப்பாகின்றன.

'ஐம்பது சதத்துக்கு ஊம்பிற நாய்... ஞாயம் கதைக்கிறாய் என்னடி' யோகநாதன் திடீரென்று கூறுகின்றார்.

தலையைத் தாழ்த்தியிருந்த கனகம், தலையை நிமிர்த்தி யோகநாதனைப் பார்க்கின்றாள். அவளது முகம் சிவந்து, சில

வினாடிகளில் கருஞ் சிவப்பாகின்றது. யோகநாதனின் கண்களைப் போல.

அவளது பேரீச்சம்பழ உடல் நடுங்குகின்றது.

கட்டறுபட்ட அவள் சுயமரியாதை உணர்வு பெருங்காளையுருவெடுத்து அவளது இதயத்தைக் குத்திப் பிளக்கின்றது.

அவளது பார்வை கண் வெட்டாமல் தொடர்கிறது.

'என்னடி ஒரு மாதிரிப் பார்க்கிறாய்' யோகநாதன் அடிப்பது போல் கேட்கின்றார்.

'இப்ப என்ன சொன்னனீங்கள்' கனகம் நிதானமாகக் கேட்கின்றாள்.

'ஐம்பது சதத்துக்கு ஊம் பிற நாய்...'

'ஆர்'

'நீ தான்'

'ஐயா நாக்கும் வாயும் கிடக்கெண்டதுக்காக எதையும் கதைச்சுப் போடக்குடாது. ஐம்பது சதத்தையென்ன ஐம்பதினாயிரத்தையும் தூக்கியெறிய தைரியம் உங்களுக்கிருக்கு. ஆனால் நான் அப்படிச் செய்யேலாது இது நான் நெருப்புக் குளிச்சு சேத்த பணம். அது கின்ரை அருமை எனக்குத்தான் தெரியும். இந்த ஐம்பது சதம் இண்டைக்கு எனக்கில்லாட்டிமா வாங்கோலாது. பலகாரம் சுடேலாது.

நாளைக்கு என்ரை வயிறு கொதிக்கும். அதுக்கு நான் தான் பதில் சொல்ல வேணும்.

'எடி இப் உன்னைச் சுட்டுத் தள்ளுவன் பேசாமல் போ.

'நீங்கள் குடுக்கிறதை நேரத்தோடை குடுத்திருந்தால் நான் ஏன் வெரப்போறன். உங்களுக்கு கைவைச்சு எடுக்க அலுப்பு. எங்களுக்கு கை நீட்டிக் கொண்டு நிண்ட அலுப்பு'

'உங்களுக்கு மானப்பிரச்சனை, எனக்குப் பசிப் பிரச்சனை'

'நீ போப்போறியா... இல்லையா'

'நான் போகத்தான் போறன் என்னை நீ நாயெண்டு சொல்லிப் போட்டாய். நான் நாய் தான். நன்றியுள்ள நாய், பெட்டை நாய். அதிலையும் கிளட்டு நாய். ஆனால் ரோசங் கெட்ட நாயில்லை. நான் எனக்குச் சேர வேண்டிய காசுக்காக வாதாடுறன்'

'ஆனால் நீ உனக்குச் சேரக் கூடாத காசுக்காக வாதாடுகிறாய்'

'ஐம்பது சதத்துக்கு ஊம்பிற நாய்... நானில்லை நீ தான்' ஆத்திரத்தோடு பேசிய கனகம் குனிந்து அந்த ஐம்பது சதத்தை எடுக்கின்றாள்.

'எடி இவளவும் கதைச்சுப் போட்டு பறகேனடி உந்தக் காசை எடுக்கிறாய்'

'இது எனக்குச் சேர வேண்டிய காசு. இதை எடுக்கிறதிலை எனக்கென்ன வெக்கம்' நிதானமாகக் கூறிய கனகம் இங்கிருந்து புறப்படுகின்றாள்.

யோகநாதன் மௌனமாக நின்கின்றார்.

மல்லிகை யூலை 1977

# 7

# மிசின் பெட்டி

வீட்டின் இடது பக்கச் சுவரோடு செழித்து வளர்ந்து நிற்கும் செரி மரத்தின் கீழ் இராமநாதன் அமர்ந்திருக்கின்றார். காலுக்கு மேல் கால்போட்டு, கைவிரல்களுக்கிடையில் சிகரட் புகைய அவர் அமர்ந்திருக்கும் தோரணை கடந்த கால, நிகழ்கால வாழ்வின் செழுமைக்கு அளவு கோலிடுகின்றது.

வீட்டுக் கூரையால் தவறி விழுகின்ற எலிக்குஞ்சின் மயிர் முளைக்காத தோலைப் போன்று அவரது உள்ளங்கால் தோலின் மென்மை… பூமியில் படாத கால்கள்!

வயது அறுபதுக்கு மேல். ஆனால்… சிவந்து, பருத்த, தொந்தி விழுந்து, மினுங்குகின்ற உடற்கட்டு. பத்து வயது குறைத்துத்தான் மதிப்பிட வைக்கும். வயதுக்கேற்ற இயல்பான உடல் மாற்றங்களே அவரிடம் தோற்று விட்டன!

ஏதோவொரு ஆங்கிலப் புத்தகத்தில் மூழ்கிப் போயிருக்கின்றார்.

இவர் உட்கார்ந்திருக்கும் இடத்திலிருந்து பத்தடி தள்ளி, கிணற்றடிக்குப் போகின்ற பாதைக் கரையோடு மிகப் பருத்த ஒரு

தேமாமரம். அந்த மரத்தடியில் மூன்று சிறுமிகள் வாடிப் போய் உட்கார்ந்திருக்கின்றனர். சில தினங்கள் வெய்யிலில் கிடந்து தோல் சுருங்கிய குரும் பட்டிகளைப் போல்.

இவர்கள் 'குரும்பட்டிகளைக்' காய்த்து உதிர்த்த அந்தத் தென்னை மரம். ஆவர்களின் தாய் இந்த வீட்டில் ஏதோ வேலை செய்து கொண்டு நிற்கின்றாள். அவளது வருகைக்காக இவர்கள் காத்துக் கிடக்கின்றனர்.

'எடி கிளி... ... நாங்கள் சோறு சமைச்சு விளையாடுவமா' அவள் மலர் கேட்கின்றாள்.

கெங்கையம்மாவுக்கு ஆறு பிள்ளைகள். ஆறுமே பெட்டைக் குஞ்சுகள். கடற்கரை மணலில் துளையிடுகின்ற நண்டுக் குஞ்சுகளைப் போல்.

மலர் நாலாவது மகள். கிளி ஆறாவது கடைசிப் பெட்டை.

'எடி பேசாமல் இரு. சத்தம் போட்டால் ஐயா பேசுவா்' கிளிக்கு ஐந்து வயது தான் இருக்கும் இருந்தும், பிறப்போடு ஒட்டிய அந்த ஏழ்மை, அதனால் ஏற்பட்ட தாழ்வுச் சிக்கல்... அவள் கூறுகின்றாள்.

'சத்தம் போடாமல் விளையாடுவம்' இருவருக்குமிடையில் இருந்த தேவி கூறுகின்றாள்.

தேவி, ஐந்தாவது கடைசிக்கு மூத்தவள்.

சத்தம் போடாமல் சோறு சமைத்து விளையாடுவதென்ற முடிவுக்கு வருகின்றனர்.

'தேவி, நீ போய் சிரட்டை பொறுக்கிக் கொண்டு வா. நாங்கள் கல்லுப் பொறுக்கிக் கொண்டு வாறம்' மலர் கூறுகின்றாள்.

சில நிமிடங்களில் சிரட்டைகளும், கற்களும், இன்னும் சில பொருட்களும் வந்து சேருகின்றன.

இனி, விளையாட்டுக்கான கதாபாத்திரங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

'நான் அம்மாவாக வாறன்' ஒரு குடும்பத்தில் மிகப் பொறுப்பான 'தாய்' என்ற பதவியைத் தான் ஏற்றுக் கொள்வதாக வாய்விட்டுக் கூறுகின்றாள் மலர்.

பதவி பற்றிப் புரியாத வயது. இருந்தாலும் முக்கிய பதவியை வசிக்க வேண்டுமென்ற ஆசை.

அவளது ஆசையைத் தேவியும் கிளியும் ஏற்றுக் கொள்கின்றனர்.

'அப்ப நாங்கள்' தங்களின் பாத்திரங்களைத் தீர்மானித்துக் கொள்ளாத தேவியும், கிளியும் கேட்கின்றனர்.

'நீங்கள் இரண்டு பேரும் என்ரை புள்ளையள்'

'சரி...'

விளையாட்டுக்குரிய பொருட்கள் சேர்க்கப்பட்டு, விளையாட்டுக்குரிய பாத்திரங்களும் தெரிவு செய்யப்பட்டு விட்டன. இனி அடுத்தது விளையாட்டு.

'எடி தேவி, சூரியன் உச்சிக்கு வந்திட்டிது குந்திக் கொண்டிருக்கிறாய் போய் உலையை வையன்' தாய்ப் பாத்திரம் ஏற்ற மலர் தாயாகிக் கூறுகின்றாள்.

'உலையை வெச்சு என்ன செய்யிறது. அரிசி கிடக்கே...' மகளான தேவி கேட்கின்றாள்.

'ஏனடி அரிசி கொஞ்சமும் இல்லையே?'

'எங்காலை அரிசி?'

தாங்கள் இருப்பது தேமா மரத்தடி என்பதை முற்றாக மறந்து, பாத்திரங்களோடு இரண்டறக் கலந்து விட்ட நிலை. 'குழந்தைகள் ஒட்டுத்தாள்கள்' என்பார்கள். அவர்களின் பார்வைக்கு எவைகள் படுகின்றனவோ அவைகளையே அவர்களும் பின்பற்றுவார்கள் என்ற தத்துவத்தை அடியொற்றி... ...

இந்த விளையாட்டு, அவர்களது குடும்ப நிகழ்வுகளா?

செரி மரத்தடியிலிருந்த இராமநாதன் இவர்களின் விளையாட்டை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றார்.

விளையாட்டுத் தொடர்கின்றது 'இனி ஓடிப்போய் கடையிலை அரைக் கொத்து அரிசி வாங்கிக் கொண்டு வா' மலர் கூறுகின்றாள்.

'நான் மாட்டன்'

'ஏன்?'

'நேத்துக் கடையிலை பேசினவை'

'என்னண்டு'

'கடன் முட்டிப் போச்சாம் எனிமேல் கடனுக்கு வரவேண்டாம எண்டு சொன்னவை'

'பின்னேரம் தாறனெண்டு சொல்லு'

'மாட்டனெண்டு சொல்லாமைப் போட்டுவா கிளி'

'அப்ப என்னடி செய்யிறது. மிசின்பெட்டி வாற நேரமாகிது. மிசின் பெட்டி காலமையும் சாப்பிடயில்லை. வெறு வயித்தோடைதான் போனது' மலர் எரிந்து விழுகின்றாள்.

குழந்தைகள் ஒட்டுத்தாள்கள். குடும்ப நிகழ்வுகள்?!

இவர்களின் விளையாட்டை அவதானித்துக் கொண்டிருந்த இராமநாதனால் அந்த 'மிசின் பொட்டி' என்றதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

விளையாட்டு நிகழ்கின்றது. 'எடி தேவி நீ போட்டு வாறியா

'நான் போறன், அப்பிடியெண்டால் ஒண்டு நீ செய்வியா?'

'என்ன...'

'நீ உப்பிடித்தான் சொல்லுவாய், பிறகு கஞ்சி வடிச்ச உடனை எல்லாருக்கும் குடுப்பாய்'

'இல்லை நான் குடுக்கமாட்டன்'

தேவி எழுந்து செல்கிறாள்.

'மிசின் பொட்டி வந்திடப் போகுது கிளி, நீ ஓடிப்போய் முருக்கமிலை புடுங்கிக் கொண்டு ஓடிவா'

திரும்பவும் அதே 'மிசின் பொட்டி' என்ற சொல்லு இராமநாதனால் புரிய முடியவில்லை.

'ஒவ்வொரு நாளும் முருக்கமிலையே தின்னிறது'

'எடி போட்டுவாடி மிசின் பொட்டி வெரப்போகுது'

சோறுகறி சமைத்து விளையாடுவதற்கும் மிசின் பொட்டிக்கும் என்ன சம்பந்தம்? இராமநாதன் தீவிரமாகச் சிந்திக்கின்றார். இடையில் குறுக்கிட்டு அவர்களது விளையாட்டைக் குழப்பிக் கொள்ளவும் அவர் விரும்பவில்லை.

அந்தக் குழந்தைகள் மேலுள்ள பற்றுதலாலல்ல. அவர்களது நடிப்பிலுள்ள உணர்ச்சி வெளிப்பாட்டால் ஏற்பட்ட கவர்ச்சி ஒரு நடிக மேதையால் கூட பயிற்றுவித்து விட முடியாத நடிப்பு.

மீன் குஞ்சின் நீச்சல்! அதிலுள்ள லாவகம் இவைகளை யாருமே கற்பித்ததில்லை. மீன் குஞ்சின் பிறப்பு நீருக்குள். இவர்களின் பிறப்பு வறுமைக்குள் இவர்களின் நாடித் துடிப்பின் ஓசை கூட, 'வறுமை, வறுமை' என்று தான் கேட்குமாம்.

இவைகளை இராமநாதனால் புரிந்து கொள்ள முடியுமா? 'மிசின் பொட்டி' இதுதான் அவரது பிரச்சினை!

'மலர்' விளையாட்டைக் குழப்பக் கூடாதென்று அவர் எண்ணினாலும் அவரால் பொறுக்கவே முடியவில்லை. மலரை அழைக்கின்றனர்.

'ஐயா...' விளையாட்டிலிருந்து விடுபட்ட மலர் எழுந்து வருகின்றாள்.

'என்னடி அது, மிசின் பொட்டி'

'அம்மா அப்பிடித்தான் சொல்லுறவ'

'ஏனடி சொல்லுறவ?'

'ஏனெண்டு எனக்குத் தெரியாது' தாய் கெங்கையம்மா அடிக்கடி கூறுவதை மலரும் கிளிப்பிள்ளை போல் கூறி விட்டாள். காரணம் தெரியாது.

'குழந்தைகள் ஓட்டுத்தாள்கள்'

'சரி போ...'

மலர் திரும்பவும் தேமாமரத்தடிக்கு வருகின்றாள். விளையாட்டுத் தொடர்கிறது. கடைக்குப் போவது போல் சென்றுப் தேவி வருகின்றாள்.

'என்னவாமடி'

'இதுதான் கடைசி முறையாம்'

முருக்கமிலை பிடுங்கப் போன கிளியும் வருகின்றாள்.

‘தேவி, நெருப்புப் பெட்டி எங்கை'

'அது ராத்திரி முடிஞ்சு போச்சு'

'அப்ப ஒரு பொச்சுமட்டை கொண்டு போய் உங்காலை கொஞ்சம் நெருப்புத்தணல் வாங்கி வாறியா'

'நான் மாட்டன்'

'ஏனடி.....'

'நெருப்புத் தணலுக்கு வழியில்லாத மூதேசியள்' எண்டு அண்டைக்குப் பேசினவை.

'நான் போட்டுவாறன்...' மலர் எழும்பிப் போகின்றாள்.

'போறா... பேச்சு வாங்கப் போறா...'

'பேசினாப் பேசட்டன்' இதென்ன புதிசா' சிறிது தூரம் சென்றவள். ஒரு பொச்சுமட்டையை கையில் கொண்டு வருகின்றாள். அது இரவல் நெருப்பு

கற்களை அடுப்பாக்கி சிரட்டைகளைச் சட்டிபானையாக்கி மணலை அரிசியாக்கி, முருக்கமிலையைக் கறியாக்கி, வெறும் பொச்சு மட்டையை நெருப்பாக்கி சமையல் நடக்கின்றது.

'மலர், எங்கடை வயித்துக்குள்ளை அடுப்பிருக்கா?' விளையாட்டு நிலையிலிருந்து விடுபட்ட தேவி மலரிடம் இப்படிக் கேக்கின்றாள். அவளுக்கு இப்படியொரு சந்தேகம்.

'ஏனடி...?'

'நெருப்புச் சுட்டு எரியிறது போலை என்ரை வயித்துக்கள்ளே அடிக்கடி எரியிது.

'அது பசி நெருப்பு' என்று சொல்லிவிட மலருக்குத் தெரியவில்லை. அவள் சிரிக்கின்றாள்.

'இண்டைக்குக் கஞ்சி முழுக்க எனக்குக் தரவேணும்' கடைக்குப் போகும் போது எற்படுத்திக் கொண்ட கஞ்சி ஒப்பந்தத்தைத் தேவி நினைவு படுத்துகின்றாள்.

'கஞ்சி எல்லாத்தையும் நீ குடிச்சால் மற்றவை என்ன செய்யிறது' மலர் கஞ்சி ஒப்பந்தத்தை மீறுகின்றாள்.

'உப்பிடியெண்டால் எனக்கு இண்டைக்கு ஒண்டும் வேண்டாம்'

'மிசின்பொட்டி வெரட்டும் 'ரொபிக்குக் காசு தாறன்...' கஞ்சியை நிராகரித்த மலர். இப்போது தேவியைச் சமாளிப்தபற்காக புதிதாக ஒரு 'ரொபி ஒப்பந்தத்தை' ஏற்படுத்திக் கொள்ளகின்றாள்.

தேவிக்கு மிகத் திருப்தி.

'மிசின் பொட்டி வெரட்டுந் தாறன்' என்று மலர் தேவிக்குக் கூறியதும். இராமநாதன் மனம் திரும்பவும் கிண்டப்படுகின்றது. இப்பிரச்சினைகளை மௌனத்தால் வெல்லுகின்ற அந்த அனுபவ முதிர்ச்சி அவர் மௌனமாகவே இருக்கின்றார்.

சுமையல் முடிகின்றது.

'வாருங்கோ சாப்பிடுவம்'

மூவரும் அமர்க்கின்றனர். மூவருக்கும் மூன்று இலைகள் வைக்கப்பட்டு சிரட்டைக்குள் இருந்த மணலைச் சோறு போல் சிரட்டைகக்குள் பங்கிடுகின்றாள் மலர். கறியும் பங்கிடப்படுகின்றது.

புறம்பான இன்னொரு இலையிலும் சோறுகறி வைக்கப்பட்டு அதைச் சிரட்டையால் மூடுகின்றாள் மலர்

'எல்லாருக்கும் சரியாகப் பங்கிட்டுருக்கு பிறகு கேக்கக்குடாது'

'அப்ப கஞ்சி ஆருக்கு'

'அது இரவைக்கு'

'புறம்பாக ஆருக்கு வெச்சனி'

'அது மிசின் பொட்டிக்கு'

'அதிலை கொஞ்சம் தாவன்.

'மிசின் பொட்டி பாவம். காலமையும் வெறுங்குடலோடை போனது.

விளையாட்டு முடிகின்றது.

'மலர்' இராமநாதன் திரும்பவும் அழைக்கின்றார்.

'ஐயா... ...'

'கெங்கையம்மாவை வெரச் சொல்லு'

மலர் தாயைக் கூப்பிடப் போகின்றாள். தேவியும், கிளியும் விபரம் புரியாமல் பயந்து போய் நிற்கின்றனர்.

கெங்கையம்மா வருகின்றாள். 'ஐயா கூப்பிட்டீங்களா'

'ஓம். இஞ்சாலை வா...'

'சொல்லுங்க..'

'மிசின் பொட்டி யெண்டால் என்ன?' அவர் தனது சந்தேகத்தை நேரடியாகவே கேட்கின்றார்.

கேங்கையம்மா சீலைத் தலைப்பால் வாயை மூடிக் கொண்டு சிரிக்கின்றாள்.

'என்னடி சிரிக்கிறாய்'

'நான் அப்பிடித்தான் சொல்லுறனான்'

'என்னத்தைச் சொல்லுறனி'

'என்ரை புருஷனை' புருஷனை மனைவி மிசின் பெட்டி என்றா கூறுவாள் இராமநாதனின் முகத்தில் ஆச்சரியம் கலந்த கேள்விக் குறி.

'ஏன் அப்பிடிச் சொல்லுறனி.

என்னைப் போலை அவரும் ஒரு முதலாளி ஐயாவின் பங்களாவிலை தான் வேலை செய்யிறார். அந்த முதலாளி ஐயா இவரை மிசின் பெட்டி என்று தானாம் கூப்பிடுவார். ஆதைத்தான் நானும் சொல்லுறனான்.

'அந்த முதலாளி ஐயா ஏன் அப்பிடிச் சொல்லுறவர்

மிசின் இயக்கி விட்டால் நிப்பாட்ற வரையில் வேலை ெய்யும். அது போலை செய்வாராம். ஆதனாலைத்தான்

அவளால் இப்போது சிரிக்க முடியவில்லை. முகத்தில் வேதனைக் கோடுகள்.

தொழிலாளி ஒரு மனித யந்திரம். அந்தத் தொழிலாளி யந்திரம் இறுதி மூலச்சுவரை உழைத்துக் கொண்டெ இருக்கும் ஆனால் அந்த உழைப்பின் ஊதியங்கள் என்றுமே அவனை சேர்வதில்லை.

இரும்பாலான இயந்திரங்கள் புதுப்பிக்கப்படுவதன் மூலம் தங்களின் உழைப்பின் ஒரு பகுதியையாவது பெற்றுக் கொள்கின்றன!

மிசின் பொட்டி'

உலகை வியாபகமான இந்த நிகழ்வுளை கெங்கையம்மா புரியாதளவளாய் பேசுகின்றாள்.

இராமநாதன்...? அவர் குனிந்த தலை நிமிரவில்லை.

மல்லிகை மாசி 1982

# 8

# நாய் மூளை

றொக்சன் ஆசிரியத் தொழிலைத் தேடிச் சென்றனவல்ல. படித்து விட்டுத் தொழிலின்றி இருந்த போது கிடைத்த இந்த ஆசிரியத் தொழிலை விருப்போடு ஏற்றுக் கொண்டு முடிந்தவரை மனச் சாட்சியோடு பணிபுரிபவன்.

நற்பிரசைகளை உருவாக்கும் உன்னதமான நிலையங்கள் தான் பாடசாலைகள் என்ற தத்துவத்தைக் கல்வியியலாளர்கள் கூறிக் கொண்டாலும், தற்போதைய கல்வி நிலையங்கள் மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார் செய்யும் இடங்களாகவே செயற்பட்டு வருவதை றொக்சன் தெளிவாகப் புரிந்து வைத்திருந்தான்.

றொக்சன் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. இருபத்தேழு வயது மதிப்பிடலாம், சிவந்த மெலிந்த தோற்றம், அடர்ந்த கட்டையான சுருண்ட கேசம், மிதித்த இடத்தில் புல்லும் சாகாத பதுமையான நடை, மிகவும் கூர்மையான கண்கள், எவரையும் மிக இலகுவாக மதிப்பிட்டுக் கொள்ளும் சமூக ஆளுமை, அவசரப்படாத திட்டமிட்ட செயற்பாடு, எதையும் ஏற்றுக் கொள்ளும் பண்பட்ட மனப் பக்குவம்... இன்றைய சமூக நடைமுறைகளோடு இவனது பண்புக் கூறுகளை

ஒப்பிட்டு நோக்கினால் இவன் ஒரு வித்தியாசமான மனிதனாகவே தென்படுவான்.

பல்கலைக்கழகப் படிப்பை முடித்துக் கொண்டு 'விஞ்ஞானப் பட்டதாரி' என்ற 'லேபிளுடன்' விண்ணப்பங்கள், நேர்முகப் பரீட்சைகள் என்ற முயற்சியுடன் இரண்டு வருடங்கள் கழிந்தன!

"என்னடா தம்பி... உனக்கொரு வாத்தி வேலை கூடக் கிடைக்கயில்லையா?" என்று கேட்குமளவிற்குச் சமூகச் சூழ்நிலை உருவாகி வீட்டிலும் குசினிக்குள் மௌனமாக நச்சரிப்புக்கள் சிறுகச் சிறுக ஆரம்பமாகியிருந்தன.

றொக்சன் இடையிடையே 'வயரிங்' வேலைக்குச் செல்வான், வேலை இல்லாத நாட்களில் தாயோடு சந்தைக்குச் தேங்காய் வியாபாரம் செய்யச் செல்வான். தினசரி ஏதோ வேலை செய்து கொண்டுதானிருந்தான். இருந்தாலும், அவனது பெற்றோர் நீளக்களிசான் போட்டு உத்தியோகம் பார்த்து மாதம் மாதம் சம்பளமெடுப்பதைத்தான் விரும்பினர்.

"எனது மகன் கவுண்மேந்து வேலை செய்யிறான்" என்று கூறிக் கொள்வதில் ஒவ்வொரு பெற்றோரும் திருப்தி அடைந்து கொள்கின்ற பொதுவான இயல்புக்கு றொக்சனின் பெற்றோரும் விதி விலக்காகி விட முடியுமா?...

இந்தச் சூழ்நிலையில்...

அரசாங்கத்துக்குள் வழமையாக ஏற்படுகின்ற இழுபறிகள் ஏற்பட்டு, அந்த இழுபறிகள் விஸ்வரூபமெடுத்து அரசாங்கம் கலைக்ககப்பட்டு புதிய தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டது. வழமை போல் வேட்பாளர்கள் மக்களை நோக்கி வந்தனர். குசினிக்குள் புகுந்து, திருவலைப் பலகையில் குந்தியிருந்து, குழந்தைகளைத் தூக்கிக் கொஞ்சினர்.

வாக்குகள் ஊற்றெடுக்கும் 'பொக்கணைகளை'க் கண்டறிந்து வேலை வாய்ப்புக்கள் வழங்கினர். ஆஸ்பத்திரி லேபர் வேலை, சமூர்த்தி வேலை, அலுவலகப் பியூன் வேலை இவைகளோடு ஆசிரியர் வேலை இப்படி அரசாங்க வேலைகள் கிள்ளித் தெளிக்கப்பட்டன.

இந்தக் கிராமத்தில் றொக்சன் நீதியான ஒருவன் என்று மதிக்கப்பட்டதால், அவனைத் தனது பக்கத்தில் வைத்திருக்க வேண்டியதொரு தேவை வேட்பாளருக்கேற்பட்டு, றொக்சனுக்கு ஒரு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது.

“சமூகம் என்பது ஒரு கழுதை, அந்தக் கழுதைக்கு முன்னால் சென்றால் கடிக்கும், பின்னால் சென்றால் காலால் அடிக்கும்” என்று கூறுவார்களே, அதுபோல றொக்சனைப் பற்றி அக்கறைப்படாதவர்கள் இப்போது அக்கறைப்பட்டு சமூக நீதி கதைத்தனர்!

“என்னடா றொக்சன்... ஒரு வாத்தி வேலைக்காக வேசையாடலாமா” என்ற நக்கலடித்தனர்.

எதிரிகளுக்கும், விரோதிகளுக்குமிடையிலுள்ள வேறுபாடுகளை நன்றாகவே றொக்சன் புரிந்து வைத்திருந்தான். அதனால் தன்னை நக்கலடித்தவர்களுக்குப் பதில் சொல்ல அவன் விரும்பவில்லை.

தேர்தலில் சமூகம் நன்மையுடையுமோ என்னவோ... றொக்சனை போன்ற படித்த சிலர் நன்மையடைந்தனர்.

மகாலிங்கம் - சொர்ணம் குடும்பத்தில் கடைசியாகப் பிறந்தவன்தான் றொக்சன். மகாலிங்கம் அயற் கிராமங்களுக்குச் சென்று தேங்காய்கள் வாங்கி வருவான். சொர்ணம் அத்தேங்காய்களை நகரச் சந்தையில் விற்பனை செய்வாள். றோக்சன் சிறுவனாக இருந்த போது மட்டுமல்ல, பல்கலைக்கழக

மாணவனாக இருந்தபோதும், பட்டதாரியான பின்பும் கூட தாயோடு சந்தையில் தேங்காய் வியாபாரம் செய்யச் செல்வான்.

சற்சதுர வடிவில் அமைந்துள்ள அந்தச் சந்தையின் வடமேற்கு மூலையில், பிரதான வாசலை அண்மித்து நிற்கும் புளிய மரத்தின் கீழ்தான் தேங்காய் வியாபாரிகள் கூடுவார்கள். முப்பது ரூபா, இருபத்தைந்து ரூபா, இருபது ரூபா என்ற விலைகளில் தேங்காய்களைப் பகுதி பிரித்து சிறுகுவியல்களாக அடுக்கி வைத்து அவற்றிற்கு பின்னால் சாக்கை விரித்து சொர்ணமும் றொக்சனும் அமர்ந்திருப்பார்கள்.

“தம்பி... றொக்சன்... நீ என்னோடை சந்தைக்கு வராதையப்பு... உன்னோடை படிக்கிற புள்ளையள் கண்டால்... உன்னைப் பற்றி கேவலமாக நினைக்குங்கள்...” றொக்சன் பல்கலைக்கழக மாணவனாக இருந்த போது சொர்ணம் ஒரு நாள் இப்படிக் கூறினாள். றொக்சன் சிரித்துக் கொண்டானே தவிர, தாய்க்கு எதுவுமே அவன் கூறவில்லை. கிராமப்புறத்தில் பிறந்து வளர்ந்து, வறுமைத்தணலில் வெந்த... படிப்பில் குறைந்த ஒரு தாய் இப்படித்தான் சிந்திப்பாள் என்ற சமூக இயங்கியல் யதார்த்தத்தை றொக்சன் நன்றாகவே புரிந்து வைத்திருந்தான்.

றொக்சன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான போது, அவனது குடும்பத்திலுள்ளவர்கள் பெருமைப்பட்டுக் கதைத்த கதைகள்... இரவிரவாக முத்தத்திலுள்ள வேப்பமரத்தின் கீழ் அமர்ந்திருந்து சொர்ணமும், மகாலிங்கமும் கதைத்த கதைகள்... இனிமேல் றொக்சன்தான் இந்த நாட்டின் தலைவன் என்ற தோரணையில் தான் அவர்கள் கதைத்தனர்!

பல்கலைக்கழகங்கள் முதலில் விடைகளைக் கொடுத்து அதன் பின் பரீட்சை என்ற பெயரில் வினாக்களைக் கொடுத்து... அதன் பின் பட்டங்களை கொடுத்து மாணவர்களை வீதிக்கனுப்பும் ஒரு கல்வி நிலையமே தவிர, வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒரு சமூக

முனைப்புடைய நிலையமல்ல என்ற உண்மையை மகாலிங்கம் சொர்ணம் போன்ற பாமரக் குடும்பங்களால் உணர முடியுமா?

றொக்சன் விஞ்ஞானப் பட்டதாரியாக இருந்ததால் அவனுக்கு அப்பகுதியிலுள்ள பிரபலமானதொரு கல்லூரியில் நியமனம் கிடைத்தது. நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள், ஆயிரக் கணக்கான மாணவர்கள்...!

கல்லூரியில் உள்ள ஆசிரியர்களிலும், மாணவர்களிலும் கணிசமானோர் ஏற்கனவே றொக்சனைத் தெரிந்து வைத்திருந்தனர்.

"...சந்தையுக்கை தேங்கை விக்கிற சொர்ணத்தின்ர பொடியன்தான். புதிசாய் வந்திருக்கின்ற சயன்ஸ் மாஸ்ரர்: பொடியன் அடக்கமான பண்பான புள்ளை" இப்படித்தான் கல்லூரியில் றொக்சனைப் பற்றிப் பேசிக் கொண்டனர். இக்கல்லூரியின் விஞ்ஞான ஆய்வு கூடப் பொறுப்பும் மேலதிகமாக றொக்சனுக்கு வழங்கப்பட்டது.

றொக்சனுக்கு சமூக யதார்த்த நிலைகளில் தெளிவிருந்ததாலும், பொறுப்புணர்வோடு விடயத் தெளிவும் இருந்ததால், இவனது வகுப்புகள் கலகலப்பாகவே நடைபெற்றன. மாணவர்களிடம் பாட விடயங்களைத் திணிக்காமல் மாணவர்கள் விடயங்களைச் சுவைத்து அசைபோடுமளவிற்கு சுவையாகக் கற்பித்தான்.

அதுமட்டுமன்றி மாணவர்களை சமூக ரீதியாகச் சிந்திக்கத் தூண்டும் அளவிற்கு செயற்பட்டுக் கொண்டான்.

சமூகப் பிரச்சினைகளை கூறி விடை தேட வைப்பான்.

சிந்திக்கத் தூண்டும் கேள்விகளைக் கேட்பான்.

புதிரான கணக்குகளைக் கேட்பான்.

"உங்கள் முன் கடவுள் தோன்றி உனக்கு விருப்பமான ஒன்றைக்கேள் தருகிறேன் என்று உங்களிடம் கேட்டால் நீங்கள்

என்ன பதில் கூறுவீர்கள்" என்று ஒரு நாள் கேட்டு பதிலை ஆயத்தம் செய்யவிட்டான். இன்னொருநாள், "உங்களை முதல் மந்திரியாக்கினால் நீங்கள் இந்த நாட்டுக்கு என்ன செய்ய விரும்புவீர்கள்" என்ற கேட்டு மாணவர்களை தேசிய ரீதியாகச் சிந்திக்கத் தூண்டினான்.

"நீங்கள் ஒரு நீதிபதியாக இருக்கிறீர்கள். உங்கள் முன் ஒரு குற்றவாளி நிற்கின்றான்... அந்தக் குற்றவாளி குற்றம் செய்யவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் சாட்சிகளின் பொய்யான வாக்கு மூலங்களின் படி அந்தக் குற்றவாளிக்குத் தண்டனை வழங்க வேண்டிய சூழலில் நீங்கள் இருக்கிறீர்கள். தண்டனை வழங்குவீர்களா... அல்லது விடுதலை செய்வீர்களா..." இப்படியும் ஒரு நாள் கேட்டு சட்ட ரீதியான சிந்தனையை மாணவர்களிடம் தூண்டினான்.

இக்கல்லூரியில் ஏ.எல் விஞ்ஞானப் பிரிவில் பதினைந்து மாணவர்கள் இருந்தார்கள். றொக்சன் மாஸ்ரரின் புதிதான கேள்விகளுக்கு இந்தப் பதினைந்து மாணவர்களில் பதினான்கு மாணவர்களுக்கு... சரியோ, பிழையோ ஏதாவது பதிலைக் கூறி விடுவார்கள். ஆனால் பதினைந்தாவது மாணவனாக இரந்த சுபதீசன் மட்டம் மௌனமாக இருப்பான்.

றொக்சன் மாஸ்ரரின் கணிப்பீட்டின்படி வகுப்புப் பாடங்களை ஒழுங்காகவும், திறமையாகவும் செய்து கொள்ளும் சுபதீசன் மந்தமான மாணவனல்ல என்ற முடிவிருந்தது.

பாடம் சம்பந்தமான கேள்விகள் கேட்டால் ஒழுங்காகப் பதில் கூறுவான். அதேவேளை சமூகம் சம்பந்தமான புதிர்க்கேள்விகள் கேட்டால் மௌனமாக நிற்பான்.

றொக்சன் மாஸ்ரர் சுபதீசனைக் கூர்ந்து அவதானிக்க ஆரம்பித்தார். சுபதீசனின் முகத்தில் அப்பியிருக்கும் துன்ப உணர்வுகள் இலேசாகத் தென்பட்டன. இவனுக்குப் பின்னால்

ஏதோவொரு துன்ப வரலாறு உண்டென்பதை மட்டும் றொக்சன் மாஸ்ரரால் உணர முடிந்தது.

சுபதீசன்

மெலிந்த தோற்றம், பொது நிறத்தை விட சிறிது கருமை கூடிய நிறம், பக்கவகிடிட்ட அடர்த்தியான கேசம், இலேசான முன்னோக்கி மிதந்த பற்கள், குழிவிருந்த கண்கள், எதிலுமே பற்றற்ற நிலை, வருவான். வகுப்பில் இருப்பான். பாடங்களை ஒழுங்காகச் செய்வான்... வகுப்பு முடிய... விளையாட்டு மைதானம், றோட்டுக்கரை, கூத்துக்கும்மாளங்கள் என்று எதிலுமே ஈடுபடமாட்டான்... வீட்டுக்குச் சென்று விடுவான்.

பசுபதி, நல்லம்மா குடும்பத்தில் பிறந்த ஒரே மகன் தான் சுபதீசன், இக்கல்லூரி அமைந்திருக்கும் நகரத்திலிருந்து வடக்குப்பக்கமாக ஏறத்தாழ மூன்று கிலோமீற்றர் தூரத்தில் வயல் கரைப்பக்கமாக இவர்களது வசிப்பிடம் அமைந்திருந்தது.

ஐந்தாம் வகுப்புக்குட்பட்டதொரு சிறிய பாடசாலை, அந்தப் பாடசாலையை அடுத்து ஒரு முருகன் கோவில், அதையடுத்து பசுபதியின் கொட்டில் வீடு அமைந்திருந்தது. பசுபதி அக்கிராமத்திலுள்ள நாகரத்தினம் என்ற மேசனோடு கூலியாளாகச் செல்வான், நல்லம்மா கிராமத்துள் ஏதாவது கூலி வேலைக்குச் செல்வாள். இனப்பிரச்சினையால் கட்டிடப் பொருட்களின் வரவு தடை செய்யப்பட்டதால் கட்டிட வேலையாட்களுக்கு வேலை இல்லாமல் போய் விட்டது. அதேபோன்று கிராமத்தில் கூலி வேலைகளும் இல்லாமல் போய் விட்டதால் பசுபதியின் குடும்பத்தில் பெரும் பஞ்சம் நிலவியது.

ஆறு கப்புக்கள் நாட்டப்பட்டு, அதில் சில மரங்களைப் பொருத்தி கூரையாக்கி கிடுகினால் வேயப்பட்டதொரு கொட்டில், அந்தக் கொட்டிலின் ஒரு மூலையில் மூன்று அடுப்புககற்கள், அதுதான் அவர்களின் குசினி. குசினிக்கு எதிராகவுள்ள மூலையில்

தொங்க விடப்பட்டதொரு சாக்கு... இந்தச் சாக்கின் மீது தான் சுபதீசன் தனது புத்தகங்களை வைப்பான்.

அந்தக் கொட்டில் வீட்டின் கூரைக்கிடுகள் உக்கி, பொத்தல் விழுந்து... மாரி காலத்தில் பசுபதியும் நல்லம்மாவும் சுபதீசனும் பக்கத்திலுள்ள அந்தச் சிறிய பாடசாலைக்குள் படுத்துக் கொள்வார்கள்.

இப்பாடசாலைக்கு புதிதாக வந்ததொரு அதிபர் இரவில் அப்பாடசாலைக்குள் சுபதீசன் இருந்து படிப்பதையும், சுபதீசனின் குடும்பத்தினர் இரவில் அங்கு தங்குவதையும் சட்ட விரோதமான செயலெனச் சுட்டிக்காட்டித் தடை விதித்து விட்டார்.

மழைக் காலத்தில் மூவரும் அந்தக் கொட்டிலுக்குள் யூரியாப் பையினால் தலையை மூடிக் கொண்டு குந்தியிருப்பார்கள்.

கறள் பிடித்த அச்சாணி... அதில் கரடுமுரடாகச் சுற்றுகின்ற ஒரு சக்கரம் போல் அவர்களின் வாழ்க்கை சுழன்றது.

ஒரு நாள் அதிகாலை... நான்கு மணியிருக்கும்... படையினர் அக்கிராமத்தைச் சுற்றி வளைத்தனர். பசுபதியின் குடிசைக்குப் பக்கத்திலுள்ள முருகன் ஆலயத்துள் குண்டுகள் ஒளித்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறி... கோவிலைச் சல்லடை போட்டுத் தேடினர்... கிராமத்து மக்கள் மழையில் நனைந்த கோழிக்குஞ்சுகள் போல் குறாவிப் போய் நின்றனர்...

பலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். முருகன் கோவிலுக்குப் பக்கத்து வீட்டுக்காரன் என்ற காரணத்தினால் பசுபதியும் கைது செய்யப்பட்டான்.

பொழுது விடிந்தது... ஆனால் அக்கிராமத்து வாயில்லாப் பூச்சிகளின் துயரங்கள் வடியவுமில்லை... விடியவுமில்லை!

கைது செய்யப்பட்டவர்கள் வீடு திரும்பவுமில்லை.

கைது செய்யப்பட்டவர்கள் உயிருடன் திரும்ப வேண்டுமென் வேண்டி. அந்த முருகன் கோவிலில் தினசரி அர்ச்சனைகள் நடந்தன. சாத்திரங்கள் கேட்கப்பட்டன.

இலங்கையில் தென் எல்லையில். நான்கு சுவர்களுக்கு நடுவே அவர்கள் உயிருடன் இருப்பதாக சாத்திரி கூறினான்!

நாட்கள் நகர்ந்தன... சுபதீசனின் குடும்பத்தில் வறுமையும் துயரமும் நங்கூரமிட்டு நின்றன. இவ்வளவு துன்பத்துள்ளும் நல்லம்மா சுபதீசனைப் படிப்பிக்கவே விரும்பினாள். தன்னால் படிப்பிக்க முடியும் என்று நம்பினாள்.

கண்ணீரும் கம்பலையுமாக நகர்ந்து கொண்டிருக்கும் தங்கள் வாழ்க்கையை உணர்ந்து கொண்ட சுபதீசன் படிப்பை நிறுத்திக் கொண்டு ஏதாவது கூலி வேலைக்குச் செல்லலாமென எண்ணினான். தனது முடிவு தனது தாயின் மனதைப் பாதித்து மேலும் துன்பத்தை ஏற்படுத்தும் என்பதை உணர்த்து கொண்டு தனது படிப்பைத் தொடர்ந்தான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொதுநல நிறுவனத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் சுபதீசனின் குடும்பத்தை அணுகினர் "... மனிதனை மனிதன் ஆளக் கூடாது, அதற்குப் பதிலாக அவனை வாழ வைக்க வேண்டும்! மனிதனை ஆளும் உரிமை இறைவனுக்குத் தான் உண்டு" என அவர்கள் போதித்தனர்...

எரிகின்ற வயிற்றுக்குடலுக்கு நீர் ஊற்றினர்... கொட்டில் வீட்டைத் திருத்தி சீற் போட்டுக் கொடுத்தனர்..., நல்லம்மாவுக்கு தொழில் வசதி காட்டினர்... சுபதீசனின் படிப்புக்கு உதவினர்... நல்லம்மா அவர்களை நம்பினாள்.

அந்தப் புதியவர்களின் கைகளில் பைபிள் புத்தகங்கள் இருந்தன...

சுபதீசன் எந்த மறுப்பும் கூறாமல் நல்லம்மாவைப் பின் தொடர்ந்தான்...!

சுபதீசனை அவனது வகுப்பு மாணவர்கள் நக்கலடித்தனர்... அவனுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தத்துவ விளக்கங்கள் செய்தனர்... ஊரவர்கள் மதத்துரோகிகள் என்றனர்...

சுபதீசன் தனக்குள்ளேயே அழுது கொண்டான்.

சுபதீசனின் தகப்பனான பசுபதி காணாமல் போன போது தகப்பனை இழந்த விரக்தியில், சுபதீசன் வகுப்பில் ஒதுங்கியிருந்தான்... இப்போது சுபதீசனிடமேற்பட்ட மத மாற்றத்தினால் பாடசாலைச் சமூகமே அவனை ஓரக்கண்ணால் பார்த்தது.

பட்டினிப் போராட்டம் நடத்திய ஒரு ஏழை அப்பாவிக் கிராமவாசியான பசுபதி காணாமல் போனான்... முழுப்பூசணிக்காயைச் சோற்றுக்குள் மறைத்த அப்பட்டமான இந்தச் சம்பவத்தைப் பற்றி யாருமே கவலைப்படவில்லை... இப்போது...?

கொதித்த வயிற்றுக்கு நீர் ஊற்றியவனை அவன் நம்பினான். செஞ்சோற்றுக்கு கடனுக்காக அவன் மதம் மாறினான்...

றொக்சன் மாஸ்ரர் மட்டும் சுபதீசனை அனுதாபத்தோடு பார்த்தார்... மரத்துப்போன மனதில் ஊரவர்களின் பேச்சுக்கள் எந்தத்தாக்கங்களையும் ஏற்படுத்தவில்லை. சுபதீசன் வழமை போல வகுப்புக்கு வந்து போனான்.

அன்றும் வழமை போல விஞ்ஞான வகுப்பு நடந்து கொண்டிருந்தது. சுபதீசன் பின் வரிசையில் அமர்ந்திருந்தான். இன்றைய வகுப்பில் மூளையின் இயக்கம் பற்றிய நுணுக்கச் செயற்பாடுகள் பற்றி றொக்சன் மாஸ்ரர் விளங்கிக் கொண்டிருந்தார்.

பலவகையான மனிதர்களின் மூளை அமைப்புக்களைச் சித்திரிக்கும் படங்களையும், மிருக வகைகளின் மூளை

அமைப்புக்களைச் சித்திரிக்கும் படங்களையும் மாணவர்களின் பார்வைக்கு றொக்சன் மாஸ்ரர் கொடுத்திருந்தார்.

வகுப்பு கலகலப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்காக இன்று றொக்சன் மாஸ்ரர் மூளையோடு தொடர்புபட்டதொரு புதிர்க் கேள்வியையும் தயாரித்து வைத்திருந்தார்.

பாடம் முடிய இன்னும் சில நிமிடங்கள் இருந்தன. றொக்சன் மாஸ்ரர் பாடத்தை முடித்துக் கொண்டு தனது கேள்வியை வெளியிட ஆரம்பித்தார்.

"...நான் உங்களுக்கெண்டு ஒரு கேள்வி தயாரித்து வைச்சிருக்கிறன்... அந்தக் கேள்விக்கு நீங்கள் எல்லோரும் நிதானமாக யோசிச்சுப் பதில் சொல்ல வேணும்..." மாணவர்கள் வழமை போல றொக்சன் மாஸ்ரரின் கேள்விகளை உள் வாங்குவதற்குத் தயாரானார்கள்.

"சொல்லுங்கோ சேர்..." வகுப்புமொனிற்றர் குயின்ரன் முன்னணியில் நின்றான், மயிரைப் பிளந்து இரண்டாக்கும் புத்திக் கூர்மையுள்ளவன் குயின்ரன்.

"சேர் என்ன கேள்வியெண்டாலும் நான் பதில் சொல்றன்..." குயின்ரனை அடுத்திருந்த பால்ராஜ் குரல் கொடுத்தான். பால்ராஜ் லேசுப்பட்டவனில்லை! "...சேர்... கெதியாய் கேள்வியைச் சொல்லுங்கோ" லியோ துரிதப்படுத்தினான்.

சுபதீசன் எதுவும் பேசவில்லை!

றோக்சன் மாஸ்ரர் கேள்வியைக் கூறினார்.

"...உங்களுக்கு முன்னால் சகல விதமான மனிதர்களின் மூளைகளும், சகல விதமான மிருகங்களின் மூளைகளும் சகல விதமான பறவைகளின் மூளைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூளைகளுள் நீங்கள் விரும்பும் ஒரு மூளையைத் தெரிவு

செய்யும் படி கேட்டால், நீங்கள் எந்த மூளையைத் தெரிவு செய்வீர்கள்...'' றொக்சன் மாஸ்ரர் கேள்வியைத் கூறி முடிக்கிறார்.

வகுப்பில் பெரும் அமைதி... மாணவர்களைச் சிந்திக்கவிட்டு அவர்களின் உளவியல் வெளிப்பாடுகளை றொக்சன் அவதானிக்கிறார்.

புருவமயிர்கள் மயர்க்கொட்டி போல் நெளிய... கண் முழிகளைப் புரட்டிக் கொண்டு... மாணவர்கள் சிந்திக்கின்றனர்.

"...சேர் நான் என்ஜினியர் மூளையை எடுப்பன்..." முதலாவது மாணவனாக குயின்ரன் கூறுகிறான்.

"... சேர் நான் டாக்டர் மூளையை எடுப்பன்..." அடுத்து பால்ராஜ் பதில் கூறுகிறான்.

"... நான் மந்திரியின் மூளையை எடுப்பன்..." லியோ இப்படிக் கூறுகிறான்...

வரிசையாக மாணவர்கள் பதில் கூறுகின்றனர். ஆனால் சுபதீசன் மட்டும் எந்தப் பதிலும் கூறாமல் மௌனமாக இருக்கிறான். சுபதீசனின் மௌனத்தை றொக்சன் மாஸ்ரர் அவதானிக்காமலில்லை. சுபதீசனைப் பற்றி றொக்சன் மாஸ்ரர் புரிந்து வைத்திருந்ததால், அவனை வற்புறுத்தவும் அவர் விரும்பவில்லை!

வகுப்பு முடிகிறது... மாணவர்கள் எழுந்து வரிசையாக வெளியேறுகின்றனர்... சுபதீசனும் எழுந்து வருகிறான்.

"வாங்கோ சுபதீசன்... நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் மட்டும் தான் பதில் சொல்லவில்லை..." எந்தக் கண்டிப்பும் இன்றி சர்வதாதாரண நிலையிலேயே றொக்சன் மாஸ்ரர் கேட்கிறார்.

சுபதீசன் மௌனமாக றொக்சன் மாஸ்ரனைப் பார்க்கிறான்... வெந்து வெடித்த பார்வை... வேதனையில் அவனது நாடி முனையிலுள்ள சதை துடிக்கிறது.

"சேர்... நான் மனிசனாக வாழந்தால் தானே... எனக்கு மனிச மூளை தேவைப்படும். கண்டதையும் திண்டு... கண்ட இடத்திலை படுத்து... கண்டவையிட்டையெல்லாம் பேச்சும், அடியும் வாங்கி... நாயைப் போல வாழ்ற எனக்கு... மனிச மூளையை விட... நாய் மூளைதான் பொருத்தம்..." சுபதீசன் கூறுகிறான். அவனது கண்களின் கீழ் இமைப்புருவத்தில் கண்ணீர் தேங்கி... தளம்புகின்றது...

றொக்சன் மாஸ்ரரின் உடலெல்லாம் மின்சாரம் பாய்ந்தது போன்ற விறைப்பு... அவர் எதையோ கூறி விட முயற்சிக்கிறார்... அவரது வாய்க்குகைக்கள் அவரது நாக்குச் செயலிழந்து துடிக்கிறது! சுபதீசன் அங்கிருந்து புறப்படுகின்றான்.

ஓலை ஐப்பசி 2009

**9**

# சிறைக் கதவுகள் திறந்து கிடக்கின்றன

மாரி காலத்தில் வானத்தில் திரண்டு நிற்கும் கருமேகக் கூட்டங்கள் போல் அந்த பரந்த வெளியில் வியாபித்து நிற்கும் சிறைச்சாலைக் கட்டடங்களை அவன் பார்க்கின்றான்...

இன்று நேற்று அல்ல எத்தனை தடவைகள் அந்தக் கட்டடங்களை அவன் பார்த்து விட்டான். இருந்தாலும் இப்போது புதிதாக ஒன்றை பார்ப்பது போல் அவன் பார்க்கின்றான்.

"உள்ளத்தில் மேலோங்கி நிற்கும் எண்ணங்களைப் பொறுத்தே, பார்வைகளும், ஆய்வுகளும் நிகழ்கின்றன..." என்று கூறுபவர்களே அதுதானே என்னவோ

தினசரி கால் வலிக்க சைக்கிள் ஓடி விசேஷ செய்திகள் உள்ள இடங்கள் எல்லாம் தரித்து அந்தச் செய்திகளை மையொட்டுத் தாள் போல் உறிஞ்சி அவற்றை அழகு படுத்தி பத்திரிகைக்கு ஊட்டுகின்ற தொழில்.

ஆம் அவன் ஒரு பத்திரிகை நிருபர்: பெயர் ஆபிரகாம்

இன்று...!

சிறைவாழ்வை முடித்து திரும்புகின்ற ஒரு பெண்ணைப் பேட்டி காண்பதற்காக சிறைச்சாலை வாசல் அருகே வேப்பமர நிழலில் சீமெந்து ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றான்.

சுமார் பத்து மணி இருக்கும். பத்து மணிக்குத்தான் அந்த பெண் விடுதலை செய்யப்படவிருக்கின்றாள் என்ற செய்தி அவன் முன்னரே கேள்விப்பட்டிருந்தான்.

அவள் தான் கனகம்!

அவள் ஒன்பது தடவைகள் சிறைக்குச் சென்றவள். இது ஒன்பதாவது முறை. அவளை பேட்டி காண்பதற்குத்தான் ஆபிரகாம் காத்திருக்கின்றான்.

தனிமையில் இருந்த ஆபிரகாமின் சிந்தனை சிறைச்சாலைக் கட்டடங்கள் மேல் தவழ்ந்து, அதிலிருந்து வழுவி சிறைச்சாலை வாழ்வு பற்றிய எண்ணக் குவியலில் நங்கூரமிட்டு நிற்கின்றது.

ஆபிரகாமிற்கு சிறைவாழ்வு பற்றி நேரடியான அனுபவம் இல்லை. எனினும் பத்திரிகை நிருபர் என்ற முறையில் கேள்வி அனுபவம் நிறைய உண்டு.

வெளியுலகத் தொடர்பற்ற ஒரு தனியுலகம் ஒரு நிமிடம் கூட வாழ முடியாத அந்த உலகத்தில் வருடக் கணக்கில் எப்படி வாழ்கின்றனரோ...!

ஒரு முறை குற்றம் செய்து அங்கு செல்பவர்கள் திரும்பவும் எப்படித்தான் மனம் வந்து குற்றம் செய்கிறார்களோ?

அவள் கனகம், ஒன்பது தடவைகள் திரும்பத் திரும்ப அதே சிறை வாழ்வை அனுபவிக்க துணிந்தவள். அதிலும் ஒரு பெண் எப்படிப்பட்டவளாக இருப்பாள்?

அசோக வனத்தில் சீதையை காவல் புரிந்த அரக்கியர்

போலத்தான் இருக்க வேண்டும். முன்பின் அறிமுகமில்லாத கனகத்தை பற்றிய சாயல் அவன் மனதில் படர்கின்றது.

தார் றோட்டில் ஓடுகின்ற வாகனம் திடீர் என்று நிறுத்தப்படும் போது வாகனத்தில் சில்லுகள் தார் றோட்டில் தேய்பட்டு ஏற்படுகின்ற "கிறீச்" ஒலி

இரும்பிலான பாரிய சிறைக்கதவுகள் திறக்கப்படுகின்றன.

ஒருத்தி வருகிறாள். நீங்கள் கேட்ட கனகம் இவள் தான் கனகத்தோடு வந்த காவலன் கனகத்தை ஆபிரகாமிற்கு அறிமுகம் செய்து விட்டு,

"கனகம்... இவர் உன்னைத்தான் காண வந்திருக்கிறார். அவர் கேக்கிற கேள்விகளுக்கு ஒழுங்காக பதில் சொல்லி விட்டுப் போ..." இப்படி கனகத்தை எச்சரிக்கை செய்து விட்டுப் போகின்றான் அவன்.

காவலனின் எச்சரிக்கையோடு சில விநாடிகள் ஆபிரகாமைப் பார்த்த கனகம் திடீரென்று அதிலிருந்து விடுபட்டு வானத்தை நிமிர்ந்து பார்க்கின்றாள்...! அவள் கண்கள் சுழன்று வானத்தை நோக்குகின்றன.

அந்தப் பார்வையில் ஏதோ ஒரு எதிர்பார்ப்பு உணர்வு பளிச்சிடுகின்றது.

சிறையிலிருந்து திரும்பிய அவள் வானத்திலிருந்து எதை எதிர்பார்க்கின்றாள்...

ஆபிரகாமினால் அவள் எதிர்பார்ப்பதை கணிப்பிட்டுக் கொள்ள முடியவில்லை.

அசோக வனத்தில் சீதையை காவல் செய்த அரக்கி இப்படித் தான் இருந்திருப்பாளே? அவன் அப்படித்தான் கற்பனை செய்து கொண்டான்.

இப்போது அவதானமாக கனகத்தை பார்க்கின்றான்.

கனகம் -

கரு நிறம், கழுத்திலும் ஒரு கறுத்தக் கயிறு கணக்கான ஆனால் கூன் விழுந்த தோற்றம் இடையிடையே நரைத்த அடர்த்தியான கூந்தல் காவி படிந்த பற்கள் உட்குவிந்து பிதுங்கிய கண்கள்

அந்தக் கண்களில் உள்ள பார்வை தண்ணீர் குடம் தளம்புதல் போன்ற உணர்வு

அரக்கியின் உருவம்

அவளைப் பற்றிய ஆபிரகாமின் எண்ணக்கரு சிதைகிறது.

சிறையிலிருந்து திரும்புகின்ற மகிழ்ச்சியோ, சிறை சென்றவளின் வெட்கமோ அவள் முகத்திலில்லை.

ஆபிரகாமின் மனதில் கனகத்தைப் பற்றிய சிந்தனை அலைகள் தோன்றி மறைகின்றன. கனகம் வானத்தைப் பார்த்த படி நிற்கின்றாள்.

அவள் வானத்திலிருந்து எதை எதிர்பார்க்கின்றாள்?

ஆபிரகாமினால் தீர்மானிக்க முடியவில்லை.

"இப்பிடி இருங்கோ கனகம்..." ஆபிரகாம் மரியாதையாகவே பேச்சை ஆரம்பிக்கின்றான். தனது பார்வையிலிருந்து விடுபட்ட கனகம் அந்தச் சீமெந்து ஆசனத்தில் அமர்கின்றாள்.

இப்போது அவள் ஆபிரகாமைப் பார்க்கின்றாள்.

"என்னைத் தெரியுமா..."

"தெரியாது..."

"நான் ஒரு பத்திரிகை நிருபர்..."

"அப்படியென்றால்..."

"உங்களைப் பற்றி பேப்பிலை போடப் போறேன்..."

"பேப்பரிலை போடவா..."

"ஓம்..."

"ஏன்...?"

"நீங்கள் ஒன்பது தடவை சிறைக்குப் போயிருக்கிறியளாமே" கனகம் பதில் ஏதும் கூறாமல் சிரிக்கின்றாள். அர்த்தபுஷ்டியான சிரிப்பு!

"என்ன சிரிக்கிறியள்..."

"இல்லை... என்ரை நிலை உங்களுக்குப் புதினமாய் இருக்கு. அந்தப் புதினத்தை பத்திரிகையில் போட்டுப் பார்க்கிறியள்"

"சேவல் கோழியை அடிபட விட்டு புதினம் பார்க்கிறது போல... சேவலின்ரை வேதனை அதை யாரும் யோசிக்கிறதில்லை..."

கனகம் நிதானமாகக் கூறுகின்றாள்.

"நீங்கள் ஒன்பது முறை சிறைக்குப் போனது உண்மைதானே...?" ஆபிரகாம் பேட்டியை ஆரம்பிக்கின்றான்.

"ஓம்..."

"இந்த ஒன்பது தடவைகளும் நீங்கள் செய்த குற்றங்களை வரிசைப்படுத்திக் கூற முடியுமா..."

"ஒன்பது முறையும் ஒரே குற்றத்தைத்தான் செய்திருக்கிறன்.."

"அப்படியா..."

"ஓம்..."

"என்ன குற்றம்..."

"கஞ்சா வித்தது..." கனகம் சர்வ சாதாரணமாகக் கூறுகின்றாள்.

"செய்யிறது சட்ட விரோதமெண்டு தெரிஞ்சும்... திரும்பத் திரும்ப அதைத்தானே செய்திருக்கிறியள்..."

"ஓம்..."

"ஏன்...?"

கனகம் வைத்த கண் வாங்காமல் ஆபிரகாமைப் பார்க்கின்றாள். அந்தப் பார்வையில் பல்வேறு உணர்ச்சிகளின் வர்ண ஜாலங்கள் சில விநாடிகள் பார்த்தவள். அந்தப் பார்வையிலிருந்து விடுபட்டுத் திரும்பவும் வானத்தைப் பார்க்கின்றாள்...

அவள் எதை எதிர்பார்த்து ஏங்குகிகின்றாள்?

ஆபிரகாமினால் தீர்மானிக்க முடியவில்லை!

ஆவன் அந்தக் கேள்வியை நிறுத்திக் கொண்டு பேட்டியைப் தொடர்கிறான்.

"உங்கடை புருஷன் எங்கே...?

"அவர் செத்துப் பல வருஷமாய்ப் போச்சு..."

"பிள்ளையள்...?"

"ஒரு மகள்..."

"மகளிப்ப எங்கே...?" ஆபிரகாம் இதைக் கேட்டதும் அவள் விம்மி விம்மி அழுகின்றாள்.

மகளோடு தொடர்புபட்ட ஏதோவொரு சோகச்சம்பவம் இருப்பதை ஆபிரகாம் உணர்கின்றான்.

அந்தக் கேள்வியையும் அவனால் தொடர்ந்து கேட்க முடியவில்லை. அவன் மௌனமாக இருக்கின்றான்.

'தில்லைவனம்' கனகத்தின் சொந்தக் கிராமம் அதுதான். அவளது பிறப்பு வளர்ப்பு சொந்தம் பந்தம் எதுவுமே தெரியாது. அதைப் பற்றி யாரும் விசாரித்ததுமில்லை.

சில வருடங்களுக்கு முன் நிலமற்றவர்களுக்கு அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்பட்ட குடியேற்றக் கிராமம். அதன் தெற்குகெல்லை அடர்ந்த காடாகவே இன்றும் இருக்கின்றது.

எங்கிருந்தோ வந்த கனகம் குடும்பத்தினர் அந்தக் காட்டுக்கரையில் ஒரு கொட்டிலை அமைத்துக் கொண்டனர்.

கனத்தின் குடும்பத்தில் கனகம், கனகத்தின் புருஷசன், ஒரே மகள், ஆக மொத்தம் மூவர் மட்டுந்தான்.

தினசரி மூவரும் காட்டுக்குச் செல்வார்கள். விறகு வெட்டுவார்கள். அதைக் கொண்டு வந்து விற்பது, அதில் கிடைக்கின்ற வருமானத்தில் ஏதோ அரைகுறை வயிற்றை நிரப்பிக் கொள்வது.

ஒரு நாள், காட்டில் விறகு வெட்டிக் கொண்டு நிற்கும் போது, பட்ட மரமொன்று முறிந்து கனகத்தின் புருஷனின் தலையில் விழுந்தது. பாவம்! அந்த இடத்திலேயே அவன் இறந்து போனான்.

கனகத்தின் புருஷன் இறப்பதற்குச் சில தினங்களுக்கு முன் கனகத்திற்கோ, அவளது மகளுக்கோ முன் பின் தெரியாத கஞ்சா

மரத்தைக் காட்டி, அதன் சிறப்பையும், அது சட்ட விரோதமாகக் கணிக்கப்படும் செடி என்பதையும் அறிமுகப்படுத்தியிருந்தான்.

அந்தக் காட்டில் கஞ்சாக் செடி தன்னிச்சையாக வளர்ந்திருந்தது.

"கடவுள் தந்த கை காலிருக்கு, பிறகேன் கள்ளச் சீவியம் செய்வான்... நேர்மையாய் உழைச்சுச் சீவிப்பம்..." அப்போது கனகம் இப்படித்தான் கூறிக் கொண்டாள்.

கனகம் மனச்சாட்சிக்குப் பயந்தவள். காக்கிச் சடைக்காரரென்றால் அவளுக்குக் குலை நடுக்கம்.

கனகத்தின் புருஷன் இறந்து போக தாயும் மகளும் விறகு வெட்டினார்களே! ஆப்போது கூட அந்தக் கஞ்சாச் செடிகள் அங்கு தான் நின்றன.

"ஏனம்மா... ஐயா சொன்ன மாதிரி... இந்தக் கஞ்சாச் செடிகளைக் கொண்டு போய் வித்தால் என்ன...? இப்படி அவள் மகள் கேட்டதற்கு

"புள்ளை என்னைப் பார்... எலும்புந் தோலுமாய்ப் போனன்... எண்டாலும் உழைச்சு சீவிக்க வேணுமெண்டு எவ்வளவு கஷ்டப்படுகின்றன். உனக்கேன் இந்த எண்ணம்?"

"அம்மா... உன்னாலையும்,யும் என்னாலையும் எத்தினை நாளைக்குத் தான் இந்தத் தொழிலைச் செய்ய முடியும்..."

"எவ்வளவு காலம் முடியுமோ அவ்வளவு காலத்துக்கு செய்வம்."

"முடியாமல் போனால் பிறகு அதைப் பற்றி யோசிப்பம்..." இப்படித்தான் கனகம் கூறி முடித்தாள்.

சில தினங்களுக்குப் பின்னர் "அரசாங்க உத்தரவின்றிக்

காட்டில் மரம் வெட்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்." இடி விழுந்தது போல இப்படியொரு செய்தி பிரகடனப்படுத்தப்பட்டது.

காட்டில் மரம் வெட்ட அனுமதி கோரி கனகம் அரசாங்கக் கந்தோருக்கு பல தடவைகள் போனாள்.

ஒரே ஏமாற்றம்.

என்ன வேலையென்றாலும் கனகமும் மகளும் செய்யத் தயாராக இருந்தனர். வேலை வேண்டுமே!

மாதத்தில் ஐந்தோ ஆறு நாட்கள் தான் வேலை கிடைக்கும். பசி அவர்களை வாட்டியது.

"அம்மா... ஐயா காட்டின அந்தக் கஞ்சாச் செடி...?" மகள் கேட்டுவிட்டாள்.

கனகம் யோசிக்கிறாள்... மனச்சாட்சி... சட்டம்...!

"கடவுள் தந்த உடம்பிருக்கு, பழுதில்லாமல் கை காலிருக்கு. பிறகேன் கள்ளத்தனமான சீவியம்..." என்றோ ஒரு நாள் அவள் தன் மகளிடம் சொன்னது. இப்போது அவளது மனத்தில் ஊறிக் காய்கின்றது!

இப்போது அதே வாக்கியங்களை உச்சரிக்க அவள் நாக்கு மறுக்கின்றது!

சோற்றுப் பருக்கையில் சுவையை மறந்து போன நாக்கால், மனச்சாட்சி, சட்டம் இவைகளைப் பற்றிப் பேச முடியுமா?

"ஆறடி" உடம்பின் இயக்கம் ஒரு சாண் வயிற்றில்.

பசியின் விஸ்வரூபம், சகல உணர்வுகளையும் சங்காரம் செய்து விட கனகம் கஞ்சா வியாபாரம் செய்யத் தொடங்கி விட்டாள். பிறகென்ன?

பொலீஸாரின் வலை விரிப்பு! விசாரணை! ஏதிர்ப்பு! சிறை! இப்படியே எட்டுத் தடவைகள் சிறை சென்று, இன்று ஒன்பதாவது தடவையாகச் சிறைக்குச் சென்று திரும்பியிருக்கின்றாள்.

கனகம் மௌனமாக இருக்கின்றாள். ஆபிரகாம் தன் பேட்டியைத் தொடர்கின்றான்.

"ஏன் கனகம்?

"என்னங்க..."

"உங்கடை மகள்..."

"அவள் சிறைக்குள்ளைதான் இருக்கின்றாள்..."

"ஏன்...?"

"இதுக்கு முந்தின முறையெல்லாம் பொலிசுக்காரர் என்னைத் தான் பிடிச்சவை. இந்தமுறை மகளையும் சேர்த்துப் புடிச்சுப் போட்டினம்... என்னை விட அவளுக்கு இரண்டு மாதம் கூட"

"கலியாணம் செய்து, குடியும் குடித்தனமுமாக வாழ வேண்டிய வயது. ஆவளை இனி ஆர் கலியாணம் கட்டப் போகினம்... நானும் இன்னும் எத்தனை நாளுக்கு..." கனகத்தின் கண்கள் பனிக்கின்றன.

"ஏன் கனகம்... சட்ட விரோதமானதெண்டு தெரிஞ்சும்... திரும்பத் திரும்ப குற்றத்தை ஏன் செய்யிறியள் என்று கேட்டதற்கு நீங்கள் ஒண்டுஞ் சொல்லவில்லையே. அந்தக் காரணத்தைக் கூற முடியுமா...?

ஆபிரகாம் முன்பு கேட்ட கேள்வியைக் கேட்டு விட்டான். அவன் முன்பு கேட்டபோது கனகம் அவனைப் பார்த்தாளே அதே பார்வை தான்!

அர்த்த புஷ்டியான பார்வை!

"நான் இந்தச் சட்ட விரோதமான வேலையை விடுகிறன். ஏனக்கொரு வேலை தேடித் தாறீங்களா...?" சர்வ சாதாரணமாகக் கேட்கின்றாள் கனகம்.

இந்த நிருபர் வேலைக்காக ஆபிராகம் பட்டபாடு.

அவனால் கனகத்துக்கு வேலை வாங்கித் தர முடியுமா!

"என்னாலை முடியாது கனகம்..." அவன் நேரடியாகக் கூறுகின்றான்.

"நான் ஒன்பது தடவை புடிபட்ட போதும், இதே கேள்வியை எல்லாருக்கும் கேட்கும் படியாய்க் கேட்டி:ருக்கிறன். ஆனால் ஆரும் இதுக்குப் பதில் சொல்லயில்லை..."

தலையைத் தாழ்த்தியிருந்த கனகம் இப்போது நிமிர்ந்து பார்க்கிறாள்.

"என்னங்க..."

"என்ன கனகம்...?"

"தண்டனை குடுக்கிறதின்ரை நோக்கமென்ன...? அவள் கேட்கின்றாள்.

"குற்றம் செய்தவைக்குத் தண்டனை குடுக்கிறது... அவை அந்தக் குற்றத்தைத் திரும்பவும் செய்யாமல் இருக்கிறதுக்காக..."

"அப்பிடியெண்டால்...?"

"என்னைப் பொறுத்தவரை இந்தத் தண்டனை என்ன செய்திருக்கு? நான் மட்டுமா? ஏன்னைப் போல எத்தினை பேர் சிறைக்குள்ளை இருக்கினம்..."

ஆபிரகாமினால் பேச முடியவில்லை. குற்றவாளியான கனகத்தின் முன் குற்றமே செய்தாத ஆபிரகாம் தோற்றுப் போய் தலை தாழ்த்தி நிற்கின்றான்.

"என்ன பேசாமல் இருக்கிறியள். தண்டனையின்ரை நோக்கம் திருத்துவதெண்டால். அந்தத் திருத்தம் நடக்கிறதா..."

"நான் உதுக்கு என்னத்தைத் சொல்லுறது...?"

"நான் சொல்லட்டுமா...?"

"சொல்லு கனகம்..."

"கட்டுப்பாடுகளும், தண்டனைகளும் அவசியம் தான்... ஆனால் அந்தக் கட்டுப்பாடுகளும், தண்டனைகளும்... மலட்டுக் குடும்பம் மாதிரி இருக்கக் கூடாது. ஒண்டுக்குப் பத்தாய் விளைகிற நெல்லுமணி போலை இருக்க வேணும்..." சர்வ சாதாரணமாக அவள் கூறிவிட்டாள்.

ஆபிரகாம்...? ஆவனால் பேச முடியவில்லை!

சில வினாடிகள்.

"கனகம்! நான் போறன்... கடைசியாய் ஒரு கேள்வி...?"

"என்னங்க கேளுங்க..."

"சிறையிலிருந்து வந்த நேரந்துவக்கம் வானத்தைப் பாத்துதுப் பாத்து ஏங்குகிறாயே அது ஏன்?"

"நான் மறியலுக்குப் போக முன்னம் காட்டிலை கஞ்சாக் கொட்டை விதைச்சனான். இப்ப நல்லாய் முறைச்சிருக்கும். அதுக்கொரு மழையும் பெய்து குடுத்திதெண்டால் நல்லது. அதுதான் வானத்தைப் பார்க்கிறன்..."

இப்படிக் கூறிவிட்டு அவள் வானத்தைப் பார்க்கின்றாள்...!

கனகம்! திரும்பவும் அதே குற்றத்தைச் செய்யப் போகின்றாள். உருவமில்லாத உயிர். உருவமில்லாத பசி. உயிர் ஓயும் வரை பசி ஓயாது!

அப்படியென்றால்?

கனகத்தின் உயிர் ஓயும் வரை அந்தச் சிறைக் கதவுகள் அவளுக்காகத் திறந்திருக்கும்!

கட்டுப்பாடுகளும் தண்டனைகளும் மலட்டுக் குடும்பமாய் இருக்கக் கூடாது..." கனகம் கூறிய அந்த வார்த்தைகள் ஆபிரகாமின் மன வெளியில் சுழன்று கொண்டிருந்தன.

அவன் புறப்படுகிறான்.

சிந்தாமணி 15.10.1978

# 10

# கண்ணீர் கொந்தளிக்கும்

திரேசாளுக்கு இப்படி எப்பவும் கோவம் வந்ததில்லை. உடற்பலமிருந்தால் கண்டிப்பாக அந்தக் குடிசை வீட்டைத் தூக்கி எறிந்திருப்பாள்.

அவ்வளவு கோவம்!

பாரிசவாதம் வந்து படுத்தபடுக்கையாகி, மறுபிறப்பெடுத்தது போல் எலும்பும் தோலுமாகி வெறும் உயிர்த்துடிப்பின் செயற்கையால் வாழ்ந்து கொண்டிருக்கும் அவளால் வேறெதையும் செய்ய முடியவில்லை.

அந்தக்குடிசை வீட்டை மூடியிருந்த உக்கிய சில கிடுகுகளை மட்டும் பிய்த்தெறிய முடிந்தது.

"அம்மா... வீட்டைப் பிய்க்காதையுங்கோ..." கத்தரீனாள் காலைப் பிடித்துக் கெஞ்சுகிறாள். அவளது உடலிலிருந்து பிரசவித்த குற்றத்திற்காகவோ என்னவோ அவளது ஒரே மகள் செல்வம் வாய்விட்டுக் கதறுகிறாள்.

"இருக்கவிட்டதுக்காக... என்னையே நீ கேள்வி கேட்கிறியா..." திரேசாளுக்கு உடற்பலம் இல்லையே தவிர வாய்ப்பலம் நிறைய உண்டு.

திரேசாளை எதிர்த்து நியாயத்தைக் காட்டி இரண்டு வார்த்தைகள் கூற கத்திரீனாளுக்குத் தெரியாமலில்லை. அவளைத் தூக்கி வீசிவிடக் கூடிய மனத் தைரியமும், உடற் தைரியமும் கத்தரீனளுக்குண்டு!

திரேசாளோடு நேரடியாகப் போட்டிபோடும் தகுதி கத்திரீனாளுக்கில்லை: அவள் பரம ஏழை.

திரேசாளோ பணக்காரி!

திரேசாள் வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டுகிறாளே: கத்திரீனாவின் மறைந்து போன பரம்பரைகளைப் பற்றி, அவர்கள் வாழ்க்கையில் படிந்திருந்த கறைகளைப் புட்டுப் புட்டு வைக்கிறாளே... அந்தக் குமர்ப்பொட்டை செல்வதைப் பற்றி வாய்க்கு வந்த படி... எத்தனை வார்த்தைகள்... காதால் கேட்க முடியுமா?...

இவைகள் எதுவும் கத்திரீனாளுக்கு கேவலமாகவோ, வேதனையாகவோ இல்லை.

கத்திரீனாள் ஏழ்மைப் பாதாளத்தில் புதைந்து மீண்டவள். இந்தச் சிறிய வேதனை அவளுக்குப் பெரியதாகப் படவில்லை.

திடீரென இந்த வீட்டை விட்டு வெளியேற அவளென்ன தனிக்கட்டையா?... குருவிச்சை போல் அவளை ஒட்டியிருக்கும் ஒரு குமர்... எங்கே போவது?... இது தான் அவள் மனதைக் குடைந்து கொண்டிருக்கும் பிரச்சனை. வேதனை!

திரேசாளுக்குச் சொந்தங்கொண்டாடப் பல ஏக்கர் நிலமிருந்தும் அந்தக் காற்பரப்பு நிலத்தில் ஏதோ புதையலைக் கண்டுவிட்டதைப் போல் பதறித் துடிக்கின்றாள்.

தனது சொத்துரிமையை அதிகாரம் காட்டிப் பேசிக் கொள்ள இதுவரை வாய்ப்புக் கிடைத்தில்லை கிடைத்து விட்ட இந்த ஒரு வாய்ப்பை விட்டு விடுவாளா?

கிடுகைப் பிய்த்தெறிந்த போது அவளது தலையில் மூட்டிக் கொண்டிருந்த நான் கோ ஐந்து முருங்கைக்காய்கள் அவளது கோபத்துக்குள்ளாக பிடித்திழுக்கிறாள். முருங்கைக்காய்கள் கொப்போடு முறிய வீசி எறிகிறாள்.

தலையைத் திருப்பி அங்கு வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றவர்களை ஒரு முறை பாரக்கின்றாள் பலர் நிற்கின்றனர். அவளது சொத்துரிமை உணர்வுக்குப் புதிய பலம்.

"டேய்... சிங்கா..." வேலைக்காரனைக் கூப்பிடுகிறாள். அவளது உடல் நடுங்குகின்றது. வெறும் எலும்போடு ஒட்டியிருக்கும் அவனது சிவந்த தோலினூடாக புடைத்து நிற்கும் நரம்புக்கொடி தெரிகிறது.

"... என்னம்மா..."

"வீட்டை போல்... காருக்கை கிடக்கின்ற பெற்றோல் தகரத்தையும்... நெருப்புப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு வா..."

"..." ஒரு புறம் தனது வர்க்கத்தைச் சேர்ந்த பரிதாபத்துகரிய கத்திரீனாள் குடும்பம், மறுபுறம் முதலாளியம்மாவின் கட்டளை...

"ஏன்ரா நிற்கிறாய்... போடா..."

சிங்கன் போகின்றான் அவன் திரும்பி வரமாட்டானெண்டு எல்லோருக்கும் தெரியும்.

"எடி இவ்வளவு நேரம் பேசி. நானே களைச்சுப் போனன். வீட்டை விட்டு வெளியாலை போ... எண்டு நேரை சொல்லியும், உனக்கு ரோசமில்லையடி ரோசங் கெட்ட நாய்... வெளியாலை போடி..."

கத்திரீனாளின் கண்களிலிருந்து வழியும் கண்ணீர் மட்டும் அவளது பேச்சுக்குப் பதிலாய்ச் சமைகிறது.

காங்கேசன்துறைக் கடற்கரையில் வாழ்ந்து வந்த கத்திரீனாளும், அவளது மகளும் வாழ வழி தேடிப் புறப்பட்டு எங்கோவெல்லாம் அலைந்து கடைசியில் இங்கு வந்து திரேசாவின் அனுமதியோடு அவளது காணி ஒன்றில் ஒரு குடிசையை அமைத்துக் கொண்டனர்.

திரேசாளுக்குரிய நிலங்கள் பிரயோசனமற்றுக் கிடந்தாலும் வசதியாக நிலம் வந்தால் அதையும் வாங்கிவிடுவாள். பின்னேரங்களில் காலில் செருப்புடன் கையில் திறப்புக் கோர்வையுடன் வேலைக்காரன் சிங்கன் பின் தொடர தன் காணிகளைச் சுற்றிவலம் வருவதில் இவளுக்குப் பெரும் மனத்திருப்தி! இப்படிப் பிரயோசனமற்ற நிலத்தில் ஒரு பகுதிதான் கத்திரீனாளுக்கு வழங்கப்பட்டது!

குடும்ப நிர்வாகமே திரேசாளின் கையில்த்தான்.

திரேசாளின் புருசனை நல்லவன் என்று கூறுவதைவிட வஞ்சகமில்லாதவன் என்று கூறுவதுதான் பொருத்தம்!

நேற்றைய தினம் திரேசாளின் காணியில் அதாவது கத்திரீனாள் குடியிருக்கும் நிலப்பரப்பில் நிற்கும் தென்னை மரத்திலிருந்து விழுந்த ஒரு தேங்காயை திரேசாளின் அனுமதியின்றி எடுத்துவிட்டு. காலந்தாழ்த்தித் கூறியதால் வந்த விளைவுதான் இந்த நிலை!

"என்னைக் கேளாமல் ஏனடி எடுத்தனி..."

"ஒண்டு தானே அம்மா... பிறகு சொல்லுவமெண்டிட்டு..."

"பிறகென்னடி சொல்லுறது..."

"அம்மா... நான் களவு பண்ணிறதெண்டால் இப்ப இந்த விஷயத்தைச் சொல்லுவனா..." நான் சொன்னாப் பிறகு தானே உங்களுக்குத் தெரியும்... நான் செய்த பிழையை ஒத்துக் கொள்றன்... மன்னிச்சுக் கொள்ளுங்கோ..."

"மன்னிப்பென்ன... மன்னிப்பு..."

"..............."

"ஒரு துண்டு நிலம் சொந்தமில்லை..."

"..............."

"கையிலை ஒரு சதம் காசில்லை..."

"..............."

"வெட்கம் ரோசமில்லை..."

"நீங்கள் சொல்றதெல்லாம் நாங்கள் ஒப்புக் கொண்ட விஷயந்தானே... எங்களிட்டை ஒண்டுமில்லையெண்டுதானே இஞ்சை வந்தனாங்கள்..."

... நீங்கள் பிறந்த மண்ணிலைத்தான் நாங்களும் பிறந்தது... அந்த ஒரு உரிமை... அதுக்காகவாவது... எங்களை மன்னிச்சுக் கொள்ளுங்கோ...

"என்ன என்னைப் பயப்புடுத்திறியா...?"

"உங்களைப் பயன்படுத்த என்னாலை முடியுமா?"

"எடி எனக்கு ஞாயம் வேண்டாம்... நீ இப்ப வெளிக்கிடப் போறியா இல்லையா...? ...? திரேசாள் முடிவாகக் கேட்டு விட்டாள் திரேசாளின் மனதைக் கத்திரீனாளும் முடிவாகப் புரிந்து கொண்டு விட்டாள்.

கத்திரீனாள் சீலைத் தலப்பால் தன் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள்.

நாயால் துரத்தப்படும் முயல் தன் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள முடிந்தவரை ஓடி... முடியாத நிலையில் திரும்பி நாயை எதிர்பார்ப்பது போல...

"திரேசாள்... பத்துவரியத்துக்கு முன்னம்... காங்கேசன்துறைக் கடற்கரையில் எங்களோடை சேரந்து மீன்பொறுக்கிச் சீவிச்சதை மறந்திட்டியா?... நீயும் நானும் ஒரே இடத்திலை கிடந்த குப்பைகள்... திடீரென வந்த காத்திலை நீ கோபுரத்துக்குப் போட்டாய் நான் குப்பையாகவே கிடக்கிறன்... இப்ப நீ அந்தக் குப்பையைப் பார்த்துச் சிரிக்கிறாய்... நீ மறந்திருப்பாய்... நான் மறக்கயில்லை..."

இவ்வளவு பேர் மத்தியில் இவள்: கத்திரீனாள் நாதியற்றவள்... இப்படிக் கூறிவிட்டாளே!

"என்னடி சொல்றாய்... நாயே...?" திரேசாளால் அடக்க முடியவில்லை.

"... நீ என்னை நாயெண்டு சொல்லு... ஏனென்னடால் நான் நாய் தான்... ஆனால்: நான் உன்னை நாயெண்டு சொல்லமாட்டான்... ஏனெண்டால் நாய் நன்றியுள்ளது..." போர்க்களத்தில் போராளியாகி விட்ட நினைப்போ, என்னவோ – பதிலுக்கு பதில் பேசுகிறாள்.

கத்திரீனாள் திரேசாளின் கடந்த கால வாழ்க்கையைச் சுட்டிக்காட்டிப் பேசியது பெருமுள்ளாய் அவளது உள்ளத்தில் குத்தி முறிகிறது... கண்ணகியாக இருந்தால் அக்கிராமத்தையே தீக்கிரையாக்கி தன் வடுவைப் போக்கியிருப்பாள்.

"திரேசாள்... என்னை மன்னிச்சிடு. இவ்வளவுக்கும் என்னைப் பேசத் தூண்டினது நீ தான்: ஏறிவந்த ஏணியை எட்டி உதைக்கிறாய்... நீ ஏறியிட்டன் எண்டதற்காக கீழை உள்ளவையளைப் பார்த்துச் சிரிக்காதை... கண்ணாடி வீட்டிலை இருந்து கொண்டு கல்லெறி யாதை!.. நாங்கள் ஏழையள்: எங்களிட்டடை ஒண்டுமில்லை... அது தான் போகட்டு இந்தக் குமர்... அதுக்காகவாவது நீ இரங்கியிருக்கலாம்... பத்து வரியத்துக்கு முன்னாலை... உன்னை நினைச்சுப்பார்... இவளுக்கும் உனக்கும் வித்தியாசம் இருக்குமா...?

... நீயும் நாங்களும் கடற்கரையிலை தானே பிறந்து வளர்ந்தனாங்கள்... அந்தக் கடலிலை பேய்மாதிரி எத்தினை

அலையள் வருகுது... அது கரையிலேயே மறைஞ்சு போகுது... இத்தனை பெரிய அலைகளையும் உள்ளடக்கிக் கொண்டு கடல் அதையாகத்தான் இருக்கு... அந்தக்கடல் ஒரு நாளைக்கு கொந்தளிச்சால்... கட்டுப்படுத்த முடியுமா?... யோசிச்சுப்பார்...

"டேய் சிங்கா... கொண்டு வாடா பெற்றோல் தகரத்தை..." திரேசாள் கத்தினாள்: அவளது உடலெல்லாம் நடுங்குகிறது. கண்கள் சிவந்து விட்டன!

பத்து வருடங்களுக்கு முன்பு:

திரேசாளுக்கு பத்தொன்பது வயது: தகப்பன் காச நோயால் பீடிக்கப்பட்டு படுத்த படுகையாகி விட வயிற்றுக் கொடுமையால் தாயோடு சேரந்து இவளும் கடற்கரைக்கு மீன் தெரியப் போவாள். இரவில் கடற்றொழிலுக்குப் போபவர்கள் காலையில் கரை சேர்வார்கள். அவர்களால் கொண்டு வரப்படும் மீன்களைத் தெரிவு செய்து கொடுத்தால், உதவிக்காக சில மீன்கள் இனாமாகக் கொடுக்கப்படும். திரேசாளின் குடும்பத்தைப் பொறுத்து தொழில் என்று இதைத் தான் கூறலாம்.

திரேசாளை 'அழகி' எண்டு கூறிவிட முடியாது. 'சுவத்தப் பொம்பிளை' என்று நாக்கூசாமல் கூறிக் கொள்ளலாம். 'சுவத்தப் பொம்பிளை' எண்ட பேச்சு நாளாவட்டத்தில் 'உணர்வுள்ள நாக்குகளின் கைங்கரியத்தால்...' அவள் 'அழகி' ஆக்கப்பட்டு விட்டாள்!

பிறகென்ன...!

ஒரு பணக்கார வாலிபனுக்கு வாழ்க்கைப்பட்டாள்! இனியும் 'இரவல் காணியில்' இருக்கவும், மீன் தெரியவும் முடியுமா?... திருமணத்தோடு இங்கு நிரந்தரமாக வந்து விட்டாள். இங்கு பணக்காரி!

"... பரம்பரையான இரவல் காணி வாழ்க்கை திரேசாளோடு முடிவடைகிறது...!" அன்று இப்படித் திரேசாளின் தகப்பன். திரேசாள் புருஷனோடு வீட்டைவிட்டுப் புறப்படும் நேரத்தில் கூறியது கத்திரீனாளின் மனதில் வைச்சிரம் போல் ஒட்டியிருந்தது.

"கத்திரீனாள் ... நீ என்னைப் பார்த்துப் பொறாமைப்படுகிறாய்..."

"... சீ உன்னைப் பார்த்து நான் பொறாமைப்பட்டிருந்தால்... உன்னைப் பற்றி எதையெதையோ சொல்லியிருப்பன்... பொறாமை எண்டது உன்னைப் போல பணக்காரருக்குத்தான் வரும் ஏனெண்டால் பிறரோடை ஒப்பிட்டுப்பார்க்கக் கொஞ்சமாவது கிடக்கு எங்களுக்குப் பொறாமைக்குணம் வராது ஏனெண்டால் ஒப்பிட்டுப்பாக்க எங்களிட்டை ஒண்டுமில்லை.

கத்திரீனாள் நிதானமாகப் பேசுகிறாள்.

"நீ இப்பவே வெளிக்கிட்டிடவேணும்..." திரேசாள் தன் முடிவைக் கூறுகிறாள்.

... இந்த வாழ்க்கை உனக்கு அருமையானது அருமையாக வாங்கின கத்தி எண்டதுக்காக தீட்டின மரத்திலை கூர் பாக்காதை... கொக்கரிக்காதை...!

எங்களைப் போல வழியில்லாததுகளை காலுக்கை போட்டு மிதிக்க எண்ணாதை... உந்தச் செருப்பும் திறப்புக் கோர்வையும் நிரந்தரமானதில்லை...

பழையதை மறக்காதை...

கத்திரீனாளின் கண்களிலிருந்து கண்ணீர் வடிகிறது.

"நில்லடிவாறன்..." நடக்கின்ற வேகம்: செருப்பு குதிக்காலில் முட்டி மோதுகிறது திரேசாள் வீட்டை நோக்கி நடக்கின்றாள்.

வீட்டுக்குச் சென்றவள் பெற்றோல் தகரமும் நெருப்புப் பெட்டியும் கொண்டு வருகின்றாள்.

திரேசாள் பெற்றோலை ஊற்றி நெருப்பு வைக்கிறாள். கத்திரீனாளின் குடிசை சுவாலை விட்டெரிக்கின்றது. திரேசாளின் கண்களும் அக்கினி உருண்டைகளாகி கண் தசைக்குளிக்குள் புரள்கிறது.

கத்தரீனாளும், மகளும் வாய்விட்டமுகின்றனர்.

“திரேசாள்... இந்தக் கைகளைப்பார்... இதுகள் மீன் பொறுக்கின கைகள்... குருவி கூடு கட்டிறது போது இந்தக்கையாலை கட்டின் கூட்டை... உந்தக்கையாலை அழிச்சிட்டாய்... உது துறப்புக்கோர்வை பிடிக்கிற கைகள்!...?

...இந்தக் கைகளுக்கு வலிமை இல்லாமலில்லை ... நாங்கள் விடுகிற கண்ணீர்... எண்டைக்கோ ஒரு நாளைக்குக் கொந்தளிக்கும்...?...

கத்தரிரீனாள் அங்கிருந்து நடக்கின்றாள் மகள் செல்வம் அவளைப் பின் தொடருகிறாள்.

திரேசாள் நெடுமரமாய் நிற்கிறாள்.

சிரித்திரன் மே 1974

**11**

# மண்ணின் முனகல்...!

வன்னியிலை கஷ்டப்படுகிற சனங்களுக்கு உதவுறதுக்காக வீடு வீடாய் நிதி சேகரிக்கினம்" கேற்றைத்திறந்து உள்ளே வந்த சத்திய தகப்பன் கிருஷ்ணானந்தனைப் பார்த்துக் கூறுகின்றான்.

தேன்கூடு கலைந்தது போல், வலிகாமம் காலைந்து... தங்கள் உயிர்ப்பூச்சியைக் காப்பாற்றிக் கொள்ள கால் போன போக்கில் ஓடியவர்களில் வன்னிவரை சென்றவர்கள் ஏராளம்... இப்போது அ்வர்களால் வாழவும் முடியவில்லை. திரும்பி வரவும் முடியவில்லை.

மகனால் கூறப்பட்ட செய்தியை உள்வாங்கிய கிருஷ்ணானந்தன், தலையை நிமிர்த்தி, பார்வையைக் கூர்மைப்படுத்தி, சத்தியனைப் பார்க்கிறார். காசு சேர்ப்பவர்கள் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களா? அல்லது வெளி இடத்திலிருந்து வந்தவர்களா?..." கிருஷ்ணானந்தனின் பார்வையில் கருத்தரித்திருந்த கேள்வியை சத்தியன் புரிந்து கொள்கிறான்.

"எல்லாம் புது ஆக்கள்... தெரிஞ்சவை ஒருதரும் இல்லை...", சத்தியன், தான் புரிந்து கொண்ட கேள்விக்கப் பதிலைக் கூறிக் முடிக்கிறான்.

கிருஷ்ணானந்தன் மௌனமாகவே இருக்கிறார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை: லீவு நாள்... காலை பத்து மணியிருக்கும், வெளியில் சென்று வந்த அவர், சேட் தெறிகளைக் கழற்றி விட்டு... வலது காலை மடித்து இடது காலைப் படிக்கட்டில் பதித்த படி வீட்டு விறாந்தையில் அமர்ந்திருக்கிறார்.

தகப்பன் ஏதாவது கூறுவாரென எதிர்பார்த்து சத்தியன் சில நிமிடங்கள் நின்றான். தகப்பன் வேறு சிந்தயைில் மூழ்கியிருக்கிறார் என்பதை மட்டும் அவனால் ஊகிக்க முடிகின்றதே தவிர சிந்தனைக்கான பிரச்சினையை அவனால் தீர்மானிக்க முடியவில்லை. தாய் யோகேஸ்வரி தூணோடு நிற்பதையும் அவன் அவதானிக்கின்றான்.

"மேசன் என்னவாம்..." புருஷனின் 'வியர்வை பனித்திருக்கும் முகத்தையும், அந்த முகத்தில் இழையோடியிருக்கும் தெளிவற்ற உணர்வலைகளையும் அவதானித்த யோகேஸ்வரி கேட்கிறாள்.

"மேசனார் சொல்றதைப் பார்த்தால் இருக்கிற காசு போதாது போலை கிடக்கு..."

"இப்ப எல்லாம் விலை தானே..."

"உண்மைதான்..."

"...அதுக்கு யோசிச்சு என்ன செய்யிறது... வேலையைத் துவங்கினால் எப்பிடியும் முடிக்கலாம்..." புருஷனின் ஆதங்கத்திற்கு ஆதரவு கொடுத்துப் பேசுகிறாள் யோகேஸ்வரி புருஷன் பிழையான பாதையில் செல்லமாட்டார் என்ற நம்பிக்கை அவளுக்குண்டு.

வலிகாம இடப்பெயர்வுக்குச் சில மாதங்களுக்கு முன்பு கிருஷ்ணானந்தனின் தந்தை இறந்து போனார். இறந்து போன தகப்பனின் நினைவாக ஒரு கல்லறை கட்ட வேண்டுமென்பது கிருஷ்ணானந்தனின் ஆசை. துகப்பன் காலமான சில மாதங்களில் அந்தக் கல்லறையைக்கட்டிவிட கிருஷ்ணானந்தன் முயற்சி எடுத்தர். அதற்குத் தேவையான பணமும் ஓரளவு அவரிடமிருந்தது.

அதற்கிடையில்... ஆண்டவன் கூட நினைக்காத அந்தச் சம்பவம் நடந்து விட்டது...?

மழை பெய்து நிலம் ஊறி... தப்புத் தண்ணியில் நிற்கும் மரவள்ளி மரத்தை நான்கு பக்கமும் அசைத்து இழுத்து நீர்க்குமிழிகள் வெடிக்க... சேற்று நீர்வடிய ஒரு கிழங்கும் பிசகாமல்... சின்னனும் பெரிதுமாய்... மரத்தோடு பிடுங்கி... வரட்பில் எறிந்தது போல்... வலிகாமத்தைப் பிடுங்கி தென்மராட்சியில் எறிந்த... அந்த வரலாற்றுப் பதிவான இடப்பெயர்வு நடந்து...

கிருஷ்ணானந்தன் குடும்பமும் இடப்பெயர்ந்து கல்லறை கட்டத்தேடிய காசும் கரைந்து விட்டது!

இராணுவம் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்த பின்னர்... ஏறத்தாழ ஆறு மாதங்கள்... அஞ்ஞான வாழ்க்கை வாழ்ந்த மக்கள்... ஞானத்தைப் பெற்றார்களோ இல்லையோ... வெய்யில் காலத்தில் அடிமரத்தை நோக்கி கொடிவிட்டு நிகர்கின்ற மயிர்க்கொட்டிகள் போல் வலிகாமத்து மக்கள், வலிகாமத்தை நோக்கி கொடி விட்டு வந்தனர்...!

கிருஷ்ணானந்தன் குடும்பமும் சொந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். கல்லறை கட்ட வைத்திருந்த பணம் கரைந்ததே தவிர, கல்லறை கட்ட வேண்டும் என்ற எண்ணம் கரையவில்லை!... அந்த எண்ணம் இப்போது மரங்கொத்திக் குருவி போல் கிருஷ்ணானந்தன் ஒரு கல்லறை அமைக்க பகீரதப் பிரயத்தனம் செய்வது பலருக்குப் பரிகசிப்புக்குரிய செய்தியாகி விட்டாலும் கிருஷ்ணானந்தன் மனம் சோர்ந்து விடவில்லை!

நம்மவர்களின் செல்லரித்த மனங்கள் பற்றியும், அதில் கருத்தரிக்கின்ற 'முண்டங்கள்' போன்ற சிந்தனைகள் பற்றியும் கிருஷ்ணானந்தன் நன்கு விளங்கி வைத்திருந்தார்.

விறாந்தைக்கும், கேற்றுக்குமிடையிலுள்ள சீமெந்து நிலத்தில் நின்ற சத்தியன், கேற்றைடிக்கு வந்து வீதியை எட்டிப்

பார்க்கின்றான்... வன்னி மக்களுக்காக நிதி சேகரிப்பவர்களைத் தான் அவன் பார்க்கிறான்.

''வருகினமே...'' இதுவரை மௌனமாக இருந்து நடப்பவைகளை அவதானித்த கிருஷ்ணானந்தனின் இரண்டாவது மகன் செந்தூரன் கேட்கிறான்.

"கிட்ட வந்திட்டினம்... இன்னும் கொஞ்ச நேரத்திலை இஞ்சை வருவினம்..."

இவர்களின் பேச்சைக் கிருஷ்ணானந்தன் அவதானிக்காமலிலை... கிருஷ்ணானந்தன் மிகவும் இரக்க சிந்தனையுள்ளவர்... ஆனால், இப்போது அவரது சிந்தனை... தகப்பனின் கல்லறையில் நங்கூரமிட்டு நிற்கின்றது!

"அம்மா... நிதி சேகரிக்கிறவை வந்தாப் பிறகு ஓடுப்பட்டு... பிரச்சினைப்படுத்தாமல்... என்ன செய்யிறதெண்டு யோசிச்சு வையுங்கோ..." செந்தூரன் பட்டும் படாமலும், அர்த்த புஷ்டியாகக் கதைக்கின்றான்.

"...என்னட்டைக் காசில்லை... கல்லறை கட்டிற காசிலை எந்தக் காரணங்கொண்டும் கைவைக்கேலாது..." கிருஷ்ணானந்தன் தன் மனதிலுள்ளதை அப்படியே கூறுகின்றார்.

"வீடு தேடி வாறவைக்கு இல்லையெண்டு சொல்றது சரியாய் இருக்குமா..." யோகேஸ்வரி தன் கருத்தை வெளிப்படுத்துகின்றாள்.

மௌனமாக இருந்த கிருஷ்ணானந்தன் திரும்பி யோகேஸ்வரியைப் பார்க்கின்றார்... அவரது பார்வையில் ஆழமான நீரோட்டத்தின் அமைதியான அசைவு பளிச்சிடுகின்றது... உதடுகள் பிரியாத நிலையில் அடக்கமான சிரிப்பு!

"யோகேஸ் நீர் கௌரவத்தை யோசிக்கிறீர்... நான் மனிதாபிமானத்தை யோசிக்கிறன்... வன்னியிலை குடல் கருகிச்

சாகிறதும் எங்கடை சகோதரங்கள்... குடல் கருகிச் சாகிற சனங்களுக்காக வீடு வீடாய் நிதி சேகரிக்கிறவையும் எங்கடை சகோதரங்கள் தான்... எங்களாலை முடிஞ்சதை நிச்சயமாகச் செய்யத்தான் வேணும்...

...கல்லறை கட்டிற காசிருக்கு..." இப்படிக் கூறிய கிருஷ்ணானந்தன்... கேள்விக்குறியோடு யோகேஸ்வரியைப் பார்க்கின்றார்...

வயிறு சுருங்கி உயிர்க்குருத்துக் கருகுகின்ற வன்னி மக்கள் ஒருபுறம்... தன்னையும் தனது சகோதரங்களையும் வளர்த்து ஆளக்கிய தந்தையின் நினைவு மறுபுறம்... மனத்துலாபாரம் தாண்டுமிதக்கின்றது!...

"வன்னி மக்களுக்கான நீதி எப்படியோ சேகரிக்கப்படும்... ஆனால் எனது தகப்பனின் கல்லறையை நான் தான் கட்ட வேணும்...

...கல்லறை கட்டிற காசிலை எடுக்க வேண்டாம்..." கிருஷ்ணானந்தன் கூறிவிட்டு மௌனமாக இருக்கின்றார்.

"என்னம்மா வீடு தேடி வாறாக்களை ஒண்டுமில்லையெண்டு திரும்பி விடப் போறியளே..." சத்தியன் மன எரிச்சலுடன் தாயிடம் கேட்கிறான்.

"சத்தியன்... பக்கத்து வீட்டு தர்மலிங்கத்தாரிட்டை நான் சொன்னதெண்டு நூறு ரூபா காசு வாங்கிக் கொண்டு வா... சில நிமிடங்கள் சிந்தித்த கிருஷ்ணானந்தன் இப்படியொரு முடிவுக்கு வருகிறார்.

"தர்மலிங்கத்தார் இப்பத்தான் காசு கேட்ட உடனே பஞ்சம் கொட்டுவார்..." சத்தியன் வெறுப்போடு கூறுகிறான். போவதா விடுவதா என்ற கேள்விக்குறியோடு தகப்பனைப் பார்க்கின்றான்!

கிருஷ்ணானந்தன்

பொதுநிறம், உயர்ந்த தடித்த கம்பீரமான தோற்றம், அடர்த்தியான கட்டையான தலைமயிர் அழகான சிறிய நெற்றி... கூர்மையான பார்வை இடாம்பீகமில்லாத தூய்மையான உடுப்பு, அவசரமில்லாத அமைதியான போக்கு!

திருமணமாகி இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையான பின்... படித்துப் பட்டம் பெற்ற தன்னம்பிக்கை மிகுந்த மனிதன்.

பொறுப்பான பதவி முக்கியமான வியாபார நிலையங்களுக்குப் பொருட்களை விநியோகம் செய்கின்ற கேந்திர ஸ்தாபனத்தின் 'மனேஜர்' இராணுவக் கட்டுப்பாடு போக்குவரத்துப் பிரச்சினை என்ற காரணங்களை உச்சாடனம் செய்து... பிறகதவால் பேரம் பேசுகின்ற 'யோக்கியவான்களைக் கட்டி அவிழ்க்கின்ற பெரும் பொறுப்பு!

தினசரி பல இலட்சங்கள் வந்து போகும், ஆனால் கிருஷ்ணானந்தனோ... தனது இலட்சியத்திலிருந்து பிசகவில்லை!

நேர்மை... கிருஷ்ணானந்தனின் பலமும் அதுதான்... பலவீனமும் அதுதான்! கிருஷ்ணானந்தன் வாழத் தெரியாதவன் இப்படித்தான் பேசிக் கொள்கின்றனர்.

மௌனமாக இருந்த கிருஷ்ணானந்தன் திரும்பி மகனைப் பார்க்கிறார்... சத்தியன் இன்னமும் அப்படியே நிற்கிறான். அவரின் மனத்துள் சிந்தனைகள் முரல் மீனாயக் குத்துகின்றன...!

"யோகேஸ்... கல்லறை கட்டிற காசிலை ஒரு நூறு ரூபா எடுத்துக்குடும்..." கிருஷ்ணானந்தன் தனது முடிவில் சிறு மாற்றத்தைச் செய்கின்றார்.

"யோகேஸ்... எங்களுக்குரிய நியாயத்தை நாங்கள், எங்களுக்குள்ளை தான் தேடவேணுமே தவிர... முன்பின் அறிமுகமில்லாத மனிசரின்ரை இதயத்துக்குள்ளை தேடக்கூடாது... உதவி செய்யிறது தொகையைப் பொறுத்தல்ல, மனதைப்

பொறுத்தது... நூறு ரூபா குடுக்கலாம்...'' ஆழமான கடலில் அமைதியாகப் புரள்கின்ற கடலலை போல் கிரு'ணானந்தனின் உதடுகளில் வார்தைகள் புரள்கின்றன!

கிருஷ்ணானந்தனிடமிருந்து இப்படியான தத்துவார்த்தப் போச்சுக்களைக் கேட்பது யோகேஸ்வரிக்குப் புதிய அனுபவமல்ல!

“அம்மா... நிதி சேகரிக்கிறவை தர்மலிங்கம் மாமா வீட்டைப் போகினம்...'' கேற்றடியில் நின்ற சத்தியன் கூறுகிறான்.

தர்மலிங்கம்.

கிருஷ்ணானந்தன் வீட்டுக்கு வலது பக்கமாகவுள்ள அடுத்த வீட்டுக்காரர். புக்கத்து வீட்டுக்காரர் என்ற வகையில் கிருஷ்ணானந்தனின் பிள்ளைகள் அவரை 'மாமா'என்ற மிக நெருக்கமான உறவு முறையில் அழைக்கின்றனர்.

கிருஷ்ணானந்தனுக்கு 'மிகவம் பிடிக்காதவர்களில்' தர்மலிங்கத்தார் முதன்மையானவர் என்பது அவரது மனைவி, பிள்ளைகளோடு, நெருங்கிய நண்பர்களுக்கு மட்டும் தெரியும்.

“ஐயா வணக்கம்...''

“வணக்கம்... வாருங்கோ... என்ன விஷயம்...'' தர்மலிங்கத்தாரின் வழமையான கரகரத்த குரல்... கிருஷ்ணானந்தன் விறாந்தையில் இருந்தபடி பேச்சை அவதானிக்கின்றார்.

“வன்னியிலை கஷ்டப்டுகிற சனங்களுக்கு நிதி சேகரிக்கிறம்... உங்களைப் போலை வசதியானவை தான் உதவி செய்யவேணும்...''

“முருகா... நான் வசதியானவனா...'' தர்மலிங்கத்தார் நமட்டுச் சிரிப்புச் சிரிக்கின்றார்: தர்மலிங்கத்தாரிடம் ஒரு: பழக்கமுண்டு. நன்மையோ தீமையோ முதலில் முருகனை அழைத்து விடுவார். அத்தோடு அடிக்கடி சாரத்தை உரிந்து 'பணவண்டி' யின் மேல் லாவகமாக உடுத்திக் கொள்வார்.

"ஏன் பாருங்கோ... வன்னியிலை வாழ்றவைக்குத் தானே நிறைய நிவாரணம் கிடைக்குது. பிறகென்ன கஷ்டம்..."

"அதெல்லாம் வெறும் பேச்சு..."

"முருகா... எங்கடை கஷ்டத்தை ஆரிட்டைச் சொல்லுறது..." தர்மலிங்கத்தாரை லட்சாதிபதியென்று நாக்குப் புரளாமல் கூறி விடலாம். ஆனால்... அவரது வாயில் என்றும் பஞ்சப் பேச்சுத்தான்!

விறாந்தையில் இருந்த கிருஷ்ணானந்தன் எழுந்து வந்து வேலிக்கரையிலுள்ள சண்டி மரத்தோடு நின்று தர்மலிங்கத்தார் வீட்டில் நடப்பவைகளை அவதானிக்கின்றார்.

"ஓமோம்... நீங்கள் சொல்றது சரி... எங்களுக்குள்ள சந்தேகங்களையும் உங்களைப் போலை ஆக்களிட்டைத்தான் கேக்கவேணும்... இஞ்சை பாருங்கோ... வன்னியில் வாழ்ற வலிகாமத்துச் சனங்களுக்கு இப்பிடிக் கஷ்டங்கள் வரக் காரணமென்ன? உடுத்த உடுப்புகளோடை ஏன் ஓட வேண்டி வந்தது? சிங்கப்பூர் போல் இருந்த இடத்தை சுடுகாடாக்கினது ஆர்...?

வந்தவர்கள் மௌனமாக நிற்கின்றனர். கிருஷ்ணானந்தன் இன்னமும் வேலிக்கரையிலேயே நிற்கிறார்.

"பத்து வரியத்துக்கு முன்னம்... பொழுதுபட்டு றயிலில்' ஏறினால் விடியக் கொழும்புக்குப் போயிடலாம்... இப்ப... கொழும்புப் பயணத்தை யோசிச்சுப் பாருங்கோ... ஆராலை வந்தது...?...

"ஐயா... நாங்கள் அரசியல் கதைக்க வரவில்லை... வன்னியிலை வாடிற சனங்களுக்கு அரை வயித்துக் கஞ்சிக்கு வழி செய்யுங்கோ எண்டு தான் கேக்க வந்தம்..."

"ஓமோம்... நீங்கள் சொல்றதை நான் ஏற்றுக் கொள்ளுறன்... நான் சொல்றதையும் கொஞ்சம் கேளுங்கோ... நீங்கள் தான் கேக்க வேணும்... இந்த வீட்டைப் பாருங்கோ, என்ரை தாத்தா கட்டின வீடு...

இதிலை என்ரை தகப்பனார் வாழந்து இப்ப நானும் பிள்ளையளும், பேரப்பிள்ளையளும் வாழ்றம்... இந்தக் கிராமத்திலை முதல் நாற்சார் வீடு கட்டினது என்ரை தாத்தாதான்...!

... இந்தக் கிராமத்திலை எங்கடை காலடிபடாத மண் துகழ் இருக்காது... அவ்வளவு உரிமை இந்த மண்ணிலை எங்களுக்கிருக்கு... அப்பிடிப்பட்ட நாங்கள் எல்லாத்தையும் விட்டிட்டு தென்மராட்சிக்கு ஓடினம்... இந்த மண்ணை விட்டு எங்களைக் கலைக்க எவனுக்கு அதிகாரமிருக்கு..." தர்மலிங்கத்தாரின் பேச்சில் கடுமைதொனிக்கின்றது. அவரது முகம் சுருங்கி விட்டது'

வந்தவர்கள் மௌனமாகவே நின்கின்றனர். கிருஷ்ணானந்தன் செவிப்பறையைக் கூர்மையாக்கி, அவதானமாகப் பேச்சுக்களைக் கேட்கின்றார்...!

தர்மலிங்கத்தார் தொடர்கிறார்...

"தம்பியவை... நீங்கள் ஆரெண்டு எனக்குத் தெரியாது... என்ரை உள்ளக்கொதிப்பு... அதைத்தான் சொல்றன்...

...றோட்டுகளெல்லாம் திருத்தப்பட்டு இப்பதான் றோட்டுக்களிலை நடமாடக்கூடியதாய் கிடக்கு...

... பஸ் ஓடுது...

... 'கரண்ட்' வந்திட்டிது...

... ரெலிபோன் வந்திட்டிது...

... இப்பதான் கொஞ்சம் நிம்மதியாய் இருக்கிறம்... இந்த மண்ணிலை வாழ்ந்தால் தான் எங்களுக்கு நிம்மதி... இது எங்கடை பூர்வீக மண்..." தர்மலிங்கத்தார் கோபத்துடனும், வேதனையுடனும் கூறுகின்றார்...!

"ஐயா... நீங்கள் எங்களிட்டை எத்தனையோ கேள்வியள் கேட்டுப் போட்டியள்... எல்லாத்துக்கும், எங்களிட்டைப் பதிலிருக்கு...

அதுக்கு முன்னாலை, நாங்கள் கேக்கிற ஒரேயொரு கேள்விக்குப் பதில் சொல்றீங்களா..." வந்தவர்களில் ஒருவர் மிகவும் நிதானமாகவும், அமைதியாகவும் கேட்கிறார்.

தர்மலிங்கத்தார் கண்களைக் கூசி கேள்வி கேட்டவரைப் பார்க்கிறார்.

ஒரே ஒரு கேள்வி...!...?

கிருஷ்ணானந்தன் அந்தக் கேள்வியைக் கேட்பதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்கிறார்...

"கேளுங்கோ"

வந்தவர் கேள்வியைப் கேட்கின்றார்.

"ஐயா... றோட்டுப் போட்டாச்சு... கரண்ட வந்திட்டிது... ரெலிபோன் வந்திட்டிது... கொம்பியூட்டர் வந்திட்டிது...

...இது உங்கடை பூர்வீக மண்... இந்தக் கிராமத்திலை உங்கடை காலடிபடாத இடமிருக்காது... இப்ப உங்களுக்கு நிம்மதியான வாழ்க்கை... அப்பிடித்தானே...?

ஐயா... இதே மண்ணிலை 'ஐடென்ரிக்காட்' இல்லாமல் உங்களாலை சுதந்திரமாக நடமாட முடியுமா?...!" கிணற்றுக்குள் இருந்து பேசுபவரின் குரல் எதிரொலிப்பது போல் அந்தப் புதியவரின் பேச்சு எதிரொலிக்கின்றது...!

"ஐடென்ரிக் காட் இல்லாமல்... சுதந்திரமாக நடமாட..." அந்தக் கேள்வி கிருஷ்ணானந்தனின் செவிப்பறையில் மோதி... இதயத்துள் அமிழ்கின்றது...!

தர்மலிங்கத்தார் மௌனமாக நிற்கிறார். அவரது சேட்பையுள் 'அல்பம்' போல் பல ஐடென்ரிகாட்டுகள்...

வேலிக்கரையில் நின்ற கிருஷ்ணானந்தன் திரும்பி யோகேஸ்வரியைப் பார்க்கிறார்... அவரது முகத்தில் பல சிந்தனைகளின் பேயாட்டம்! அவரது சிறிய நெற்றியில் வியர்வை பனித்து மினுங்குகின்றது...

...குனிந்து இந்த மண்ணைப் பார்க்கின்றார்... விதம் விதமான ஐடென்ரிக்காட்டுகளின் நிழலுருவங்கள்... அதற்குமப்பால்... புதிய மனிதர்களின் பாதணிகளின் வட்டம் வட்டமான ஆழமான பதிவுகள்...?

தர்மலிங்கத்தார் வீட்டில் இன்னும் மௌனம் கலையவில்லை!

கிருஷ்ணானந்தன் கண்ணிமைக்காமல் இன்னும் இந்த மண்ணையே பார்க்கின்றார்.

...இந்த மண்ணின் முனகல் ஒலி கேட்பது போன்ற பிரமை...!

"யோகேஸ்... அப்பாவுக்குக் கல்லறை கட்டி சேர்த்த காசை எடுத்து நிதி சேகரிக்க வாறவையிட்டைக் குடுத்துவிடும்..." கிருஷ்ணானந்தன் கூறுகிறார். அவரது பேச்சில் வேதனை கொப்பளிக்கின்றது!

"கல்லறை வேண்டாமா" யோகேஸ்வரி அதிர்ந்து போய்விட்டாள்.

"இந்த மண்ணிலை அப்பாவுக்கு ஒரு கல்லறை தேவையில்லை..." கிருஷ்ணானந்தன் நிதானமாகவே கூறுகின்றார்!

தினக்குரல் 23.05.1999

**12**

# நான் கேவலமானவல்ல!

சூரிய அஸ்த்தமனமாகி இருளும் ஒளியும் சங்கமித்து இருள் தனித்துவம் பெற்றுக் கொண்டிருக்கும் மாலை நேரம்

வழமை போல் நான் அந்த மதகில் அமர்ந்து இருக்கின்றேன்.

கள்ளுக் கடை வளைவால் திரும்பி றோட்டுக் கரையால் மிகவும் ஆறுதலாக ஒருத்தி வந்து கொண்டிருக்கின்றாள். பெண் என்பதைத் தவிர வேறு எதையும் என்னால் மட்டுப்படுத்த முடியவில்லை. நான் இருக்கின்ற இடத்தை நோக்கித் தானே வருகின்றாள் வரட்டுமே என்ற எண்ணம்.

திருகோணமலையிலிருந்து புல்மோட்டைக்குச் செல்லும் பிரதான வீதி... கிளித்தட்டு விளையாட்டில் தேர்ச்சியுள்ளவர்களால் தான் இந்த வீதியில் நடக்க முடியும்... ஏனென்றால் அவ்வளவு கேவலமான வீதி

இதை உணர்ந்ததாலோ என்னவே அவளும் றோட்டுக் கரையால் நடந்து கொண்டிருக்கின்றாள்.

கள்ளுக் கடை வளைவிலிருந்து நூறு யார் தள்ளி ஒரு ஆலமரம் சாதாரண மரமல்ல. மிகப் பெரிய மரம். அந்த மரத்தடியோடு

தான் நான் அமர்ந்திருக்கும் மதகு அமைந்திருக்கின்றது. வருவோர் போவோரை அவதானித்து அவர்களைப் பற்றி கணக்கிட்டுக் கொள்வதில் எனக்கு அதிகம் தேர்ச்சி உண்டு. ஏனென்றால் பிற்பகல் மூன்று மணி தொடக்கம் கிட்டத்தட்ட இரவு ஒன்பது மணி வரையில் இந்த இடத்திலேயே இருப்பேன். அது மட்டுமல்ல எனக்கு இப்போது நாற்பத்தைந்து வயது. இவ்வளவு காலமும் பிறரால் குட்டுப்பட்டு வாழ்ந்தவன்... குட்டின் வலியை விட குட்டியவர்களைப் பற்றியே அதிகமாக நான் உணர்ந்திருக்கிறேன்.

அவள் என்னை அண்மித்து விட்டாள். இந்தப் பகுதிக்குப் புதியவள் தான்.

வாழ்க்கையில் ஈடு செய்ய முடியாத இழப்புக்களை அனுபவித்து பொரிந்து போன முகம் மிகவும் பரிதாபத்திற்குரியவள்.

தோழிலே ஒரு சீலைப் பை, கையிலே மரவள்ளிக் கிழங்கு சுற்றியது போல் சீலையால் சுற்றப்பட்ட ஒரு குழந்தை.

கறுத்த உயர்ந்த மெலிந்த தோற்றம், கறுப்பிலும் சாதாரண கறுப்பல்ல காகக்கறுப்பு. எண்ணெய் இன்றி வரண்டு முறுக்கேறிய தலைமயிர்... வெற்றிலைக் காவி படிந்து ஊறிப் போன சிவந்த உதடுகள் ஒரு சட்டை, சீலை அவளது பார்வை நீரில் மிதக்கின்ற ஒலித் தேங்காய் போல் நோக்கமற்ற அலட்சியப் பார்வை...

மொத்தத்தில் வறுமையின் தேக்கங்கள் படிந்த தோற்றம்.

வந்தவள் அந்த ஆலமரத்தடியோடு நின்று அங்குமிங்கும் பார்க்கின்றாள். அவள் என்னிடம் தான் ஏதாவது கேட்பாள் என்பது எனக்குத் தெரியும். அவளாகத் தொடங்கட்டுமே என்று நான் மௌனமாக இருக்கின்றேன்.

"ஐயா!" நான் எதிர்பார்த்தது போல் அவள் என்னை அழைக்கின்றாள். ஆனால் ஐயா என்று அழைத்து விட்டாள். அது தான் எனக்குச் சிரிப்பு. இதுவரை என்னை யாருமே ஐயா என்று

அழைத்தது இல்லை. வெள்ளை வேட்டி, சேட் ஓரளவு துப்பரவாக இருக்கின்றேன். அதைப் பார்த்துத்தான் அவள் ஏமாந்து விட்டாள்.

இந்த மண்ணிலே மிகக் கேவலமானவன் நான் தான். என்னைப் பொறுத்தவரை நான் என்னைப் பற்றி எடுத்துக் கொண்ட முடிவு இதுதான்.

இதயங்கள் மட்டும் வெளியானதாக இருந்தால் இந்த மண்ணில் ஏமாற்றங்கள் இருந்திருக்காது...

"என்ன"

எங்கையாவது கொஞ்சம் சுடுதண்ணி எடுக்கலாமா...?

"ஏன்?"

"இந்தப் புள்ளைக்குப் பருக்க"

அப்பிடி போய் இருந்து பாலைக் குடன்... ஆலமரத்தின் இடது பக்கமாக இருக்கும் கிராமஅபிவிருத்திச் சபைக் கட்டிடத்தை அவளுக்குக் காட்டுகிறேன்.

"இல்லை" கொஞ்சம் சுடுதண்ணி தான் வேணும்... குழந்தையும் அழ ஆரம்பிக்கிறது.

பெற்றவளிடம் பால் இல்லாமல் போகுமா...? பெற்றவள் பிள்ளைக்கு பால் கொடுக்கத் தான் மறுப்பாளா? புது இடம் காரணமாக இருக்கலாம்.

...நீ ஒண்டுக்கும் பயப்பிடாதை... கட்டிடத்துக்குள்ளை போய் இருந்து பாலைக் குடு... நான் கூறியதையே திரும்பவும் கூறுகிறேன். ஆனால் அவள் ஏதோ தயங்குகிறாள்...

வேண்டாம் நீங்க கொஞ்சம் சுடுதண்ணி தந்தியளெண்டால் உதவியாக இருக்கும் சக்கரம் சுற்றுவது போல் அவள் ஒரே இடத்தில் நிற்கின்றாள்.

பிள்ளையும் அழுது கொண்டிருக்கின்றது...

முன்பின் அறிமுகம் இல்லாதவளோடு பால் கொடுக்கிற பிரச்சினைக்காக தர்க்கிக்க முடியுமா? "கோப்பை" வெச்சிருக்கிறியா?

சீலைக்குள் கையை விட்டு ஒரு ரின்பால் பேணியை எடுத்துத் தருகின்றாள். எனது குடிசைக்குள் சென்று சுடுதண்ணீர் எடுத்து வந்து கொடுக்கின்றேன். நான் கொடுத்ததும் எந்தப் பேச்சும் இன்றி அந்தக் கட்டிடத்துக்குள் சென்றமர்ந்து சீலைப் பைக்குள் கையை விட்டு ஒரு கடதாசிச் சரையை எடுத்து விரித்து அதற்குள் இருந்த மாவில் சிறு பகுதியை எடுத்து சுடு தண்ணீரில் கலக்கி குழந்தைக்கு பருக்குகின்றாள்.

நான் ரோட்டுக் கரையில் நின்று சகலதையும் அவதானிக்கின்றேன்.

மரவள்ளி கிழங்கு போல் சுற்றப்பட்டிருந்த குழந்தை இப்போது பிறந்த மேனியாய் அவளது மடியில் கிடக்கின்றது. முகட்டால் தவறி விழுந்து பிறந்த வடு மாறாத எலிக்குஞ்சு போல்... பாவம்

பிள்ளையின் அழுகை ஓய்ந்து போக ஒரு சீலைத் துண்டை நிலத்தில் விரித்துக் கிடத்துகின்றாள். "குழந்தை பிறந்து கனநாளா"... "பத்து நாள்" தலை நிமிர்த்தாமலேயே அவள் பதில் கூறுகின்றாள். பத்து நாள் புண் உடம்புக்காரி என்று கூறுவார்களே பாவம். பாதுகாப்புக்கள், பரிகாரங்கள், வெந்நீர் குளிப்புக்கள்

உடம்பே புண்ணாகி வலிக்கும் போது புண்ணுடம்பின் வலி தெரியுமா?... ஆண்டவனின் பட்டியலில் இடம் பெறாதவர்கள்

ஒரு புள்ளை தானா?

ஓம்

"உன்ரை பேரென்ன?"

"புங்குடி"

"புங்குடியா?"

பூங்கொடி தான் என்ரை பெயர்... புங்குடி எண்டுதான் கூப்பிடுவினம்.

அவளைப் பற்றி ஏதோவெல்லாம் விசாரிக்க நினைத்த நான் பெயரை மட்டும் கேட்டதோடு விசாரணையை முடித்துக் கொள்கிறேன்.

விசாரணையில் ஏற்பட்ட சோர்வு

நான் என்னைப் பற்றி எனக்குள் பெரும் விசாரணை நடத்தி... கண்ட முடிவு...? முடிவே இல்லாத முடிவு...

திருப்பவும் அந்த மதகில் வந்து அமர்கிறேன்.

அந்த ஆலமரத்திற்கு முன்னால் ஒரு சிறிய கட்டிடம் இருக்கிறதே. அது தான் எனது தொழில் கூடம்.

இறைச்சிக்கடை

விடியப்புறம் எழும்புவது இரண்டோ மூன்று மாடுகளைக் கொலை செய்வது இறைச்சியை விற்பது கணக்கு வழக்குக்காட்டி முதலாளியிடம் பணத்தையொப்படைப்பது அதன் பின் எனது கூலி.

சட்டத்தின் அனுமதியோடு பகிரங்கமானக் கொலை செய்கின்ற ஒரு கொலைகாரன் நான்

காலையில் தொழிற் கூடத்தை துப்பரவு செய்து குளித்து புனிதமான ஆடை அணிந்து சாமிப்படத்திற்கு பூ வைத்து சாம்பிராணி போட்டு பொட்டு வைத்துத் தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன... நான்...! காலையில் எழுந்தவுடன் கொலை. தினசரி மூன்று கொலையாவது செய்வேன்... அதன் பின் இரத்தமும், இறைச்சியும்...

என்னை விடக் கேவலமானவர்கள் இருக்க முடியுமா? நான்

செய்கின்ற கொலைகளுக்கும் எனது உணர்வுகளுக்கும் சம்பந்த மில்லா விட்டாலும்... நான் செய்வது கொலை தானே

நான் கேவலமானவன் தான்.

நான் நுவரெலியாவில் பிறந்ததாகவும் மண் சரிவினால் என்னைத் தவிர என் குடும்பத்தினர்கள் அனைவருமே இறந்து போனதாகவும் அதன் பின் என்னை யார் யாரே வளர்த்தார்கள் என்றும் கூறுகிறார்கள். என்னைப் பற்றி மற்றவர்கள் கூறுகின்ற இவ்வளவு வரலாறும் தான் எனக்குத் தெரியும்.

என்னுடைய வரலாறே என்ரை கையிலில்லை. நான் என்னை பற்றி சிறிது சிறிதா உணரத் தொடங்கிய காலத்தில் தம்பலகாமத்தில் ஒரு இறைச்சிக் கடையில் நின்றேன். அதன் பின் மூதூர், கிண்ணியா, கன்னியா இப்படி திருகோணமலை மாவட்டத்தில் நான் போகாத இடமில்லை. நான் செய்யாத வேலையுமில்லை.

இடையில்

நிலாவெளியில் நான் நின்ற காலத்தில்...

பலர் முன்னின்று ஒரு பெண் உருவத்திற்கும் எனக்கும் திருமணம் என்ற ஒரு கேலிக் கூத்தையும் நடத்தி முடித்தனர். கடலிலை தத்தளிக்கிறவன் பாம்பைக் கண்டாலும் கயிறு என்று பிடிப்பானாம் அது போல நானும்...

ஆசைகளை என்னைப் போன்ற சாதாரணமானவர்களால் வெல்ல முடியுமா?...

சில மாதங்களில் அவள் என்னை விட்டு பிரிந்து போய் விட்டாள்... அந்தப் பிரிவைப் பற்றி நீண்ட நேரம் கூறுவதை விட எனது "பெலவீனம்" என்ற கூறி சுருக்கமாகவும் விளக்கமாகவும் முடித்துக் கொள்ளலாம்.

அவள் இப்பொழுதும் இருக்கிறாளா இல்லையா என்ற விபரம்

எனக்குத் தெரியாது... நமது குடும்ப வாழ்க்கை வெறும் மாமிச மணத்தோடு முடிந்து விட்டதால் அந்த வாழ்வு பற்றிய தாக்கமோ நினைவே எனக்கில்லை.

பிள்ளையார் சுழி போடுவதைத் தவிர வேறு எதையும் எழுதவோ வாசிக்கவே எனக்குத் தெரியாது.

ஆனால் நடந்து வந்த பாதையில் என்னையறியாமலேயே எனது இதயத்தோடு ஒட்டிக் கொண்டிருக்கும் அனுபவங்கள் ஏராளம்...

அவைகளை ஆதாரமாகக் கொண்டு தான் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். எனக்கிப்போது நாற்பத்தைந்து வயது... நாற்பத்தைந்து முறை வாய் விட்டுச் சிரித்திருப்பேனா என்பது சந்தேகம்.

இறைச்சிக் கடைக்குப் பின்னால் ஒரு கொட்டில் இதுதான் எனது குடிநிலம்.

"ஐயா!" அவள்தான் புங்குடி, "இன்டைக்கு இரவு அந்தக் கட்டிடத்தில் தங்கலாமா?" இந்தக் கட்டிடம் இப்பகுதிக்குரிய சனசமூக நிலையம். இப்பகுதிக்குரிய மக்களுக்கென அரசாங்கத்தினால் கட்டிக் கொடுக்கப்பட்டது. ஒரு அறையும் ஒரு மண்டபமும்

திறப்பு விழாவின் பின் இந்தக் கட்டிடத்துள் தகுதியான மனிதர்கள் எவருமே போய் இருக்க மாட்டார்கள் என்றே நினைக்கின்றேன்... அரசியல் தொடக்கம் பல அந்தரங்க விஷயங்கள் படங்களோடு அப்பட்டமாக எழுதப்பட்ட சுவர்கள், கதவுகள், ஜன்னல்கள் இருந்த இடங்கள் மட்டும் உண்டு. பல ஓடுகள் இல்லை. வௌவால் சீவிப்பதற்கான சகல சுவாத்தியங்களும் நிறைந்த இடம்.

இதற்கு இவள் தனித்து... குழந்தைப் புள்ளையையும் வெச்சுக் கொண்டு உதுக்குள்ளே எப்பிடி தங்கப் போறாய்

இந்த நேரத்திலை நான் எங்கை போறது கெஞ்சுவது போல்

என்னிடம் கேட்கின்றாள். புங்குடி நீ ஏன் என்னட்டை கெஞ்சிறாய் உன்னைப் போல்தான் நானும் இந்த இறைச்சிக் கடையில் சம்பளத்திற்கு வேலை செய்கிறன்... அந்தக் கொட்டில் தான் என்ரை வீடு நானும் தனிக்கட்டை என்னைப் பற்றி அறிமுகம் அவளுக்கு ஏதோ ஒரு திருப்தியைக் கொடுத்திருக்க வேண்டும் துணிவோடு என்னைப் பார்க்கிறாள்.

உன்ரை சொந்த ஊரெது புங்குடி?

எங்களுக்கெங்காலை சொந்த ஊர்!... கந்தளாயிலை கூடின காலம் இருந்திருக்கிறம்

புருஷன் எங்கை...? நான் இப்படிக் கேட்டதும் கண்ணிமைக்காமல் என்னைப் பார்க்கிறாள்.

அவளது பார்வையில் சோகம் நிறைந்திருக்கிறது.

அவர் செத்துப் போனார். செத்து எட்டு மாதம்... அவர் சாகையுக்கை நான் இரண்டு மாதம் சுகமில்லாமல் இருந்தன். தன்ரை புள்ளையை கூடப் பார்க்காமல் போட்டார்... தன் கண்களில் பனித்த கண்ணீரை துடைக்கின்றாள். அந்தக் கை வண்டு வெட்டிய வடலிக் குருத்து போல் பெருவிரலோடு சேர்ந்து மூன்று விரல்கள் இல்லை.

புங்குடி உந்தக் கை! பொறுக்க முடியாமல் நான் கேட்டு விட்டேன். நான் கேட்டதும் மிகுதியாக இருந்த இரண்டு விரல்களையும் திருப்பித் திருப்பி அவள் பார்க்கிறாள். கண்களில் பனித்து முட்டிய கண்ணீர் துளிகளால் அந்தக் கையில் விழுகின்றன.

அதெல்லாம் பெரிய கதை!

அவள் மொட்டையாக கூறி முடித்து விடுகிறாள்.

குழந்தையின் முனகல் ஒலி நமது பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது. அவள் அந்த இடத்தை விட்டுப் போகின்றாள்.

வழமை போல் நான் தனியாக இருக்கிறேன். எனது கொட்டிலுக்கு முன்னால் இரண்டு மாடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

நாளைய உதயத்தோடு அவற்றின் வாழ்க்கை அஸ்தமனமாகப் போகின்றது. எத்தனையோ மக்களின் நாவுக்குச் சுவையாகி உடலுக்குப் பசளையாகப் போகின்றன...! மரணத்தைப் பற்றி சிந்திக்காத ஜீவன்கள்

அரை மணி நேரம் சென்றிருக்கும் அந்த குழந்தையின் அழுகை

மண்ணைத் தழுவிய மனித ஜீவன்களின் முதற் செயல் அழுகை. அதன் பின் சிரிப்பு

அழுகை, சிரிப்பு மனித வாழ்வின் உள்ளடக்கம்.

மனித வாழ்க்கைத் தத்துவத்தின் பாலர் வகுப்பு

உலகத்தை மனிதன் புரிய முன்னரே இந்த உலகம் அவனது எதிர்கால வாழ்விற்குப் பச்சைக் கொடி காட்டுகின்றதா?

குழந்தையின் அழுகை...

நான் எழுந்து அந்தக் கட்டத்தை நோக்கிச் செல்கின்றேன். பக்கத்திலுள்ள தொலைபேசி இணைப்பகத்தில் பொருத்தப் பட்டிருக்கும் மின்சார பல்பின் பிரகாசத்தில் புங்குடியையும் பிள்ளை யையும் தெளிவாகப் பார்க்கின்றேன்.

நான் முன் கொடுத்த தண்ணீரில் மாக்கரைத்துக் கொண்டிருக்கின்றாள்.

அவள் இப்போதும் தாய்ப்பால் கொடுக்கவில்லை. இப்பிரச்சனை என் மனதை அரித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் நான் அவளிடம் கேட்கவில்லை.

"தண்ணீர் ஆறிப் போயிருக்குமே..."

"ஆறித்தான் போச்சு"

"குழந்தைக்கு ஏதாவது சுகமில்லையா?"

"இல்லை"

"அப்ப ஏன் நெடுகலும் அழுகிறது...?"

"பசி"

"ஏன் தாய்ப்பால் இல்லையா?"

அவள் எதுவுமே பேசவில்லை. முதல் முறை நான் கேட்ட போதும் அவள் இப்படித் தான் இருந்தாள்.

நான் போறன் கவனமாய்ப் படு நான் கூறி விட்டு எனது கொட்டிலை நோக்கிச் செல்கிறேன்.

கொட்டில் வாசலில் மரண தண்டனை வழங்கப்பட்ட அந்த இரண்டு மாடுகள்...

நான் படுக்கிறேன்...

இரவு நகர்ந்தது நடுச்சாமம் அமைதி.

சீமெந்து நிலத்தில் மேசை இழுபடுவது போல் அந்தப் பிள்ளையின் கீச்சுக் குரல்... உலகம் புரியாத அந்த சீவனின் பட்டினிக் குரல்

சில நிமிடங்கள் கிடக்கிறேன். அந்தக் குழந்தையின் பட்டினிக் குரல் ஓய்வதாக இல்லை. எழும்பி அந்தக் கட்டிடத்தை நோக்கி வருகின்றேன். புங்குடி குழந்தை மடியில் வைத்துக் கொண்டிருக்கின்றாள்.

"புள்ளைக்குப் பசியா?"

"ஓம்"

"பால் குடுத்தியா?"

"தண்ணி இல்லை"

"தாய்ப் பாலைக் குடன்"

அவள் எதுவும் பேசவில்லை

பிறந்த வடு மாறாத பச்சை மண்ணின் பட்டினிக் குரல்... எனது அனுதாப உணர்வில் கோபம் படர்கிறது.

"புங்குடி பாலைக் குடன்... சிரிது உரமாகவே கூறுகிறேன். அவள் பேசவில்லை.

கோபத்தின் சாயல் தடித்து கருணை உணர்வை முற்றாக மறைக்கின்றது.

"புங்குடி இந்தப் புள்ளையை கொல்லப் போறியா? கோல்லுறதெண்டால் அதுகின்ரை கழுத்தை பிடிச்சுத் திருகிக் கொல்லன்... உப்பிடிப் பட்டினி போட்டு கொல்லாதை."

பட்டினிக் குரலில் மயங்கிய ஒலி...

"புள்ளையை ஒழுங்காப் பெற வேணும் அப்பத்தான் ஒழுங்கா வளர்க்கலாம். நாயள்..."

"ஐயா!"

"தான் பொத்த பிள்ளைக்கு பால் கொடுக்கேலாது... மிருகப் பிறப்பு"

"ஐயா!"

எனது கோபம் உச்ச நிலையை அடைந்து கண்டபடி பேசுகிறேன்.

"ஐயா!" அந்தக் கட்டிடம் அதிரும் படி கத்தியவள் மார்போடு அணைத்து வைத்திருந்த குழந்தையை நிலத்தில் கிடத்தி விட்டு எழுந்து என்னை நோக்கி வருகிறாள். வந்தவள்...

தான் போட்டிருந்த சட்டையின் மார்புப் புறத்தை இழுத்து கிழிக்கின்றாள்.

மார்புத் தசைகள்

பாதியாக வெட்டப்பட்டு கயர் ஊறி கறுத்துப் போன வட்டமான முகப்பை உடைய நுங்குக் குரும்பை போல... மார்புத் தசைகள் வெட்டப்பட்டு அதன் தளும்புகள் மட்டும் தெரிகின்றன.

அந்தப் பாசச் சுரப்பிகள்

"நான் நாயா?"

"....................."

"நான் மிருகமா?"

...............

நான் ...?

நான் கூறியவைகளை திருப்பி என்னிடம் கேட்கிறாள்?

அந்தக் காட்சியைப் பார்த்ததில் என் கண்கள் செத்து... வெறும் சதைக் குவியலாய் நான் நிற்கிறேன்.

"மரணித்து விட்ட மனித தர்மத்தின் சமாதியின் முன் அடிக்கடி நடாத்தப்படுகின்ற வேள்விகள்... அந்த வேள்விக்குப் பலியானவர்கள் நாங்கள்..."

தனது மௌன மொழியால் புங்குடி இதைத் தான் கூறுகிறாளா?

துயரம் கலந்த மௌன நிலையில் உணர்வுகள் கூறுகின்ற ஓசையற்ற வார்த்தைகளில் பொய்மை இருப்பதில்லை!

நடந்து முடிந்த "வேள்விகள்" என் மனதில் சங்கிலித் தொடர்பாய் நீள்கிறது.

இந்த வேள்விக்கு முடிவே இல்லையா...?

எனக்குள் நானே கேட்கிறேன். "புங்குடி... இனிமேல் இறைச்சிக் கடையில் ஆடு மாடுகளைத் தான் வெட்டி விக்க வேணுமெண்டதில்லை மனிசனை வெட்டி வைச்சால்கூட விற்பனை ஆகும்" கூறி விட்டு தாய்ப் பாலின் மணத்தைக் கூட அனுபவிக்கக் கொடுத்து வைக்காத அந்த துர்ப்பாக்கிய சீவனுக்கு சுடுதண்ணீர் எடுப்பதற்கு எனது கொட்டிலை நோக்கி நடக்கிறேன்.

கொட்டில் வாசலில் நாளை காலை இறக்கப் போகின்ற இரண்டு மாடுகள் நிற்கின்றன...? அந்த இரண்டு மிருக முகங்களிலும் எத்தனையே மனித முகங்கள் தெரிகின்றன...! இந்த மாடுகளுக்கும், புங்குடி போன்ற மனிதப் பிறவிகளுக்கும் என்ன வித்தியாசம்?

மாடுகள் இதுவரை தன்னிடத்தைக் கொண்றதில்லை...

ஆனால் மனிதன்?

தர்மத்தின் எல்லையை மீறாத மாடுகள்

தர்மத்தின் எல்லையை மீறிய மனிதர்கள்...

பகுத்தறிவின் ஒரு முனை விண்வெளியில்...

பகுத்தறிவின் மறு முனை இரத்தவெறியில்...

தினசரி கொலையோடு தொழிலை ஆரம்பிக்கின்ற நான்தான் இந்த மண்ணில் கேவலமானவனா?

என்னை விட கேவலமானவர்களும் இருக்கின்றார்கள்!...?

வீரகேசரி 17.02.1985

## கே. ஆர். டேவிட்டின் இலக்கிய ஆக்கங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வரலாறு அவளை தோற்றுவிட்டது<br>(வீரகேசரிப் பிரசுரம்) | நாவல் | 1976 |
| 2. | ஆறுகள் பின்நோக்கிப் பாய்வதில்லை<br>(மீரா வெளியீடு) | குறுநாவல் | 1987 |
| 3. | பாலைவனப் பயணிகள்<br>(மீரா வெளியீடு) | குறுநாவல் | 1989 |
| 4. | வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை<br>(மீரா வெளியீடு) | குறுநாவல் | 1989 |
| 5. | ஒரு பிடி மண்<br>(மீரா வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 1994 |
| 6. | பாடுகள்<br>(கு.வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |
| 7. | படகுகள் கரைசேருமா<br>(கு.வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |
| 8. | மண்ணின் முனகல்<br>(கு.வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |
| 9. | சருகுகள்<br>(கு.வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |
| 10. | காலத்தின் மௌனம்<br>(கு.வி. அச்சக வெளியீடு) | சிறுகதைத்தொகுதி | 2012 |

76

37

39

39

94

012

012

012

012


012

"அடிமட்ட மக்களின் வாழ்வியலில் உள்ள துயரங்கள் இவரது மனிதத்தைக் குத்த அந்தத் துடிப்புகளின் படிமங்களாக இவரது கலைப்படைப்புகள் உருவம் பெறுகின்றன. இளம் வயதில் முதிர்ந்த அனுபவங்களையும், ஆளுமைகளையும் பெற்றிருக்கும் எழுத்தாளர் கே. ஆர். டேவிட் அவர்கள் படைப்புத் துறையில் நிறையச் சாதிப்பாரென நம்புகின்றேன்".

**- பேராசிரியர் க.கைலாசபதி - (1978)**

நான்கு தசாப்தங்களுக்கு மேலாகத் தொடர்ச்சியாகத் தமிழ் இலக்கியப் பண்பாட்டுச் சூழலில் ஒரு நம்பிக்கையுடன் பல தளங்களில் இயங்கிவருபவர் கே.ஆர்.டேவிட் அவர்கள். அறுபதுகளை ஒட்டிய காலத்திலேயே கே.ஆர்.டேவிட் அவர்களும் சிறுகதை என்கின்ற இலக்கிய வடிவத்தினூடாக இலக்கியப் பிரவேசம் செய்கின்றார். ஒரு சமூகத்தின் அரசியல்தான் அதன் இலக்கியத்தை உருவாக்குகிறது என்ற உண்மையைப் புறக்கணிக்க முடியாதவராகவே டேவிட் அவர்கள் தோற்றம் கொள்கின்றார். இன்றைய வாழ்க்கை நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தொடர்ச்சியாகவும், சோர்வின்றியும் எழுத்துப் பணியாற்றும் கே.ஆர்.டேவிட் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

**தெளிவத்தை ஜோசப்**




**கு. வி. அச்சக வெளியீடு**

**கு. வி. அச்சகம்**
58, கிறீன் லேன், கொழும்பு - 13.
தொலைபேசி: 011-2330723,
011-4877984